28°c
32 c
26 c
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

வலி. பக்கம் 24
24 MAY 2014

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= | சுடர்: 29 | கதிர்: 179 | வள்ளுவர் ஆண்டு: 2045 | வைகாசி 10, சனி 24.05.2014

## மஹிந்தவுக்கு மோடி விருந்து

கொழும்பு, மே 24
எதிர்வரும் 26ஆம் திகதி இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்கவுள்ள நரேந்திர மோடி, விழாவில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட வெளிநாட்டுத் தலைவர்களுக்கு விருந்தளிக்கவுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
மோடியின் பதவியேற்பு விழாவிற்கு 8 நாடுகளின் தலைவர்களுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது. பாகிஸ்தானை தவிர மற்ற 7 நாடுகளும் மோடி பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்பதை உறுதி செய்துவிட்டன. 26ஆம் திகதி பதவியேற்பு விழா முடிந்தவுடன் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு அன்றிரவு விருந்து அளிக்க மோடி முடிவு செய்துள்ளார்.

— 21ஆம் பக்கம் பார்க்க

### "மோடியின் பதவியேற்பில் பங்கேற்கும் என் குழுவோடு இணையுங்கள்"

# மஹிந்த விடுத்த அழைப்பு முதலமைச்சரால் நிராகரிப்பு

## சேர்ந்து வந்தால் கொழும்புக்கும் வடக்குக்கும் இடையே ஐக்கியம் என்று அர்த்தப்பட்டுவிடும் எனவும் விளக்கம்

யாழ்ப்பாணம், மே 24
திங்கட்கிழமை நடக்கவுள்ள இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் தன்னுடன் பங்கேற்குமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை நிராகரித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். அப்படித் தான் கலந்து கொள்வது, கொழும்பு அரசுக்கும் வடக்கு மாகாணத்திற்கும் இடையில் மிக வலுவான ஐக்கியம் இருப்பதாக அது எடுத்துக்காட்டக்கூடும் என்ற காரணத்தால் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பைத் தான் நிராகரிக்கிறார் என்று அவர் கூறினார்.
சமூக வலைத்தளமான ருவிற்றரில் நேற்றுக் காலை பதிவிட்ட ஜனாதிபதி மஹிந்த, மோடியின் அழைப்பை ஏற்று பதவியேற்பு விழாவில் பங்கெடுக்க உள்ளார் என்று குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர் பகல் 11 மணிக்கு, இந்தியப் பிரதமரின் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளும் இலங்கைக் குழுவில் இணைந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஜனாதிபதி ருவிற்றரில் அழைப்பு விடுத்தார்.
இதையடுத்துப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மஹிந்தவின் அழைப்பை முதலமைச்சர் ஏற்பாரா? என்று அறியும் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது. முதலமைச்சரின் கருத்தை அறிவதற்குப் பல தரப்பினரும் முயற்சிகளில் இறங்கினர். எனினும் மஹிந்த ராஜபக்ஷ ருவிற்றரில் பதிவிடுவதற்கு முன்னதாக அவரது அழைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மூலமாக முதலமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் இருந்து நேற்றுக் காலையில் உத்தியோகபூர்வ அழைப்புத் தொலைநகல் முதலமைச்சருக்குக் கிடைத்தது.
அதற்கு முதலமைச்சர் அனுப்பிய பதிலில் தெரிவித்துள்ளதாவது:
இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கப் போகும் நிகழ்வில் கலந்துகொள்ளத் தாமதமாகியேனும் இலங்கை

21ஆம் பக்கம் பார்க்க



மோடியை மஹிந்தவுடன் ஒப்பிடுவதா?
பக்கம் 12



தமிழகத்தின் எதிர்ப்பை நிராகரித்தது பா.ஜ.க.
பக்கம் 14

## பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு

### பெரும் வேலைத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 24
இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு யாழ்ப்பாணத்து இளைஞர் - யுவதிகளை இணைப்பதற்குரிய மாபெரும் வேலைத் திட்டத்தை இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர்.
இராணுவத்தொண்டர்படைக்கு ஆள்களைத் திரட்டித் தருமாறு ஒவ்வொரு பிரதேச செயலாளர்களையும் கோரியுள்ள இராணுவத்தினர், கிராமசேவையாளர்கள் ஊடாகக் கிராமம் கிராமமாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.
இராணுவத்தினரின் தொண்டர் படையணிக்கு ஆள்களை இணைத்துக் கொடுப்பது தொடர்பிலான கலந்துரையாடலை, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இராணுவத்தினருக்கு நேற்று ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்.
யாழ்.மாவட்டச் செயலகத்தில் இரு மணி நேரம் இடம்பெற்ற கலந்துரையாடலில், மேஜர் ஜெனரல் ரட்ணசிங்கம் கலந்து கொண்டு பிரதேச செயலாளர்களுக்கு இது குறித்து விளக்

21ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா முதலமைச்சரை அழைத்திருக்க வேண்டும்

### கூறுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு, மே 24
வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனை, எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ள விசேட ஒரு விருந்தினராக இந்திய அரசே நேரடியாக அழைத்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.
இது தொடர்பில் மனோ கணேசன் தெரிவித்திருப்பதாவது,
"வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனை விசேட ஒரு விருந்தினராக இந்திய அரசைக் கொண்டு நேரடியாக அழைக்க வைக்கும் முயற்சியில் தமிழக தலைவர்கள் இந்தக் கடைசித் தருணத்திலாவது ஈடுபட வேண்டும்.
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குழுவில் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கலந்துகொள்ள முதல்வர் விக்னேஸ்வரன்

21ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, மே 24
அடுத்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரச தலைமை தீர்மானித்துள்ளது என்று நம்பகமாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. அண்மையில் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகின்றது.
அதற்குரிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் நம்பகமாகத் தெரியவருகின்றது. அத்துடன் புதிய வாக்களர் பதிவு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல்களில் அரசு வெற்றியீட்டியி

21ஆம் பக்கம் பார்க்க

## காணி சுவீகரிப்பு, மீனவர் பிரச்சினை எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்

### ஜூலையில் நடத்துவதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம்.மே 24
காணி சுவீகரிப்பு, மீனவர்கள் பிரச்சினை ஆகியவற்றுக்கு எதிராக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் மீண்டும் மாபெரும் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.
இந்த அமைப்பினால் கடந்த பெப்ரவரி மாதம் போராட்டம் நடத்தப்பட்டது. எனினும் பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாகப் போராட்டத்தில் மக்கள் கலந்து கொள்ளவில்லை.
இந்தநிலையில் மீண்டும் அரசியல் கட்சிகள்,அரச சார்பற்ற நிறுவனாங்கள், பொதுமக்களை ஒன்று திரட்டி எதிர்வரும் ஜூலை மாதம் யாழ்.நகரில் மாபெரும் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான கலந்துரை

21ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு பரிந்துரைக்க வேண்டும்

### சர்தேச மன்னிப்புச் சபை மோடியிடம் கோரிக்கை விடுக்கின்றது

கொழும்பு, மே. 24
இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள சர்வதேச விசாரணைக்கு இலங்கையை ஒத்துழைக்குமாறு, புதிய பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடி கோர வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.
நரேந்திர மோடி பிரதமராகப் பத வியேற்கும் விழாவில் பங்கு பற்ற, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லி செல்லும்

21ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ரி.ஐ.டியால் இளைஞர் கைது

வவுனியா.மே 24
வவுனியாவில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
வவுனியா தவசிக்குளம் பகுதியில் வசித்து வந்த இளைஞரான முத்துலிங்கம் கஜவர்

— 21ஆம் பக்கம் பார்க்க

## போர்க் காலங்களை விடவும் வடக்கில் தற்போது பிரச்சினை

யாழ்ப்பாணம், மே 24
வடக்கில் தற்போது போர்க்காலத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகளை விடப் பயங்கரமான சூழ்நிலையிலேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பயங்கரவாதச் சட்டத்தை இராணுவம் மூலமாக அரசு மேற்கொண்டு வருகிறது"- இவ்வாறு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தெரிவித்துள்ளார்.
வடக்கில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு, காணாமல் போதல், மீனவர் பிரச்சினை, மீன் குடி

21ஆம் பக்கம் பார்க்க

## மர்மப்பொருள் வெடித்ததில் இளைஞன் காயம்

தென்மராட்சி.மே 24
எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் வீடு கட்டும் பணியில் ஈடுபட்ட மேசன் தொழிலாளி மர்மப்பொருள் வெடித்ததில் இடது காலின் பாதத்தை இழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை எழுதுமட்டுவாழ்

— 21ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவிலிருந்து திருப்பிய இலங்கைக் குடும்பம் கைது

### தலை மன்னார் கடற்பரப்பில்

மன்னார், மே 24
இந்தியாவில் இருந்து படகு மூலம் மன்னாருக்கு வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் தலை மன்னார் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டள்ளனர்.
அகதிகளாகப் படகு மூலம் இந்தியா சென்ற இவர்கள் மீண்டும் சட்டவிரோதமான முறை

21ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண சபையின் பணிகளில் குறுக்கீடு செய்கின்றார் ஆளுநர்

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றஞ்சாட்டுகின்றார்

கொழும்பு, மே 24

வடக்கு மாகாண சபையின் நிர்வாகப் பணிகளில் ஆளுநர் தேவையின்றி தலையீடு செய்கின்றார். வடக்கு மாகாண சபை சுயாதீனமான முறையில் இயங்குவதற்கும் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல.

நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகளைத் தடையின்றி மேற்கொள்ள அனுமதிக்கக்க வேண்டும். இல்லாதுவிடில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். நாடு என்றால் தெளிவான ஒரு கொள்கையுடன் ஆட்சி செய்ய வேண்டும். நமது நாட்டில் அரசுக்கு ஸ்திரமான கொள்கை என்று ஒன்றும் கிடையாது. மக்கள் பற்றிய எந்தக் கரிசனையும் இன்றி அரசு இயங்கி வருகின்றது.

இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. கடன் மற்றும் வட்டி என்பவற்றைச் செலுத்தவே அரசின் வருமானம் போதவில்லை. தெளிவான சிந்தனையுடன் பொருளாதாரக் கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டியது இன்றியமையாத தேவையாக அமைந்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. எவரும் இலங்கையில் முதலீடு செய்ய விரும்புவதில்லை."- என்று தெரிவித்துள்ளார். (ந)

## அரசை ஆட்டுவிப்பேன்

### பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, மே 24

எதிர்வரும் தேர்தல்களின் பின்னர், நாட்டின் மிகவும் பலமான கட்சி எமது ஜனநாயகக் கட்சி தான் என்பதை நிரூபித்துக் காட்டுவேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவ தளபதியும் ஜ.க.வின் தலைவருமான சரத் பொன்சேகா.

பிங்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் தேர்தல்களுக்கான பரப்புரை நடவடிக்கைகளை எதிர்வரும் நாள்களில் ஆரம்பிக்கவுள்ளோம். அடுத்த தேர்தலின் போது, அரசின் 75 ஆயிரம் வாக்குகளைப் பறிப்போம். இந்த வாக்குகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கானவை.

இந்த நிலைமை நீடித்து, ஒரு வருடத்தின் பின்னர் நடைபெறும் தேர்தலின் போது அரசுக்குச் சேர வேண்டிய 5 இலட்சம் வாக்குகளையும் நாமே பெற்றுக்கொள்வோம். இந்த நிலைமை ஏற்பட்ட பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் திரும்பவும் எழவே முடியாது போகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றவர் பண்டாரநாயக்க. ஆனால், அதே கட்சியை அழித்தவர் ராஜபக்ஷ. இது குறித்து நாம் கவலையடைகின்றோம்"- என்று தெரிவித்துள்ளார். (ந)



பௌத்த நாடுகளின் ஒத்துழைப்புடன் யுனஸ்கோ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த வெசாக் உற்சவம் பிரான்ஸின தலைநகரான பாரிசில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் பாரியாரான மூதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவும் ஜனாதிபதியின் செயலாளரான லலித் வீரதுங்கவும் பிரதம அதிதிகளாக கலந்துக் கொண்டனர். இந்த வெசக் உற்சவத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சர்வதேச பௌத்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆலோசகர் கலாநிதி போதாகம சந்திம தேரரும் கலந்துக் கொண்டார்.

# அரசின் உள்ளகப் பிரச்சினைகள் தற்போதே வெளியே வருகின்றன

## விக்ரமபாகு கருணாரத்ன கூறுகின்றார்

கொழும்பு, மே 24

அரசின் உள்ளகப் பிரச்சினைகள் தற்போது களத்திற்கு வந்துள்ளன என்று தெரிவித்துள்ளார் நவ சமசமாஜக் கட்சியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



"அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் பட்டளி சம்பிக்க ரணவக்க ஆகிய அமைச்சர்கள் அரசைப் பகீரங்கமாகவே விமர்சித்து வருகின்றனர்.

விமல் வீரவன்ஸ, சம்பிக்க, அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் [illegible]லுவாவே சோபித்த தேரருடன் பகிரங்கமாகவும், ரகசியமாகவும் பேச்சு நடத்தி வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை எவ்வாறு நியமிப்பது என்பதே இவர்களின் குறிக்கோளாக உள்ளது.

ஆனால், அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் பேச்சு நடத்தியே பொது வேட்பாளரை தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அதற்கு தகுதி வாய்ந்தவராக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே இருக்கின்றார்."- என்று தெரிவித்துள்ளார். (ந)

# புத்தர் 'டாட்டூ' விவகாரம்; பாதிக்கப்பட்டவர் வழக்கு

## ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி

கொழும்பு, மே 23

புத்தரின் படத்தை வலது கையில் பச்சை குத்தியிருந்தமைக்காக நாடு கடத்தப்பட்ட, நயோமி மிச்செல் கொல்மென் (வயது 37) என்ற பிரித்தானிய தாதிய உத்தியோகத்தர், குறித்த நடவடிக்கைக்கு எதிராக ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

புத்த பகவானின் படத்தைப் பச்சை குத்தியிருந்தார் என்ற குற்றத்துக்காக நாட்டுக்குள் நடமாட அனுமதிக்கப்படாமல், கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு பின்னர் நாடு கடத்தப்பட்டார்.

இதுகுறித்து நயோமி சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், "நான் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவள். புத்த பகவான் மீது எனக்குள்ள பக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் தாமரை மலரில் புத்தர் அமர்ந்திருப்பது போன்ற சித்திரத்தைத் நான் எனது வலது கையின் தோள்பட்டையில் பச்சை குத்தியிருக்கின்றேன்.

இது போன்று புத்தரின் பக்தர்கள் பலர் தங்களின் தேகத்தில் புத்தரின் சித்திரங்களைப் பொறித்திருக்கின்றமை எனக்கு நன்கு தெரியும். நான் தாய்லாந்து, கம்போடியா, இந்தியா ஆகிய நாடுகளில் தியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட புனிதர்.

2009ஆம் ஆண்டில் இரு தடவைகள் இந்தச் சித்திரம் தோள்பட்டையில் இருக்கத்தக்கதாக, அவை தெரியும் படியாக வெளிப்படுத்தியபடியே. இலங்கைக்குத் சென்றிந்தேன்.

அப்போது எந்தக் கட்டுப்பாடுகளோ, மட்டுப்படுத்தல்களோ இன்றி சுதந்திரமாக நடமாடி, சுற்றுலாவை முடித்துக் கொண்டு நாடு திரும்பினேன்""- என்று தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கைதும், தடுத்து வைப்பும், நாடு கடத்தலும் சட்ட விரோதமானவை என உத்தர விடுவதுடன், அதனால் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் போன்றவற்றுக்கு நட்டஈடாக ஒரு கோடி ரூபா பெற்றுத் தரும்படியும் நீதிமன்றத்தைக் கோரி அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர், பொலிஸ்மா அதிபர், பொலிஸ் சார்ஜண்ட் உபசேனா, இன்ஸ்பெக்டர் சுரவீர, நீர்கொழும்பு சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ந)

# பல்கலைக்கழகங்களில் புதிய பாடத்திட்டங்கள்

கொழும்பு, மே 24

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் 2 புதிய பாடத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்தில் கணனி வன்பொருள் பொறியியல் பாடத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஷெணிக்கா ஹிரிம்புரேகம தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணம் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களில் மொழிபெயர்ப்புக் கல்வி பட்டப்படிப்பிற்கான பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.



2013 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இந்த பாடத்திட்டங்களை கற்பதற்கான வாய்ப்புள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் ஷெனிக்கா ஹிரிம்புரேகம மேலும் தெரிவித்தார். (ந)

# பதவியேற்புக்கு அழைப்பு; மோடிக்கு மஹிந்த நன்றி

கொழும்பு, மே 24

பதவியேற்புநிகழ்வுக்கு அழைப்பு விடுத்தமைக்காக, இந்தியப் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தனது டுவிற்றர் பக்கத்திலேயே நன்றி கூறிப் பதிவிட்டுள்ளார் ஜனாதிபதி.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அதையடுத்து அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி எதிர்வரும் 26 ஆம் திகதி பிரதமராகப் பதவியேற்கவுள்ளனர். அந்த நிகழ்வுக்கு இலங்கை ஜனாதிபதிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே மோடியின் அழைப்புக்கு நன்றி தெரிவித்துள்ளார் மஹிந்த ராஜபக்ஷ. நேற்றுமுன்தினமிரவு சீனாவில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதி, "உங்கள் அழைப்புக்கு நன்றி. உங்கள் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதை எதிர்நோக்கியுள்ளேன்" என்று தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, பதவியேற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழகத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, மற்றும் பலதரப்பட்ட அரசியல் கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. போராட்டங்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளன. (ந)

# வலி. கிழக்கு தவிசாளர் விவகாரம்; வழக்கால் தடைப்பட்டுள்ளதாம்

யாழ்ப்பாணம், மே 24

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு புதிய தவிசாளரை நியமித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தேர்தல்கள் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும், நீதிமன்ற வழக்குக் காரணமாக அந்த நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தவிசாளராக இருந்த அ.உதய குமார் பதவி விலகியதாக உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்திருந்தார். இது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்துக்கு விடயம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

தனது பதவி நீக்கம் முறையற்றது என்று குறிப்பிட்டு அ.உதயகுமார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அதில் தேர்தல்கள் திணைக்களத்தையோ, உதவித் தேர்தல்கள் ஆணையாளரையோ பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில் தேர்தல்கள் திணைக்களம், வெற்றிடமாகியுள்ள வலி.கிழக்குத் தவிசாளர் பதவிக்கு தேர்தலில் போட்டியிட்டு விருப்பு வாக்குப் பெற்ற ஒருவரின் பெயரை பிரேரிக்குமாறும், அதனை ஒரு மாத காலத்தினுள் அனுப்பி வைக்குமாறும் கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் செயலாளருக்கு அறிவுறுத்தியிருந்தது.

இதற்கமைய கட்சி செயலாளரினால், வலி.கிழக்குப் பிரதே சபையின் தவிசாளராக, தற்போதைய உப தவிசாளரின் பெயர் பிரேரிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில், முன்னாள் தவிசாளரது சட்டத்தரணியினால், இந்த விடயம் நீதிமன்றத்தில் இருப்பதால் புதிய தவிசாளரை நியமிக்க வேண்டாம் என்று தெரிவித்து தேர்தல்கள் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இதற்கமைய யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்திற்கு, தேர்தல்கள் ஆணையாளரினால் இந்த விடயத்தை நடைமுறைப்படுத்துவதை தாமதப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

# பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற மலேரியா விழிப்புணர்வு நடைபவனி


வடமராட்சி, மே 24

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு சர்வோதயத்தின் அனுசரணையுடன் யாழ். பிராந்திய மலேரியாத்தடை இயக்கம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய மலேரியாத் தடுப்பு விழிப்புணர்வு நடைபவனியில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு மந்திகையில் உள்ள பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து ஆரம்பமான நடை பவனியை வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் எஸ்.சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் வடமாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், விவசாய, கூற்றொழில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் உறுப்பினர்களான வே.சிவயோகன், ச.சுகிர்தன், அஸ்மின், பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் நடைபவனியில் பெரிய பதாகை ஒன்றைத் தாங்கியவாறு நடந்து சென்றனர். யாழ்ப்பாண மாவட்டம் உட்பட வடக்கின் ஏனைய மாவட்டங்களில் உள்ள மலேரியாத் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

மலேரியாவை முற்றாக ஒழிப்போம் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சர்வோதய இயக்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ரீசேட்டுக்களை ஆண்கள் பெண்கள் மாணவர்கள் அணிந்தவாறு மும்மொழிகளிலான சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் தாங்கியவண்ணம் நடை பவனியில் கலந்துகொண்டனர்.

அவர்கள் தாங்கியிருந்த சுலோக அட்டைகளில்;



மந்திகையில் உள்ள பருத்தித் துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து ஆரம்பமான நடைப வனி

நீர் தேங்கும் குழிகளில் நுளம்புகள் பெருகாமல் குழிகளை மூடுவோம், நீர் தேங்கும் இடங்களில் குடம்பிகளை உண்ணும் மீன்களை வளர்த்துக் குடம்பிகளை ஒழிப்போம், இலங்கையில் மலேரியாவை ஒழித்துக்கட்ட நாமும் பங்களிப்புச் செய்வோம். மலேரியா நோய் காணப்படும் நாடொன்றில் இருந்து வருகைதரும் போது மலேரியா நோய்த் தாக்கத்தைக் கண்டுகொள்வதற்கான குருதிப் பரிசோதனை செய்துகொள் ளவும். போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

மந்திகையில் இருந்து ஆரம்பித்த நடைபவனிக்கு முன்பாக மருந்து தோய்க்கப்பட்ட நுளம்பு வலைக்குள் ஒருவர் படுத்துறங்க நுளம்பு ஒன்று வந்து கடிக்க முடியாமல் நின்றுகொண்டிருக்கும் நிலையில் அமைந்த அலங்கார ஊர்தி செல்ல அதைத் தொடர்ந்து மாகாண அமைச்சர், உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் மற்றும் மாணவர்களும் பொதுமக்களும் சென்றனர்.

குறித்த நடைபவனி மந்திகையில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக பருத்தித்துறை நகரம், கடற்கரை வீதி வழியாக ஹாட்லிக் கல்லூரி மைதானத்தைச் சென்றடைந்தது. (வ-173)

## வீடுகளுக்கு நேரில் சென்று விவரம் திரட்டும் படையினர்

### அரச, தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோரின்

தென்மராட்சி, மே 24

சாவகச்சேரி நகரில் உள்ள அரச, தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோரின் வீடுகளுக்கு சைக்கிள்களில் செல்லும் படையினர் வீடுகளில் தங்கியிருக்கும் வயோதிபர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் குடும்ப அட்டையை வழங்குமாறு கேட்பது குறித்து பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வீடுகளுக்குச் செல்லும் படையினர் குடும்ப அட்டையைக் கேட்பதாகவும் குடும்ப அட்டை இல்லையெனத் தெரிவித்தால் அவர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம், தொழில் செய்யும் இடம் போன்ற விவரங்களைக் கேட்டு எழுதிச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

"நாட்டு மக்கள் அமைதியாக இருப்பதாக ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் நீங்கள் குடியிருப்பாளர்களின் விவரங்களைப் பதிவு செய்கிறீர்களே" என்று ஒருவர் கேட்டபோது தாங்களும் கிராம அலுவலர் போன்று குடும்ப விவரங்களை வைத்திருப்பதற்காகப் பதிவு செய்வதாக படையினர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. (வ)

## இனியாவது புனரமைக்கப்படுமா வங்களாவடித் துறைமுகப் பகுதி

### கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம், மே 24

நயினாதீவு, வங்களாவடி துறைமுகத்தைப் புனரமைத்துத் தருமாறு ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் பல தடவைகள் வலியுறுத்தி வந்தபோதும் அதற்கான எந்தவித நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்று நயினாதீவு மக்கள் விசனம் தெரிவிக்கின் றனர்.

கடந்த காலங்களில் மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த வங்களாவடி துறைமுகம் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுள்ளது. நயினாதீவு மக்கள் வெளியிடங்களில் உள்ள தமது உறவினர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சென்று உயிரிழக்கும் சந்தர்ப்பங்களில், அவர்களது சடலங்களை குறித்த துறைமுகத்தின் வழி யாகவே நயினாதீவுப் பிரதேசத்துக்குள் கொண்டு வரும் வழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. இந்த வழமை பல ஆண்டு காலமாகத் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வந்தது.

நயினாதீவு அம்பாள் ஆலயம் முன்பாகவுள்ள இறங்குதுறை இதற்காக எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்படுவதில்லை. அத்துடன் நயினாதீவில் பிடிக் கப்படும் மீன்கள் குறிகாட்டு வானுக்கு வங்களாவடி துறைமுகத்தின் ஊடாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன.

நயினாதீவின் தென் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் அதிகமாக உள்ளன. எனவே அந்தப் பகுதியில் உள்ள வியாபாரிகள் தமது வியாபார நிலையங்களுக்கான பொருள்களை இலகுவாகவும் சேதாரமற்ற விதத்திலும் எடுத்துவரக் கூடியதாகவும் வங்களாவடித் துறைமுகம் அமைந்துள்ளது.

எனவே குறித்த துறைமுகத்தை தாமதமின்றி புனரமைத்துத் தர நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி களை அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (வ-7)

## விண்கல் பொழிவை உலக மக்கள் இன்று காணலாம்

யாழ்ப்பாணம், மே.24

புதிய விண்கல் பொழிவு ஒன்றை கண்டு களிக்கும் வாய்ப்பு இன்று உலக மக்களுக்கு கிடைக்கும் என்று கொழும்பு பல்கலைக்கழக பூகோளவியல் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை நேரப்படி இன்று பிற் பகல் ஒரு மணிக்கு விண்கல் பொழிவு இடம் பெறவுள்ளதாகவும் அதனை இலங்கை வாழ் மக்கள் கண்டு களிப்பது கஷ்டம் என்றபோதும் அமெரிக்கா மற்றும் கனேடிய வாழ் மக்கள் நன்கு அவதானிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.


'கெமலோபாடலிடிஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விண்கல் பொழிவு புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட ஒன்று என்று அவர் தெரிவித்துள்ளார். (வ)

## 200 ஹெக்ரெயரில் உருளைக்கிழங்கு செய்கையை முன்னெடுக்க ஏற்பாடு

### யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, மே 24

"யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான உருளைக் கிழங்குச் செய்கையின் உத்தேச இலக்கு 200 ஹெக்ரெயராகும். இந்த இலக்குக்கான முன்னோடி வேலைத் திட்டங்கள் மற்றும் முன் மொழிவுகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது" என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.



கோப்புப்படம்

யாழ்.மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச்செய் கையின் அளவு ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது. விவசாயிகளும் ஆர்வத்தோடு உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்ட ரீதியில் உருளைக் கிழங்குச் செய்கையை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற் கொள்வதற்கு வசதியாக கடந்த வருடம் கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டதோடு அவற்றை ஒருங்கிணைந்து யாழ். மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் நிறுவப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை பெருமளவில் கோப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலும் மேற்கொள்ளப்படுவதோடு ஏனைய பகுதிகளில் ஆர்வமுள்ள விவசாயிகள் மூலம் பரீட்சார்த்த அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த வருடம் உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கைக்கான விதை உருளைக்கிழங்கு 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டது.

இந்த வருடத்துக்கான உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கைக்கான ஏற்பாடுகள் தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில்;

இந்த வருடத்துக்கான உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கான உத்தேச இலக்கு 200 ஹெக்ரெயர் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டு அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விதை உருளைக்கிழங்கு விநியோகம், உற்பத்தி செய்யப்படும் கிழங்கை விலைத் தளம்பல் இன்றி சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான மானிய உதவிகள் மற்றும் முன்னெடுப்புக்கள் தொடர்பான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். (வ-11)

## கிளிநொச்சி மாவட்டத்தில் முகாமைத்துவ வாரம்

கிளிநொச்சி, மே 24

மின்சார சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் குறித்து தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகாமைத்துவ வாரம் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் ஜூன் இரண்டாம் திகதிவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள் அனுட்டிக்கப்படவுள்ளது.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முகாமைத்துவ வாரத்தில் மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுகளை வைத்துள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங் கள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோரிடமிருந்து மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் து.சுபோகரன் அறிவித்துள்ளார்.

**பிரதேச் செயலகத்திலும், மின்சார மற்றும் இலத் திர னியல் கழிவுப் பொருள் களை ஒப்படைக்கு மாறும் அவர் அறி வித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி கரைச்சிப் பிரதேச செயலகத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 29ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும், மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள்களை ஒப்படைக்குமாறும் அவர் அறி வித்துள்ளார்.

பொதுமக்களிடையே கழிவு முகாமைத்தும் தொடர்பான அரச கொள்கைகளை சிறப்பாகச் செயற்படுத்தவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் என முகாமைத்தவ வாரம் அனுட்டிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-9)

# உங்கள் பதவி ஏற்பு விழாவில் ராஜபக்ஷ பங்கேற்பது தமிழரின் நெஞ்சில் நெருப்பை கொட்டியது போலாகும்

## மோடியிடம் நேரில் வலியுறுத்தினார் வைகோ

சென்னை, மே 24

உங்களின் பதவி ஏற்பு விழாவில் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்றால், அது கோடான கோடித் தமிழர்களின் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டியதாகவே அமையும். எனவே அவரின்வருகையைத்தவிர்த்து விடுங்கள் என்று புதிய பிரதமராகப் பதவியேற்கவுள்ள மோடியிடம்நேரடியாகவேண்டுகோள் விடுத்தார் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் டில்லி குஜராத் பவனத்தில் நரேந்திர மோடியை வைகோ நேரில் சந்தித்தார். மோடியுடன் பா.ஜ.க தலைவர்கள் அமித் ஷா, அருண் ஜெட்லி ஆகியோரும்உடன்இருந்தனர்.

வை.கோவைவரவேற்றமோடியிடம் வைகோ கூறியதாவது:- இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு, இந்திய அரசு அழைப்பு விடுத்தது, பேரிடியாகத் தாக்கி, எங்கள் இதயங்களைச் சுக்கு நூறாக்கிவிட்டது. நான் நேற்று (நேற்று முன்தினம்) உங்களுக்கு எழுதிய கடிதத்தைத் தருகிறேன். கொஞ்சம் பொறுமையாகப் படியுங்கள்.

ஐ.நா.வின் மூவர் குழு அறிக்கையும், லண்டன் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட மனதைப் பதற வைக்கும் படுகொலைக் காட்சிகளும் நான் உங்களிடம் தந்த இந்தக் குறுந்தட்டில் இடம் பெற்றுள்ளன. இதில் உள்ளபடுகொலைக் காட்சிகளைப் பார்த்தால் நீங்கள் வேதனைப்படுவீர்கள். லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை, ஆயுதம் ஏந்தாத அப்பாவிகளைப் பச்சிளம் பாலகர்களை குழந்தைகளை, தன் முப்படைகளையும் ஏவி, கொடூரமாகக் கொலை செய்தவர் ராஜபக்ஷ.

சோனியா காந்தியின் ஏவலில், அவரது கைப்பாவையாகச் செயல்பட்ட மன்மோகன் சிங் அரசு, முப்படை ஆயுதங்களையும் கொடுத்து, லட்சக் கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக ஒரு போரை நடத்தியது. 'இந்திய உதவி இல்லாவிட்டால் நாம் வெற்றி பெற்று இருக்க முடியாது' என்று, இலங்கை நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இவரா உங்கள் பதவி ஏற்பு விழாவில் பங்கேற்பது? இதைச் சகிக்க இயலாது-என்றார் வை.கோ

உடனே பா.ஜ.க மூத்த தலைவர் அருண் ஜெட்லி இடைமறித்து, 'சார்க் நாடுகளின் தலைவர்களை அழைப்பது, இந்திய ஜனநாயகத்தை உயர்த்துவதற்கு' என்று குறிப்பிட்டார். அதற்கு வை.கோ, கொஞ்சம் பேசாமல் இருங்கள். என்னைப் பேச விடுங்கள்.

2 ஆயிரத்து 300 இந்துக் கோவில்களைச் சிங்களவர்கள் இடித்து விட்டார்கள். மீதம் இருக்கின்ற இந்துக் கோவில் வளாகங்களில்பௌத்தவிகாரைகளைக் கட்டுகிறார்கள். தமிழர்களின் கல்லறைகளைக் கூட புல்டோசர் கொண்டு அழித்து மண்மேடாக்கி விட்டார்கள்.

அதற்குக் காரணமானவனை நீங்கள் இங்கே அழைக்க முடியுமா? நாங்கள் தமிழர்கள் சபிக்கப்பட்ட இனம் ஆயிற்றோ? அதனால்தான் இப்படிச் செய்கிறீர்களா? என்றார் வைகோ.

அதற்கு அருண் ஜெட்லி, அப்படிச் சொல்லாதீர்கள். இது தமிழர்கள் பிரச்சினை அல்ல. இது தேசியப் பிரச்சினை-என்றார்.

உடனே வைகோ, தேசியப் பிரச்சினை என்றால் செயலில் காட்டுங்கள். 578 மீனவர்களைச் சிங்களக் கடற்படை சுட்டுக் கொன்றதே நாதி உண்டா? குஜராத் மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்றபோது, பாகிஸ்தான் கடற்படை சுட்டுக் கொன்றது உண்டா?

ராஜபக்ஷவை அழைத்ததால் ஏழரைக் கோடித் தமிழர்களின் உள்ளமும் காயப்பட்டு இருக்கின்றது. தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களுக்கும் மனதுக்குள் வேதனை தான். ஆனால், கட்சிக் கட்டுப்பாட்டால் உங்கள் முடிவை எதிர்க்க மாட்டார்கள்.

நீங்கள் உறுதியான முடிவுகளைத் துணிந்து எடுக்கக் கூடியவர். இந்தப் பிரச்சினையிலும் அப்படி முடிவு எடுங்கள். ராஜபக்ஷ வருகையைத் தவிர்த்து விடுங்கள். உங்கள் பதவி ஏற்பு விழா கோலாகலமாக நடக்கட்டும். இரவுக்குள் ஒரு நல்ல முடிவு எடுங்கள் - என்றார். (த-5)

# இலங்கைத் தமிழர் தீர்வு விடயத்தில் மோடியிடம் புதிய தீர்மானம் தேவை

## மாவை சேனாதிராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 24

இரு நாட்டு அரசுகளினதும் நலன் களைக் கருதி இந்தியாவின் புதிய அரசு நல்லதொரு தீர்மா னத்தைக் கொண்டு வரவேண்டும். அதற்கு வெளி நாட்டு அமைப்புக்களும் தங்களது ஆதரவை வழங்க முன்வரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வடக்கில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு, காணாமல்போதல், மீனவர் பிரச்சினை, மீள்குடியேற்றம் தொடர்பாக அரசியல் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.பாடிவிடுதியில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீனவர் பிரச்சினை, காணாமல் போனோர் பிரச்சினை ஆகியன இனப் பிரச்சினை எவ்வளவு நீண்டதாக இருக்கிறதோ அதை விட அதிகமாக நீண்ட காலம் தொடர்கிறது. வடபகுதியிலும், கிழக்கிலும் மீனவர் பிரச்சினை தொடர்கிறது. திருகோணமலையில் தென்னிலங்கை மீனவர்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

தழிழர்களின் பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வருவோர் காலத்துக்குக் காலம் தங்கியிருந்து மீன்பிடிப்பது, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவது, நவீன உபகரணங்களைப் பயன்படுத்துதல் என்பன வடக்கு-கிழக்கில்தொடர்கின்றன. வடக்கு மீனவர்கள் போரின் காரணமாகச் சொந்த நிலங்களில் குடியமர முடியாமல் இருப்ப தால் அவர்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது.

தென்னனிலங்கை மீனவர்கள் இராணுவத்தின் ஆதரவுடனும் பாதுகாப்புடனும் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். ஆனால் எமது மீனவர்களுக்குக் கடற்படையினரால் பாஸ் நடை முறை உள்ளதுடன் ஆழக்கடலுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுகிறது.

விகிதாசாரத்தின் அடிப்படை யில் மீனவர்கள் அதிகம் கொல்லப்பட்டுள்ளனர். தாக்கப்பட்டும் உள்ளனர்.

இதனைவிட தென்னிந்திய மீனவர்கள் எமது கடல் பிரதேசத்தில் அத்துமீறி டோலர் படகுகளைப் பாவித்து மீன் பிடிப்பது, வளங்களை அழிப்பது, தென்னிலங்கை மீனவர்கள் அதிகமாக வந்து மீன்படிப்பது என்பன மீனவர் சமூகத்துக்குப் பெரும் பிரச்சினையாகவுள்ளன. கடல்வளம் மட்டுமல்லாது விவசாய நிலங்களும் அபகரிக்கப்பட்டுள்ளன. சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட நிலங்கள் இராணுவத் தேவைகளுக் காக பயன்படுத்தப்படுகின்றன.

மீனவர்களின் கைதுகளும், விடுதலைகளும் பிரச்சினைக்குத் தீர்வாக அமைந்து விட முடியாது. இதற்கு நிரந்தரமாகத் தீர்வு காணப்படவேண்டும். இதற்கு இந்தியாவின் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று அந் நாட்டுப் பிரதிநிதிகளிடம் எமது கோரிக்கையை முன்வைத்துள்ளோம். எமது போராட்டத்துக்கு வெளிநாட்டவர்களும் கைகொடுத்தால் போராட்டம் வெற்றி யளிக்கும்- என்றார். (த-14)

# மஹிந்த இந்தியா வரக்கூடாது; இளைஞர் தீக்குளிக்க முயற்சி

## *சேலத்தில் நேற்றுப் பரபரப்பு*

சென்னை, மே. 24

நரேந்திர மோடியின் பதவி யேற்பு விழாவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரக்கூடாது என்று தெரிவித்து சேலத்தில் இளைஞர் ஒருவர் தீக்குளிக்க முயற்சித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் மாவட்ட நீதிமன்ற வளா கத்தில் நீதிதேவதை சிலைக்கு அருகில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சேலம், கருப்பூரை சேர்ந்த வெற்றிவேல் (வயது- 31) என்பவரே இவ்வாறு தீக்குளிக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

'ராஜபக்ஷ இந்தியாவுக்கு வரக் கூடாது உள்ளிட்ட கோஷங்களை முழங்கியபடி தன் மீது மண்ணெண்ணையை ஊற்றித் தீவைத்து கொள்ள முயற் சித்துள்ளார் இளைஞர். பொது மக்கள் அங்கு திரண்டு அவ ரைத் தீ வைக்கவிடாது காப்பாற்றியுள்ளனர். உடனே பொது மக்கள் அவரை சேலம் அஸ்தம்பட்டி பொலிஸாரிடம் ஒப் படைத்தனர்.

நான் கட்டட வேலைக்குச் சென்று வருகிறேன். இன்னும் திருமணம் ஆகவில்லை. இந்தியாவுக்கு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வரக்கூடாது.

அவர் இந்தியா வருவது என்னைப் போல் பலருக்குப் பிடிக்கவில்லை. என் எதிர்ப்பை தெரிவிக்கத் தீக்குளிக்க முயற்சித்தேன் என்று வெற்றிவேல் பொலிஸாரிடம் தெரிவித்தார் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-5)

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் தங்கத்துரை



உடுவில் தெற்கு, புதுமடத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் தங்கத்துரை நேற்று (23.05.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலம்-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், மருது - பாக்கியத்தின் மருமகனும், வடிவேலு, சிவலோஜி, காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், அன்னலட்சுமி, கணேசு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நந்தரூபன், ரங்கநாதன், யமுதினி, உதயராஜன் மற்றும் காலஞ்சென்றவர்களான சோதிமலர், புஸ்பமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றஜிதா, விஜிதா, ராசகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆயுள்வேத விற்பனை ஆலோசகர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தேவை

கேரளாவை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் ஆயுள்வேத தயாரிப்புக்களுக்கு யாழ் நகரில் ஆலோசகர்கள் விநியோகஸ்தர்கள் தேவை. இது தொடர்பான கருத்தரங்கு மற்றும் பயிற்சிபட்டறை 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. பதிவுகளை மேற்கொள்ளவும்.

பதிவுகளுக்கு:
077 336 4095, 077 226 3216 (48370) (10)

பதிவுகள் மட்டுபடுத்தப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி அனி வேர்ஜினியா ஜெயராஜா யேசுதாசன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனி வேர்ஜினியா ஜெயராஜா யேசுதாசன் நேற்று (23.05. 2014) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் லீனப்பு ஜெயராஜா யேசுதாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனுவல் யோசப், பிலோமினா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான லீனப்பு, ஜேற்றுட் ஆகியோரின் அன்பு மருமகளும், யூட் பகீரதன் (லண்டன்), சியாமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தயாரும், யூடி, டறி ஆகியோரின அன்பு மாமியும், ஜீன் நொயலின், சைமன் வோல்டர், இவ்லின் டொறிஸ் ஆகியோரின் பாசமிகு சகேதரியும்,யோகராணி, பொலின், காலஞ்சென்ற றொபினா மற்றும் அருள்தாசன், மொறினா, அன்ரன், சுசிகலா, சதேஸ்குமார் ஆகியோரின் நேசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற கந்தவனம் மற்றும் சவேரியார், சிறில், வசந்தி, யோகேந்திரன் ஆகியோரின் சகலியும், மாயாதேவியின அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mr. L. Jesuthasan, No. 9, Hatherley Road,
Walthamstow, London, E17 65E
0044 2085210206

தகவல்: திருமதி. டொறிஸ் சதேஸ்குமார் (சகோதரி),
126/2, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.
021 321 7081, 021 221 7260

## மரண அறிவித்தல்

### கந்தப்பு - செந்திவேல்



துன்னாலை தெற்கு, கரவெட்டியைப்பிடமாகவும், 140, பருத்தித்துறை வீதி, வீரமகாகாளி அம்மன் கோவில் நல்லூரை வசிப்பிடமாகவும், தற்போது துன்னாலை தெற்கில் வசித்தவருமான கந்தப்பு செந்திவேல் (21.05.2014) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சீனி-தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயமணியின் அன்புக் கணவரும், ஜெயசிங்கம் (முன்னாள் முகாமையாளர், கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம்), பூவிலிங்கம (ஜேர்மனி), நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றெஜிவதனி, நவமணி (ஜேர்மனி), இராசதுரை (கட்டட மேற்பார்வையாளர், கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தினேஸ்குமார், பானுப்பிரியாங்கா, கவிதா (கொழும்பு), டாக்டர் தேவானந்தா (கெழும்பு), கமலதாஸன் (பொறியியலாளர், ஜேர்மனி), பிரதீபன் (பொறியியலாளர், கனடா), ரானியா (கனடா), ஜெனனி (மருத்துவ பீடம், கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், சாருகா, சகானா (கொழும்பு) ஆகியோரின் பூட்ட னும், காலஞ்சென்ற கணபதி, பாக்கியம், தியாகராஜா மற்றும் நல்லதங்காள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2014) சனிக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வெருண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

### கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,மே 24

இலங்கையின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் வகையிலான சுமுகமான தீர்வொன்றின் மூலம் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று இலங்கை மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, தமிழகத்தின் கன்னியாகுமரி கடற்பரப்பில் 14 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த மீனவர்கள் இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் 15 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களை விடுவிப்பதற்கான பேச்சு நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்ன கூறினார். (ச)

# இலங்கைக்கு வருகைதந்த சீனப் படைத் தளபதிகள்

### ஒரு மாதத்துக்குள் இரு குழுவினர்

கொழும்பு,மே 24

இலங்கைக்கு சீனப் படைத் தளபதிகளின் வருகை அதிகரித்துள்ளது. சீன ஆயுத பொலிஸ் துறையின் தலைமைத் தளபதி லெப்.ஜெனரல் நியு சியோங் இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஐந்து மூத்த கேணல் நிலை அதிகாரிகளைக் கொண்ட குழுவுடன் கொழும்பு வந்துள்ள அவர், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.



சீனக் குழுவினர் இராணுவத் தளபதியைச் சந்தித்தவேளை...

இந்தச் சந்திப்பின் போது, தற்போதைய ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, இலங்கைப் படையினரை தீவிரவாத முறியடிப்பு, கடத்தல் முறியடிப்பு, இடர் முகாமைத்துவம் ஆகிய பயிற்சிகளுக்கு அனுப்பி வைக்குமாறு சீன ஆயுத பொலிஸ் துறையின் தளபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் இராணுவப் பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்கு சீனப் படை அதிகாரிகளை அனுப்பி வைக்குமாறும் அவற்றில் பல அனைத்துலக தரம்வாய்ந்தவை என்றும் இலங்கை இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில், சீனப் படை அதிகாரிகளை இலங்கைக்கு பயிற்சிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீனத் தளபதி உறுதியளித்துள்ளார்.

சீனக் குழுவினர் இலங்கையில் பல்வேறு பாதுகாப்பு அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளதுடன், கணேமுல்லையில் உள்ள கொமாண்டோ தலைமையகத்துக்கும் செல்லவுள்ளனர்.

இந்த மாதம் இலங்கைக்கு வந்துள்ள சீனாவின் இரண்டாவது உயர்மட்ட படை அதிகாரிகள் குழு இதுவாகும்.

கடந்த வாரம் 25 பேர் கொண்ட சீன பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கொண்ட குழுவுடன், சீனாவின் மத்திய இராணுவ ஆணைக் குழுவின் உதவித் தலைவர் ஜெனரல் சூ கியூயிலியாங் இலங்கைக்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சீன அதிகாரிகளுக்கு சிறைத் தண்டனை

### அனல் மின் நிலையத்தை சிறந்த முறையில் நிர்மாணிக்காததால்

கொழும்பு,மே 24

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை உரிய முறையில் நிர்மாணிக்காத காரணத்துக்காக சீன அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் சகல நிர்மாணப் பணிகளையும் மேற்பார்வை செய்த இரண்டு உயர் அதிகாரிகளே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

நிர்மாணப் பணிகளை பொறுப்புடன் மேற்கொள்ளாத காரணத்தால் அனல் மின் நிலையத்தின் பணிகள் தோல்வியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பாதக நிலைமை ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணமான உயர் சீன அதிகாரிகள் இருவருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், குறித்த சீன அதிகாரிகளுக்கு எப்போது எவ்வளவு காலம் தண்டனை விதிக்கப்பட்டது என்பது குறித்து தகவலெதுவும் வெளியிடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இதேவேளை, நுரைச்சோலை அனல் மின் நிலையம் பாதிக்கப்படுவதற்கு பொறுப்பாக செயற்பட்ட இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு எவ்வித தண்டனையும் விதிக்கப்படவில்லை என்று இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (ச)

## கார் விபத்தில் இருவர் காயம்


கொழும்பு,மே 24

தெற்கு அதிவேக வீதியில் பத்தேகம பிரதேசத்தில் காரொன்று பாதுகாப்பு தடுப்பில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொடகமவில் இருந்து கொட்டாவ நோக்கிச் சென்ற கார் ஒன்றே இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ச)



சீனா சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மாலை நாடு திரும்பினார். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த ஜனாதிபதியை சிவில் விமானச்சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன,மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரனதுங்க ஆகியோர் வரவேற்றனர். (ச)

## யானை முத்தை விற்க முயன்ற கடற்படை சிப்பாய் கைது

கொழும்பு,மே 24

வெளிநாட்டு நபரிடம் யானை முத்து மற்றும் தந்தங்களை விற்பனை செய்ய முயற்சித்த கடற்படைச் சிப்பாயொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவையில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றுக்கு அருகில் வைத்து இந்த கடற்படை வீரர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் இருந்து 10.71 கிராம் எடை கொண்ட யானை முத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹிக்கடுவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## தற்போதைய நிலவரங்கள் குறித்து அமெரிக்க தூதருடன் ரணில் பேச்சு



அமெரிக்கத் தூதர் ரணிலுடன் கலந்துரையாடியபோது...

கொழும்பு,மே 24

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர் மிச்சேல் ஜேசிசனுடன், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

நாட்டின் அரசியல் நிலைமைகள் குறித்தும், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் அமெரிக்கத் தூதருக்கு ரணில் விக்கிரமசிங்க எடுத்துக் கூறியுள்ளார்.

அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பிய ரணில் விக்கிரமசிங்க, அங்கு தாம் இராஜாங்கத் திணைக்களம், வெள்ளை மாளிகை உயரதிகாரிகளுடன் நடத்திய சந்திப்புகள் குறித்தும், மிச்சேல் சிசனுக்கு தெரிவித்துள்ளார். (ச)

## சட்ட மா அதிபருடன் விரைவில் ஆராய்வு

### சரத் பொன்சேகாவின் சிவில் உரிமை குறித்து

கொழும்பு,மே 24

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவின் சிவில் உரிமைகள் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்பில் சரத் பொன்சேகாவின் பெயரை உள்ளடக்குவது குறித்து சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோவின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

அடுத்த ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் சரத் பொன்சேகாவின் பெயரை உள்ளடக்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.



மஹிந்த தேசப்பிரிய

சரத் பொன்சேகரவின் சிவில் உரிமைகள் ரத்து செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆலோசனைபெற்றுக்கொண்டு அதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## புதிய பாடத் திட்டங்கள் பல்கலையில் ஆரம்பம்

கொழும்பு,மே 24

நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் 2 புதிய பாடத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்தில் கணினி வன்பொருள் பொறியியல் பாடத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் ஷெணிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களில் மொழிப்பெயர்ப்புக் கல்வி பட்டப்படிப்புக்கான பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

# தமிழர் புறக்கணிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது

### புனித பூமி என்ற பெயரில் நிலங்கள் அபகரிப்பு என்கிறது கூட்டமைப்பு

திருகோணமலை.மே 24
தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதையும், அவர்களின் கருத்துக்கள், தேவைகள் பின் தள்ளப்படுவதையும் எப்போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் தெரிவித்தார்.

புல்மோட்டை கலைமகள் அறநெறிப் பாடசாலைக்கு தளபாடம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் புனித பூமி என்ற பெயரில் தமிழ் பேசும் மக்களுடைய விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய அநீதியான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்க மாட்டாது.


ஜெ.ஜெனார்த்தனன்

**நெருக்கடிகள் ஏற்பட்டாலும் எமது இனத்துக்குரிய தனித்துவங்களையும், கலாசாரங்களையும் பேணிப் பாதுகாப்பதில் பின் நிற்கக் கூடாது.**

எவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டாலும் எமது இனத்துக் குரிய தனித்துவங்களையும், கலாசாரங்களையும் பேணிப் பாதுகாப்பதில் நாம் பின்னிற்கக் கூடாது.

எமது கலை,கலாசார செயற்பாடுகளில் தமிழ் மக்களின் தனித்துவம் சார்ந்த விடயங்கள் அன்றி வேறுவிடய[illegible]ள் தலையீடு செய்வதற்கு [illegible] துணை போகக் கூடாது-[illegible]றார், (ச-40)


மட்டக்களப்பு,விவேகானந்தபுரம் கிராமத்தில் புகுந்த காட்டுயானைகள் அங்குள்ள வீடு ஒன்றைச் சேதப்படுத்தியுள்ளன. வீட்டுப் பாவனைப் பொருள்களையும் அழித்து நாசப்படுத்தியுள்ளன. (ச)

## படைச் சிப்பாய் சடலமாக மீட்பு

அம்பாறை.மே 24
அம்பாறை, காரைதீவு படைமுகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த சமன் குமார என்ற படைச் சிப்பாயின் சடலமே இவ்விதம் மீட்கப்பட்டுள்ளது.

இவர், காரைதீவு, 3ஆவது விஜயபாகு படையணியில் பணியாற்றி வந்துள்ளார்.

இவரது மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


கோப்புப்படம்

# மக்கள் பாவனைக்கு வீதிகள் கையளிப்பு

அம்பாறை.மே 24
கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் 9 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட அம்பாறை,ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள 8 வீதிகள் மக்களின் பாவனைக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆர்.கே.எம்.கல்லூரி வீதி, சுவாமி விபுலானந்த சிறுவர் இல்ல வீதி, வீரமாகாளி அம்மன் கோயில் வீதி, விளையாட்டு மைதான மேற்கு வீதி, கலாசார மண்டப வீதி, விளையாட்டு மைதான முன் வீதி ஆகியவை உட்படப் பல வீதிகள் இவ்விதம் திறந்து வைக்கப்படவுள்ளன. (ச)

# வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் நல்லிணக்கத்துக்கு முரணான செயல்

### ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

திருகோணமலை.மே 24
திருமலை, மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் நல்லிணக்கத்துக்கு முரணானது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

மூதூர் கல்வி வலயப் பணிப்பாளர் நியமனத்தில் நடைபெற்றுள்ள குளறுபடிகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை செயலர் பி.உதயரூபன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் அதிக தமிழ்ப் பாடசாலைகளைக் கொண்ட மூதூர் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வித் திணைக்களத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நிர்வாக குளறுபடிகளால், முறையான விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர், மூதூர் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டிருப்பது நல்லிணக்கத்துக்கு முரணானது.


பி.உதயரூபன்

எனவே மூதூர் கல்வி வலயத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ள வலயக் கல்விப் பணிப்பாளரை மீண்டும் அந்த வலயத்துக்கு நியமிப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் முன்வரவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஞாயிறு, போயா தினங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் தடை

### கிழக்கு மாகாண சபை அங்கீகாரம்

திருகோணமலை.மே.24
ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவதைத் தடைசெய்ய கிழக்கு மாகாண சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று கிழக்கு மாகாண சபையில் அமைச்சரவைப் பேச்சாளர் எம். எஸ்.உதுமா லெப்பை தெரிவித்தார்.


எம்.எஸ்.உதுமாலெப்பை

கிழக்கு மாகாண சபை அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுவதனால் மாணவர்கள் சமயக் கல்வியைக் கற்க முடியாதுள்ளது என்றும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் மாணவர்கள் சமயக் கல்வியைக் கற்கவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

போயா தினங்களிலும், பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி வரைக்கும் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவதைத் தடைசெய்வதற்கான அங்கீகாரத்தை கிழக்கு மாகாண சபை வழங்கியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

பிறப்பு 07.07.1950
இறப்பு 24.04.2014

சிலாபத்தைப் பிறப்பிடமாகவும், பாஷையூரை வதிவிடமாகவும் கொண்ட

**குட்டப்பன் ஜதீந்திரதாஸ்**



*நாள்கள் ஓடி ஓடி வாழ்வினை முடிக்கும் மாய உலகில் உம் உடலும் உரமாகி*
*ஒரு மாதம் ஆகுதையா எந் நிலை ஆனாலும் எங்களோடு ஒன்றி*
*எம் வாழ்வில் மலர்ந்த இனிய நினைவுகள் என்றும் மறையாது!*

உங்களை நினைவு கூரும்: அன்பு மனைவி - **ஜ.தயாநிதி**, அன்பு மகன் - **ஜ.சஜீந்திரன்**, அன்பு மகள் - **கு.சசிகலா**, பேரப்பிள்ளைகள்- **ஸ்ரீபன், சானிகா.**
அன்புச் சகோதரர்கள்: **கிருஸ்ணன், சந்திரபோஸ், காலஞ்சென்ற ஹரிதாஸ், குமார், காலஞ்சென்ற சிறீதரன், மோகனதாஸ், லலிதா, பத்மினி, ராகினி, இந்திராணி.**

*பாஷையூர், யாழ்ப்பாணம்.* (49319)(12.3.6)



## நன்றி நவில்கின்றோம்

திருமதி **புஷ்பவதி குணரத்தினம்**



10.05.2014 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி புஷ்பவதி குணரத்தினம் அவர்கள் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பெற்று இருந்தபோது எமக்கு ஆலோசனை வழங்கிய வைத்திய நிபுணர்களுக்கும், அன்னாரை அனுதாபத்துடனும், அர்ப்பணிப்புடனும் பராமரித்த வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய ஊழியர்களுக்கும், எமது இல்லத்திற்கு வருகை தந்தும் தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும் துயர்பகிர்ந் தோருக்கும், மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் நாம் துயருற்றிருந்தபோது எமக்குப் பல்வேறு வழிகளில் உதவிய உறவினர்கள், நண்பர்கள், யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் ஆகியோருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (48307) (12.3.6)

பேராசிரியர் க.குணரத்தினம்,
குடும்பத்தினர்.

## அன்னையர் தின நிகழ்வு

வலி.தென்மேற்கு, மே 24
ஊன்றுகோல் அறப்பணி அகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அன்னையர் தினம் இன்று சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.
சனசமூக நிலையத்தின் தலைவர் சே.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுல் வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரட்ணம் செல்வக்குமாரி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.
நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலய அருட்தந்தை சோதிநாதன், அமெரிக்கமிசன் அருட்தந்தை எ.வி.தேவதாஸ் துணை இழந்தோர் மரவுமைய இயக்குநரும் இதம் உளவள நிறுவனத்தைச் சேர்ந்தவருமான திருமதி இதயராஜ் கல்பனா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.
சிறப்பு விருந்தினராக மல்லாகம் நீதிவான் திருமதி ஜோய் மகிழ்மலர் மகாதேவா கலந்து கொள்வார்.
இந்த நிகழ்வில் தாயின் மகத்துவம் பற்றிய பாடல் போட்டி இடம்பெறுவதுடன் அன்னையர்களும் கௌரவிக்கப்பபடவுள்ளனர். (வ-115)



யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 66ஆவது ஆண்டு பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் புதன்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.
க.சிறீராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மீன்பிடி போக்குவரத்து வர்த்தக அமைச்சர் பா.டெனீஸ்வரனும், வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-10, 20)

## வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 24
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் உடுவில் பிரதேச செயலக பிரிவில் நடத்தும் வாராந்த சொற்பொழிவு, கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்.
இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் "கண்டேன் அவர் திருப்பாதம்" என்ற பொருளில் சைவப் புலவர் கா.கமலநாதன் சிறப்புரையாற்றுவார்.
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ ப.ஜெயக்குமாரக் குருக்களின் ஆசியுரையும் அறநெறிப்பாடசாலை மாண்வர்களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பும் இடம்பெறும். (உ-7)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மே 24
சுழிபுரம் மேற்கு பாரதி கலை மன்றத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சுப்பையா அரங்கு திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.
பாரதி கலை மன்றத்தின் தலைவர் த.விமல் தலைமையில் இடம்பெறவிருக்கும் நிகழ்வுகளில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக பேராசிரியர் தி.வேல்நம்பி, காரைநகர் பிரதேச செயலர் திருமதி பா.தேவநந்தினி உட்பட சிலர் கலந்து கொள்வார்கள். (க)

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 24
சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஓவியக் கண்காட்சியொன்று நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் ஓவியர் வை.சிவசுப்பிரமணியம் (ரமணி) முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.
கண்காட்சியை ஓவிய ஆசிரியர் ஏ.ஜெயந்தன் ஒழுங்கமைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## வீடியோக் காட்சி

யாழ்ப்பாணம், மே 24
சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் இரண்டாவது நிகழ்வாக சர்வதேச சுதந்திர கலை எடுத்தாளுநர்களின் "செயற்றிட்டம் 35" இன் 2 ஆவது தொகுதியின் 4 ஆவது பகுதி திரையிடப்படவுள்ளது.
மேற்படி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை, இலங்கை ஆவணக் காப்பகம் 199, கோயில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது. (க)

## காரைநகரில் தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி, மே 24
இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை காரைநகரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்க உள்ளது.
இதில் வீட்டு மின் இணைப்பு, தகவல்தொழில்நுட்பம், மேசன், தையல் பயிற்சி, மரவேலை, காய்ச்சி இணைத்தல் ஆகிய புதியபிரிவுபயிற்சிகளில் இணையுமாறு கேட்கப்பட்டுள்ளது.
இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பதிகாரி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலைச் சந்தி, காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார். (உ-100)

## கருத்தரங்கு

அமெரிக்கத் தூதரகத்தின் அனுசரணையில் அமெரிக்கத் தகவல் கூடத்தினால் "உங்கள் அடுத்த நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்வது எப்படி" என்பது தொடர்பான இலவசக் கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 5.30 வரை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (க)

## யாழ். கல்வியியற் கல்லூரியில் மொழி ஆய்வுகூடம் திறப்பு

யாழ்ப்பாணம், மே 24
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மொழி ஆய்வு கூட கட்டடம் நாளை மறுதினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.
கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும், மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்து கொள்வர். (வ-9)

## தண்டம்

கிளிநொச்சி, மே 24
கிளிநொச்சியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
கஞ்சா சுருட்டு ஒன்றை தனது உடைமையில் வைத்திருந்த ஒருவரைக் கடந்த வாரம் கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் இவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து திங்கட்கிழமை கிளிநொச்சி நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.
இதன்போது குறித்த நபரை 10 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்துமாறு உத்தரவளிக்கப்பட்டது.
இதனைச் செலுத்தத் தவறின், ஒரு மாத காலசாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (வ-55)

**வீடு விற்பனைக்கு**
சுன்னாகம், மாணிக்கதியாகராஜ வீதி செல்லவளவில் 2 பரப்பு 7.90 குழி கொண்ட காணியுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434 (47713) (3.6.4)

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 2பரப்பு 11¼ குழியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
(48255) (12.3.6) தொடர்பு: 077 614 6434

**விற்பனைக்கு**
1½ போத்தல் பால் கறக்கும் யமுனாபாரி ஆடும் 4 மாத கடாக் குட்டியும் விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: [illegible],
(48191) (12.3.6) 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**English - Personal Classes**
தேவையான திறன்களில் விசேட பயிற்சிகள் வழங்கப்படும். அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியரினால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உயர்ந்த அடைவைப் பெற்றுள்ளனர்.
தொடர்பு: 077 930 9740 (48337) (45.6.3)

**கேக் (Cake) தயாரிப்பாளர்கள் தேவை**
சர்வதேச தரம் வாய்ந்த நிறுவனமொன்றுக்கு சிறந்த கேக் (Cake) தயாரிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
TP: 071 120 6127
(48342) (12.3.6) e-mail: jobscluster@yahoo.com

**தேவை**
சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும். (48289) (7.6.3)
[illegible] தொடர்பு: 077 772 2215

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
ஹீரோ ஸ்றீம் (Hero Streem), NP WB - XXXX விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 250 8751/077 711 2261
[illegible] (48193)(12.3.6)

**பழைய வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு**
கோப்பாய் பழைய வீதியில் இருபாலைச் சந்தியில் இருந்து 300m தூரத்தில் 15 பரப்பு 12½ குழி காணி பழைய வீட்டுடன் சேர்த்து விற்பனைக்குண்டு.
தொடர்பு: 011 259 1720 (46793) (4.6.3)

**சங்கமம்**
**வயலின் வாத்தியக் கலையகம்**
நடத்தும்
**சங்கமம் – 2014**
**2ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இசை நிகழ்வும்**
இடம் : கைலாசபதி கலையரங்கு
யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
காலம் : 24.05.2014 சனிக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(48341)(7.6.3)



சங்கமம் வயலின் வாத்தியக் கலையக மாணவர்கள்.

**RALEIGH**
மகளிர்களிற்கான புத்தம்புதிய நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய றலி துவிச்சக்கரவண்டிகள் விற்பனையில் உள்ளன.
வியாபாரிகளிற்கு விசேட கழிவு வழங்கப்படும்.




Ride a Raleigh and feel the Difference
A tradition since 1887
ஆதுஸ் என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிட்,
30, கன்னாதிட்டிறோட், (சிவன்கோயில் முன்பாக), யாழ்ப்பாணம்.
TP:077 742 7322
(47171)(7.6.3)

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**விவசாய நிறுவனம் - மருதனார்மடம் சுன்னாகம்**
மூன்றாம்நிலைக் கல்வி தொலைக்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது.
பதிவு இல. TV ECP 250006
**விவசாய சான்றிதழ் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்**
மேற்படி பயிற்சிநெறியில் சேர விரும்புவோர் 06.06.2014 எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளிக்கவும்.
- இதற்குப் பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- நான்கு மாத பயிற்சிநெறி ஆகும்.

ஒருங்கிணைந்த பண்ணை முகாமைத்துவக் கல்விக்கான வகுப்புக்களும், வார இறுதிநாள்களில் நடத்த இருக்கிறோம்.
- இதற்கு விரும்புவோர் தமது விண்ணப்பத்தை அனுப்பவும்.
- இது இரண்டு மாதம் நடத்தப்படும்.
- இதற்கான கட்டணம் 2500/= அறவிடப்படும்.



வெலிமடை, மொரகொல்ல, கல்கேவத்த தோட்டத்தில் வீடு கட்டுவதற்காக தளம் வெட்டிக்கொண்டிருந்தபோது மண்திட்டு சரிந்து வீழ்ந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் படுகாய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர் வாக்களிக்க வசதி

## ஆராய்கிறது தேர்தல் திணைக்களம்

கொழும்பு,மே 24

வெளிநாடுகளிலுள்ள 20 லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு வாக்களிப்புக்கான வசதிகளை எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அந்தந்த நாடுகளில் இருந்தவாறே வாக்களிக்கும் வசதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

2014 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பு திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அதற்கமைய வாக்காளர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்கின்ற படிவங்கள் கடந்த 16 ஆம் திகதி முதல் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றன. இந்தப் படிவங்களை மீளப்பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

இந்த நடவடிக்கை ஜூலை 15 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும். வாக்காளர்கள் இறுதி வரை தாமதிக்காமல் துரிதமாக தமது விண்ணப்பப் படிவங்களை மீளக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தங்களது பெயர்களை தேர்தல் இடாப்பில் பதியத் தவறுபவர்களுக்கு வாக்களிப்புக்கான வாய்ப்புகள் இல்லை என்பதை தேர்தல் திணைக்களம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது. எனினும் சிலர் இது தொடர்பில் அலட்சியமாக இருந்து விட்டு இறுதி நேரத்தில் எம்மிடம் முறையிடுகின்றனர். ஒவ்வொரு வருடமும் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிய வேண்டும் என்பது பலருக்குத் தெரியாது. இது தொடர்பில் தெளிவூட்டும் நடவடிக்கைகளை இந்த முறையும் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியை வாக்காளர் தினமாகப் பிரகடனப்படுத்தி நுவரெலியா, புத்தளம், கிளிநொச்சி, அம்பாறை, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் நடை பவனிகள், துண்டுப்பிரசுர விநியோகம், வீதி நாடகங்கள் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வியமைச்சுக்களின் உதவியுடன் பாடசாலை மட்டத்திலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலைகளில் அதிபர்கள் மூலமாக மாணவர்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் படவுள்ளன. அவற்றினூடாக பெற் றோர்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளும் இடம் பெறவுள்ளன-என்றார். (ச)



> வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அந்தந்த நாடுகளில் இருந்தவாறே வாக்களிக்கும் வசதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

## இலங்கையில் வெப்பம் தொடர்ந்தும் அதிகரிப்பு

இலங்கையில் இரவு மற்றும் பகல் நேர வெப்பநிலை படிப்படியாக அதிகரித்து வருகிறது என்று வானிலை நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மழைவீழ்ச்சியும் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்து வந்த அளவிலும் பார்க்க வெகுவாக குறைந்துள்ளது என்று இலங்கை வானிலை ஆய்வு மையத்தின் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. கடந்த 7 ஆண்டுகளில் புவி வெப்பமடைதலின் பாதிப்புகள் உலகளவில் இரட்டை மடங்காகியுள்ளமைக்கான விஞ்ஞான ரீதியான ஆதாரங்களை ஐ.நாவின் நிபுணர்குழு அண்மைய தனது ஆய்வறிக்கையில் வெளியிட்டிருந்தது. எதிர்வரும் காலங்களில் உலகில் வெள்ளப்பெருக்கு, வறட்சி, உணவுத் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் அதிகரிப்பதுடன் மனித குலத்தின் ஆரோக்கியமும் மோசமாகப் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது என்று பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நாவின் சர்வதேச குழு தெரிவித்துள்ளது.

# வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாது மனச்சாட்சியாளர்களாக நிரூபிப்பு

## வீரவன்ச, சம்பிக்கவை மெச்சுகிறது ஐ.தே.க.

அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க இருவரும் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அதன்மூலம் தாம் மனச்சாட்சியுள்ளவர்களென்பதை நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அரசுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ் வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசு மதுவுக்கு முற்றுப் புள்ளி வைக்க வில்லை.

அமைச்சர்களான சம் பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோர் அரசுக்கு எதிரானவர்கள் போன்று நாடக மாடுவதாக நாம் எண்ணினோம்.

ஆனால் போதைப் பொருள் வியாபாரம், கடத்தல் தொடர்பாக நாம் அரசுக் கெதிராக கொண்டு வந்த நம் பிக்கை யில்லாப் பிரேரணை தொடர்பான விவா தத்திலும் இவ்விரு அமைச்சர்களும் அத் துரலியேரத்ன தேரரும் கலந்து கொள்ளவில்லை.

இதன் மூலம் தாம் மனச்சாட்சி உள்ளவர்கள் என்பதனை நிரூபித்துள்ளனர். அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து வெற்றி பெற முடியாது. ஏனென்றால் மூன்றில் இரண்டு பெரும் பான்மைப்பலம் அரசுக்கு உள்ளது. இலங்கையில் போதைப் பொருள் பாவனை, வியாபாரம் மற்றும் கடத்தல்கள் அதிகரித்துள்ளன. இதனை நாட்டு மக்கள் அறிய வேண்டும்.- என்றார். (ச)

## வளர்மதி முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,மே 24

கொக்குவில் வளர்மதி முன்பள்ளியில் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் எம்.இளம்பிறையனும் அவரது பாரியாரும் கலந்து கொள்வர். (ஒ-400)

## 'மயான காண்டம்' வெளியீடு இன்று

யாழ்ப்பாணம்,மே 24

ஆகாயம் பதிப்பகத்தின் பிந்திய பதிப்பான 'மயான காண்டம்' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி றொமெய்ன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கவிஞர் கருணாகரன் தலைமையில் இடம்பெறும்

இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் ந.சத்தியபாலனும், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக வருகை தரு விரிவு ரையாளர் தி.செல்வமனோகரனும், ஏற்புரையை கவிஞர் சித்தாந்தனும் நிகழ்த்துவர்.

(ஒ-400)


**இலவசம்**

உங்கள் வீடு/கட்டட வேலைகளில் ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் கட்டட நிர்மாணத் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆலோசகரினால் இலவசமாக தொலைபேசி மூலம் ஆலோசனை வழங்கப்படும்.

ஏனைய சேவைகள் :
* கட்டட மதிப்பீடு தயாரித்தல்
* வேலைகளை மேற்பார்வை செய்தல்/ஆலோசனை வழங்கல்
* ஒப்பந்த வேலைகளை ஒழுங்குபடுத்தல்.

(48354) (7.6.3)

தொடர்பு: 077 349 6085

**Declaration for change of name**

I am **Mr. Anthony Croos Jenet** of Navaly East Manipay declare and affirm that my name has been altered as **Pragasam Ranjith**. From today and that I shall be signing all documents as Pragasam Ranjith here

(48347)(10.6.3) **A. Pragasam Ranjith.**

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 9.30am, 12.00noon, 2.30pm, 5.00pm, 7.30pm

Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



**வீடு விற்பனைக்கு**

ஊரெழு கிழக்கு கலைவாணி முன்பள்ளியை அண்மித்த ஒழுங்கையில் 4 பரப்பு காணியில் 2 அறை,2 ஹோல் சமையல் அறை,கிணறு,மலசலகூடத்துடன் வீடு விற்பனைக்கு **Call : 0775099332**

**Personal Class**

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar, Sinhalam (சிங்களம்) கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (48348) (7.6.3)

தொடர்பு: K.K.S Road, Thavady. 077 836 1521

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)

Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222

**நோய் தீர்ப்பதற்கான வர்மக்கலை**

நோய் தீர்ப்பதற்கான வர்மக்கலை கற்பித்துக் கொடுக்கப்படும். தமக்கும் சுயமாக செய்து கொள்ளவும், பிறருடைய நோயைக் குண மாக்கவும் உதவக்கூடிய சித்தர்களுடைய ஓர் அரிய கலையாகும். நாளை (25.05.2014) பி.ப 4.30 மணிக்கு அறிமுக விளக்கம் தரப்படும். அதன்பின் வகுப்புக்கள் ஆரம்பமாகும். (48343)(5.6.3)

இடம்: தியாகி அறக்கொடை நிலையம் (TCT Super Market)
No.527,Navalar Road, Nallur,Jaffna.

**மணமகள் தேவை**

* 80இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20¼ பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் 5 அடி 2 அங்குலத்தில் தேவை.
* 79இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 42 பாவமுடைய சொந்த நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு 5 அடி 1 அங்குலத்தில் படித்த மணமகள் தேவை.
* 84இல் பிறந்த 1இல் செவ்வாய் 73 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 75இல் பிறந்த 7இல் செவ்வாய் 26½ பாவமுடைய BBA Accountant மணமகனுக்கு பட்டதாரி மணமகள் 5 அடி 2 அங்குலத்தில் தேவை.
* 85இல் பிறந்த 10 இல் சூரியனும், செவ்வாயும் 58 பாவமுடைய BSc, MSc, MPEL முடித்து Researcher ஆக பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 81இல் பிறந்த 12இல் சூரியனும், செவ்வாயும் 41 பாவமுடைய BBA Bank இல் பணிபுரியும் மணமகனுக்கு படித்த பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல. 435/3, கோவில் வீதி, நல்லூர்.
T.P : 077 607 0862 (48348) (7.6.3)

**மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம் யாழ் மாவட்டம்**

**வருடாந்த பொதுக்கூட்டமும் "நினைவுச்சிறகுகள்" எனும் மலர் வெளியீடும்**

திகதி: 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி
இடம்: திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபம்
286, பிரதானவீதி,யாழ்ப்பாணம்.(பெற்றோல் செற் முன்பாக)

மக்கள் வங்கி ஓய்வூதியர்களை தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

தலைவர் பி.தருமநாயகம். செயலாளர் அ.இராசநாயகம்.

## வீதி விபத்துக்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துக

### நயினை அம்பாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு மக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 24

வாகனங்களை போட்டி போட்டுக் கொண்டு அதிவேகமாகச் செலுத்துதல், மற்றும் அதிக எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றிச் செல்லல் போன்ற நடவடிக்கைகள் நயினாதீவு அம்பாள் ஆலய திருவிழாக் காலத்தில் இடம்பெறாதிருக்க இம்முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். பண்ணை -ஊர்காவற்றுறை வீதி காப்பெற் வீதியாக மாற்றப்படும் பணிகள் தற்போது துரித கதியில் நடைபெறுகின்றன.

பண்ணைப் பாலம் முதல் அராலிச் சந்தி வரையான வீதியில் ஆங்காங்கே பாலம், மதகுகள் அமைக்கும் பணிகளும் வீதி அகலிப்புப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

எனவே அம்பாள் ஆலய திருவிழாக் காலங்களின் போது போக்குவரத்து நெருக்கடிகள் காரணமாக வாகனங்களின் பயணத்துக்கு உரிய கட்டுப்பாடுகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி அதனூடாக வீதி விபத்துக்களைத் தவிர்க்க முன்வர வேண்டும். நயினை ஆலயத் திருவிழா ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடலின் போது அதிகரித்த வேகம், அளவுக்கு அதிகமான பயணிகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லல் போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு பாதுகாப்பான பயணத்துக்கு உரிய ஏற்பாடுகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-7)

> பண்ணை -ஊர்காவற்றுறை வீதி காப்பெற் வீதியாக மாற்றப்படும் பணிகள் தற்போது துரித கதியில் நடைபெறுகின்றன.

# இணை மருத்துவ மாணவர்கள் யாழ்ப்பாணத்திலும் போராட்டம்

### கற்கை நெறியை 4 வருடங்களாக்கக் கோரி காலவரையறையற்ற வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே 24

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த இணை மருத்துவ விஞ்ஞான அலகு மாணவர்கள் கடந்த 13 ஆம் திகதி முதல் காலவரையறையற்ற விரிவுரை பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர்.

தமக்குரிய நான்கு வருட பட்டப்படிப்பை முழுமையாக நடத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தி நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் இணை மருத்துவ விஞ்ஞான அலகு மாணவர்கள் நடத்தி வரும் தொடர் போராட்டத்தில் யாழ்ப்பாண மாணவர்களும் தற்போது இணைந்துள்ளனர்.

நாடு முழுவதிலும் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக இணை மருத்துவ விஞ்ஞான அலகு மாணவர்கள் விரிவுரை புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



கோப்புப்படம்

எனினும் யாழ். பல்லைக் கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட முடியாத நிலை இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இருந்தாலும் தற்போது அவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இணை மருத்துவக் கற்கை நெறியானது மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம், இயன் மருத்துவம், கதிர் படமெடுப்பு, மருத்தாக்கவியல் மற்றும் தாதியியல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய ஒன்றாகும். யாழ். பல்கலைக் கழகத்தில் தாதியியல், மருந்தாக்கவியல், மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானங்கள் ஆகிய மூன்று கற்கை நெறிகள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றில் 160 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இக் கற்கை நெறி, கல்வி அபிவிருத்திக்கும், சுகாதார சேவையின் முன்னேற்றத்துக்கும் மிக முக்கியமானதாகும். சர்வதேச நாடுகளில் சுகாதாரக் கற்கை நெறியின் கல்விக்கான காலம் அதிகரிக்கப்படும் நிலையில், இலங்கையில் மட்டும் அது நான்கு வருடங்களில் இருந்து மூன்று வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் சுகாதார சேவைத் தரம் பெரும்பாதிப்புக்கு உள்ளாகும் என்று மாணவர்கள் கூறுகின்றனர்.

எனவே இக்கற்கை நெறியை ஆரம்பிக்கும் போது தெரிவிக்கப்பட்டமைக்கமைய குறிப்பிட்ட கற்கை நெறியை நான்கு வருடங்களுக்கானதாக மாற்றும் வரை யாழ். பல்கலைக் கழக இணை மருத்துவ விஞ்ஞான மாணவர்களாகிய தாம் காலவரையறையற்ற வகையில் பல்கலைக்கழக விரிவுரைகளைப் புறக்கணிக்கவுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-400)

## ஊழியர் சேமலாபநிதி செலுத்தாதோர் மாட்டினர்

தென்மராட்சி, மே 24

தொழில் நிலையங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாபநிதிக் கட்டுப்பணத்தைச் செலுத் தாத சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தகர்கள் ஆறுபேர் தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டுள்ளனர்.

தொழில் நிலையங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கான சேமலாப நிதி கட்டுப்பணம் கட்டாயமாக தொழில் திணைக்களத்துக்குச் செலுத்தப்பட வேண்டும் என தொழில் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் தொழில் நிலையங்களில் பணி புரிவோருக்கு உரிய கட்டுப்பணம் செலுத்தாத வர்த்தகர்களே தற்போது சிக்கிக் கொண்டுள்ளனர்.

குறித்த ஆறு பேருக்கும் எதிராக நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் தொழில் திணைக்கள உத்தியோகத்தரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (ற-9)

## திருவிழாவை முன்னிட்டு புனரமைப்புப் பணி தீவிரம்



யாழ். குடாநாட்டின் பிரசித்தி பெற்ற தேவாலயங்களில் ஒன்றான பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பெருந் திருவிழா ஆரம்பமாகவுள்ளதையொட்டி புனரமைப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஆலய முகப்பு முற்றத் துக்கு பளிங்குக் கற்கள் பதிக்கும் பணிகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அந்தோனியார் ஆலயத்தின் கொடியேற்றம் எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெற்று ஜூன் 13 ஆம் திகதி வரை திருவிழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

# கடற்பாதைச் சேவை ஸ்தம்பித நிலையில்

### தீவுப் பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 24

குறிகாட்டுவான் - நயினாதீவு சேவையில் உள்ள கடற்பாதைச் சேவை இயந்திரக் கோளாறு காரணமாக கடந்த ஐந்து தினங்களுக்கு மேலாக இடம்பெறவில்லை என்று நயினாதீவு மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் குறித்த படகுச் சேவை உள்ளது குறிப்பிடத்தக்கது.

நயினாதீவு அம்பாள் ஆலய திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயத்தின் தேவைக்கும் மற்றும் அன்னதான சபையின் தேவைக்கும் பெருமளவு பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டியுள்ள சமயத்தில் இவ்விதம் பாதைச் சேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இது விடயத்தில் உரிய கவனம் எடுத்து பாதைச் சேவை தடையின்றி நடைபெற ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தச் சேவை வெகுவிரைவில் நடைபெறும் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் காத்திருக்கின்றனர். (வ-7)

## பிரதேச சபையின் அனுமதி பெறாமல் வீடுகள் அமைப்பு

### விண்ணப்பங்கள் இழுத்தடிக்கப்படுவதால் மக்கள் களத்தில்

பளை, மே 24

பளைப் பிரதேச சபையின் கட்டட அனுமதி கிடைக்காததால் ஏமாற்றமடைந்த மக்கள், சபையின் முன் அனுமதியின்றியே வீடுகளை அமைத்து வருகின்றனர்.

வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் வீடுகளை அமைப்பதற்கு சபையின் முன் அனுமதிக்கு விண்ணப்பித்து மூன்று மாதங்களாகியும் பொது சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பை காரணம் காட்டி அனுமதி வழங்கல் இழுத்தடித்து வருவதால் அனுமதி பெறாமலேயே அவர்கள் கட்டடங்களை அமைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீடமைப்புத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் குறித்த காலப் பகுதிக்குள் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனை நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

> பொது சுகாதார பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்பை காரணம் காட்டி அனுமதி வழங்கல் இழுத்தடிப்பு.

## புதிய தரமான திராட்சைப்பழம்; இம்முறை குடாநாட்டில் உற்பத்தி

குடாநாட்டில் தரமான திராட்சைப்பழத்தை உற்பத்தி செய்வதற்கான பரிசோதனை நடவடிக்கை வெற்றியளித்துள்ளதால் இந்த வருடம் திராட்சைப்பழ உற்பத்தியாளர்கள் அதிகூடிய இலாபத்தை பெறக்கூடியதாக இருக்கும் என்று யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"1960 ஆண்டு காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் திராட்சைப்பழ உற்பத்தி அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் 150 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் திராட்சை உற்பத்தி செய்யப்பட்டது.

ஏனைய பயிர்களுடன் ஒப்பிடுகையில் திராட்சை செய்கைக்கு உற்பத்திச் செலவு அதிகமாக இருந்தாலும் அதிகூடிய வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதாலும் விவசாயிகள் இந்த உற்பத்தியில் ஆர்வம் காட்டியுள்ளனர். அதிகூடிய தேறிய வருமானமாக 5-6 லட்சம் வரையான வருமானத்தைப் பெற்று வந்துள்ளனர்.

எனினும் இறக்குமதி செய்யப்படுகின்ற திராட்சை பழங்களின் தரத்தை விட பருமன் சிறியதாகவும் ,நெருக்கமானதாகவும், புளிப்புத்தன்மையுடையதாகவும் இருப்பதால்சந்தை வாய்ப்பில் தளர்வு ஏற்பட்டது.

இதனால் பழத்தின் தரத்தை மேம்படுத்த பரிசோதனை நடவடிக்கைகளை கடந்த 2013 ஆம்ஆண்டு விவசாயத்திணைக்களம் மேற் கொண்டு வந்தது.

இந்த வருட உற்பத்திக்கு இந்தப் பரி சோதனை நடவடிக்கை சாதக மாக இருப்பதால் திராட்சைப்பழ செய்கையாளர்கள் உரிய ஆலோசனைகளைப் பெற்று உற்பத்தியை மேற்கொள்ள முடியும்.

'ஸ்ரேல் புளூ' இன திராட்சை உற்பத்தி தற்போது யாழ். மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இன திராட்சை புத்தூர், உரும்பிராய், மண் கும்பான், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வருடம் உற்பத்தியில் விவசாயிகள் அதிக இலாபத்தைப் பெறமுடியும்"- என்றார். (வ-14)

## தேனீயைக் கொல்லாதீர்கள் கொண்டு வந்து தாருங்கள்

### பிரதி விரிவாக்கல் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, மே 24

தேனீக்கள் எங்கிருந்தாலும் அவற்றைப் பிடித்துத் தாருங்கள். நான் அவற்றைப் பாதுகாத்துத் தருவதுடன் அவற்றின் மூலம் வருமானம் ஈட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதி விரிவாக்கல் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு தெரிவித்தார்.

"வவுனியா மாவட்டத்தில் தேனீக்களை அழிப்பதில் சிலர் ஈடுபட்டுள்ளனர். தேனீக்களை அடித்துக் கொல்வதைத் தவிர்த்து அந்தத் தேனீக்களை உரிய வகையில் பெட்டிகளில் அடைத்து எம்மிடம் கொண்டு வந்து தாருங்கள். அந்தத் தேனீக்களை வளர்த்து தேன் உற்பத்தியை மேற்கொள்வதற்குரிய கட்டமைப் பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிக வருமானம் ஈட்ட முடியும். அதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் வவுனியா மாவட்டத்தில் பெற்றுக் கொள்ளும் வசதி போதியளவு உள்ளது. தேனீ வளர்ப்பு சம்பந்தமாக போதிய பயிற்சிகளை வழங்கத் தயாராக வுள்ளோம்"- என்றார். (ச-402)

# முன்னறிவித்தல் இன்றி நிறுத்தப்படும் மின்சாரம்

### அத்தியாவசிய சேவைகள் பாதிப்பு

நெடுங்கேணி,மே 24

நெடுங்கேணி பிரதேசத்துக்கான மின்சாரம் எந்தவித முன்அறிவித்தலும் இன்றி முல்லைத்தீவு மின்சார சபைக் கிளையால் தடைசெய்யப்படுவதால் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

மின்சார சபையின் முல்லைத்தீவு கிளையால் முன் அறிவித்தல் இன்றி அடிக்கடி மின் விநியோகம் தடை செய்யப்படுவதால் நெடுங் கேணி வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், வங்கிகள், அரச



மின்சாரம் இன்மையால் பெற்றோல் நிரப்புவதற்கு காத்திருக்கும் நபர்

திணைக்களங்கள், தனியார் கல்வி நிலையங் கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

நெடுங்கேணி பிரதேசத்துக்கு நீண்ட தூரங்களில் இருந்து அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வரும் மக்கள் திடீரென மின்சாரம் தடைப்படுவதால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-435)

## கலப்படத் தேன் முல்லைத்தீவில் விற்பனை

முல்லைத்தீவு, மே 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது செயற்கைத் தேன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அதனால் மக்கள் பல பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

செயற்கையாக தேன் தயாரிக்கும் தேன் விற்பனையாளர்களை பொதுமக்கள் இனம் கண்டு பொலிஸாரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

சிறிதளவு தேனுடன் சீனிப் பாணியைக் காய்ச்சி சிறந்த தேன் என்று கூறி போத்தலொன்று 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகிறது. இத்தகைய கலப்படத் தேனை மக்கள் வாங்கி வீட்டில் வைத்ததும் அது உறைந்து போய்விடுவதாக குறித்த கலப்படத் தேனை வாங்கிய மக்கள் கூறுகின்றனர். எனவே கலப்படத் தேன் விற்பனை குறித்து பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-500)

## அபிவிருத்தி காணாத அழிவடைந்த நிலையில் 2 கட்டடங்கள்





முள்ளியவளை,மே 24

முள்ளியவளைப் பகுதியில் மீள் குடியேற்றம் இடம்பெற்று 5 ஆண்டுகள் கடந்தும் அப் பகுதியில் இருந்த பல கட்டடங்கள் புனரமைக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். இந்தக் கட்டடங்கள் இதுவரை யார் கண்ணிலும் படவில்லையா என்றுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வித்தியானந்தக் கல்லூரியில் அழிவடைந்தநிலையில்காணப்படும் இரசாயனவியல் ஆய்வு கூடம்,முள்ளியவளை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் ஆகிய இரண்டுமே இது வரை புனரமைப்புச் செய்யப் படவில்லை என்று மக்கள் கூறினர். எனவே இந்தக் கட்டடங்களை புனரமைத்து மாணவர்களது பயன்பாட்டுக்கு வழங்க வேண்டும் என்று பெற்றோர் கோரியுள்ளனர். (ச-433)

## உப உணவு பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு

கிளிநொச்சி, மே 24

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 103 மண் மாதிரிகளும் 27 மண் மட்டப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனடிப்படையில்உபஉணவு பயிர் செய்யக் கூடிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டன. அதனைத் தொடர்ந்து வயல் நிலங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக 2½ ஏக்கர் நிலப்பரப்பு 10 பயனாளிகளுக்குப் பிரித்து வழங்கப் பட்டு நிலக்கடலை, கௌபி மற்றும் பயறு போன்ற பயிர் வகைகளில் குறுகிய வயதுடையதும் அதிக விளைச்சல் தரக் கூடியதுமான புதிய இனங்களைப் பயிரிடல் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. (ஓ)

## 2 கிராமங்களுக்கு குடிதண்ணீர் உடன் விநியோகியுங்கள்

### கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் உத்தரவு

கிளிநொச்சி, மே 24

முல்லைத்தீவு, கரைதுறைப் பற்றில் குடிதண்ணீர் தட்டுப் பாடு நிலவும் இரு கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை உடனடியாக மேற் கொள்ளுமாறுகரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் கரை துறைப் பற்று பிரதேச சபைக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஐயன்கோயிலடி கிராமம், கேப்பாப்பிலவு மாதிரி கிராமம் ஆகியவற்றில் தற்போது குடி தண்ணீருக்கான கடும் தட்டுப் பாடு நிலவி வருகின்றது.

இந்தக் கிராமங்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் மேற் கொள்ளுமாறு மக்கள் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத் திருந்தனர். அதனையடுத்தே



கோப்புப்படம்

இந்தக் கிராமங்ளுக்கு உடனடியாக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தால் கரை துறைப்பற்று பிரதேச சபைக்கு கடிதம் அனுப்பி வைக் கப்பட்டிருந்தது.

அதனையடுத்து இந்த இரு கிராமங்களுக்கும் உடனடியாக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்வதற் குரிய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் சு.ரவீந்திரன் தெரிவித்தார். (ச-55)

## நான்கு ஆண்டுகள் கடந்தும் போக்குவரத்து வசதியில்லை

### துணுக்காய் மக்கள் விசனம்

துணுக்காய், மே 24

துணுக்காய் ஐயன்கன்குளம் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று முல்லைத் தீவு அரச அதிபரிடம் குறிப்பிட்ட கிராமங்களைச்சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மீளக்குடியமர்ந்து நான்கு ஆண்டுகள் காலம் கடந்தும் எமது கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் மேற் கொள்ளப்படவில்லை என்று அப்பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்கள் பாடசாலைகளுக்கு நடந்து செல்வதனால் தாமதமாகவே செல்ல வேண்டி ஏற்படுகின்றது என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் தினமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே இந்தக் கிராமங்களுக் கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ச-18)

## முல்லைத்தீவுக்கு மின்சாரம் வழங்க விசேட வேலைத்திட்டம்

### குழுவும் நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் அனைத்துக் குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்கும் வகையில் இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். அதற்காக இலங்கை மின்சார சபையின் ஓய்வுபெற்ற அதிகாரியான நவரட்ணம் குகதாசன் தலைமையில் ஓய்வுபெற்ற ஐந்து அதிகாரிகளைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மின்சார வசதியை பெற்றுக் கொள்ளாதோரின் விவரங்களை சேகரிப்பதுடன் அவர்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-102)



### உடலுக்கு ஆரோக்கியம் தரும் தீய பழக்கங்கள்

வீட்டில் பெற்றோர்கள், நம்மிடையே உள்ள சில தீய பழக்கங்களைப் பார்த்து பேசுவார்கள். ஆனால், அந்த தீய பழக்கங்களும் உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தை கொடுக்கத்தான் செய்கின்றன. அந்த மாதிரியான சில தீய பழக்கங்கள் குறித்து நோக்குவோம்.

### நகம் கடிப்பது

சிறு குழந்தைகள் முதல் பெரியவர்வரை அனைவரிடமும் இருக்கும் ஒரு பொதுவான பழக்கம்தான் நகம் கடிப்பது. இதைத் தீய பழக்கம் என்று நினைக்கிறோம். ஆனால் ஆய்வு ஒன்று, நகங்களை கடிப்பது ஒரு நல்ல பழக்கம் என்று சொல்கிறது. ஏனெனில், நகங்களைக் கடிக்கும் போது, உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது.



எனவே நகம் கடிக்கும் பழக்கம் இருந்தால், அது நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான ஒரு பழக்கமாகும்.

### காலை உணவு

சிலருக்கு படுக்கையிலேயே உணவை உண்ணும் பழக்கம் இருக்கும். இந்த பழக்கத்தை மிகவும் மோசமான பழக்கம் என்று சொல்வார்கள். ஆனால் இந்த பழக்கத்தை மேற்கொண்டால், செரிமான பிரச்சினையில் இருந்து விடுபடலாம். வேண்டுமெனில் முயற்சித்து பாருங்கள்.

### துப்புதல்

அடிக்கடி எச்சில் துப்புவது மற்றவர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துவதோடு, அது ஒரு தீய பழக்கம் என்றும் சொல்வோம். ஆனால் எச்சில் துப்புதலும் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும் ஒரு நல்ல பழக்கம்தான். எப்படியானால், எச்சில் துப்பினால், சுவாசிக்க எளிதாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், உடற்பயிற்சி செய்யும்போது, வாயில் அதிகப்படியான எச்சில் சுரக்கும். அவ்வாறு சுரக்கும் எச்சிலை உடனே துப்பினால், நன்கு நிம்மதியாகச் சுவாசிக்கலாம்.

# உடலுக்கு ஆரோக்கியம் தரும் தீய பழக்கங்கள்



### அதிகமான தூக்கம்

பெரும்பாலான வீடுகளில், விடுமுறை நாள்களில் நீண்ட நேரம் தூங்கும் பழக்கம் இருக்கும். பலர் இந்தப் பழக்கத்தை ஆரோக்கியமற்ற பழக்கம் என்று சொல்வார்கள். ஆனால் உண்மையில் இது ஒரு நல்ல பழக்கம். அதிலும் வாரத்துக்கு ஒரு முறை இவ்வாறு நீண்ட நேரம் தூங்கினால், ஞாபக சக்தியானது அதிகரிக்கும்.



### உடற்பயிற்சியைத் தவிர்ப்பது

உண்மையில் தினமும் உடற்பயிற்சியை மேற்கொண்டு, திடீரென்று அவற்றை சிறிது நாள்கள் தவிர்த்தாலும் உடலுக்கு மிகவும் ஆரோக்கியமானது. எப்படியெனில், இவ்வாறு உடற்பயிற்சியை திடீரென்று தவிர்க்கும் போது, உடற்பயிற்சியால் தசைகளில் ஏற்பட்ட காயங்கள் குணமாகி, மறுமுறை உடற் பயிற்சியை மேற்கொள்ளும் போது வலுவுடன் செயற்பட முடியும்.





### சுவிங்கம் மெல்லுவது

தீய பழக்கத்திலேயே மிகவும் மோசமானது என்று சொல்வது சுவிங்கம் மெல்லுவது தான். அதிலும் பேசிக் கொண்டிருக்கும் போது சுவிங்கம் மென்றால், மற்றவர்களுக்கு அது எரிச்சலை உண்டாக்கும். மேலும் திமிர் அதிகம் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தும். ஆனால் சுவிங்கம் மெல்லுவது உடலுக்கு மிகவும் நல்லது. அதிலும் இந்தப் பழக்கத்தால், மூளை நன்கு செயற்படுவதோடு, அடிக்கடி பசி ஏற்படும் உணர்வைத் தடுக்கும். இவை அனைத்தும் நல்ல பழக்கங்கள்தானே என்று கருதி நகம் கடிப்பது, சுவிங்கம் மெல்லுவது உள்ளிட்ட பழக்கங்களை புதிதாக கற்றுக் கொள்ள நீங்கள் விரும்பாதீர்கள்.

சில தீய பழக்கங்களும் ஒரு வகையில் நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கத்தான் செய்கின்றன.

# மருத்துவ குணம் கொண்டது கற்பூரவள்ளி


வாசனை மிக்க, மருத்துவ மூலிகையான கற்பூரவள்ளி உடலுக்கு ஏராளமான மருத்துவ நலன்களை அள்ளித் தருகிறது.

இந்தச் செடியின் தண்டு முள்போல நீண்ட மயிர்த் தூவிகளைக் கொண்டிருக்கும். இதன் இலைகள் தடிப்பாகவும், மெதுமெதுப்பாகவும் இருக்கும்.

கசப்புச் சுவையும், காரத்தன்மையும் வாசனையும் கொண்ட இதன் இலை மருத்துவக் குணம் கொண்டதாகும். இது வீடுகளில் பரவலாக வளர்க்கப்படுகிறது. கற்பூரவள்ளி தாவரத்தின் பாகங்கள் இருமல், சளி, போன்ற நோய்களுக்கு முக்கிய மருந்து. வியர்வை பெருக்கியாகவும், காய்ச்சல் தணிக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. இலைச் சாற்றை சர்க்கரை கலந்து குழந்தைகளுக்கு கொடுக்க இருமல் நீங்கும். இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை இவற்றை நன்கு கலக்கி நெற்றியில் பற்றுப் போடத் தலைவலி நீங்கும், சூட்டைத் தணிக்கும்.

இலை, காம்புகளைக் குடிநீராக்கிக் கொடுக்க இருமல், சளிக் காய்ச்சல் நீங்கும். இதன் இலைகளை எடுத்து கழுவி சாறெடுத்து இரண்டு மில்லி லீற்றர் சாற்றுடன் எட்டு மில்லி லீற்றர் தேன் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் மார்புச் சளி நீங்கும்.

இந்த மூலிகை குழந்தைகளின் அஜீரண வாந்தியை நிறுத்தக் கூடிய மருத்துவ குணத்தைப் பெற்றிருக்கிறது. கட்டிகளுக்கு இந்த இலையை அரைத்துக் கட்ட கட்டிகள் கரையும், தசைகள் சுருங்குவதைத் தடுக்கும். இலையின் சாறு முழுமையாக நீரில் இறங்கி தண்ணீர் லேசாக பச்சை நிறத்தை அடைந்து இருக்கும். அந்தநீரை மட்டும் குழந்தைக்குப் பருகுவதற்குக் கொடுங்கள். 2 அல்லது 3 நாள்களுக்கு இதுபோன்ற நீரையே கொடுத்து வாருங்கள். குழந்தைக்கு சளி கட்டுப்பாட்டுக்குள் வரும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காலத்துக்கேற்ற துணிச்சலான முடிவு

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் நிகழ்வில் இலங்கையின் ஜனாதிபதி யுடன் இணைந்து பங்குபற்றப் போவதில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். காலத்துக்கேற்ற துணிச்சலான முடிவு அது.

மூன்று காரணங்களுக்காக முதலமைச்சரின் முடிவு முக்கியமானது.

நெருக்கடியான தருணங்கள் வரும்போதெல்லாம் தமிழர்களைக் கறிவேப்பிலைபோன்று பயன்படுத்தி விட்டுத் தூக்கி எறிவது இலங்கைச் சிங்கள அரசியல் தலைமைகளின் வழமை. கடந்த காலம் அதற்குச் சிறந்த உதாரணம். இந்தத் தடவையும் முதலமைச்சரைத் தன்னுடன் அழைத்துச் செல்வதன் மூலம் சிங்கள - தமிழ்த் தலைவர்களிடையே நல்லுறவு இருக்கின்றது, பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்ப்பதற்கு வாய்ப்புகளும் அதற்கான சூழலும் உள்ளது என்று இந்தியத் தலைவருக்குக் காட்டுவது மஹிந்தவின் நோக்கம். இந்தப் பாசாங்கு வெளிப்படுத்தப்பட்டு, நோக்கம் முறியடிக்கப்படவேண்டும். இது முதல் காரணம்.

மோடியின் பதவியேற்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளக்கூடாது என்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து எதிர்ப்புக் காட்டிவரும் நிலையில், வடக்கு முதலமைச்சர் அந்த நிகழ்வில் கலந்து கொண்டால் அது தமிழக - ஈழத் தமிழர் உறவுகளைப் பாதிப்பதுடன் தமிழகத்தின் ஆதரவிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் முதலமைச்சர் நிகழ்வில் கலந்துகொள்ளாமல் விடுவதே சிறந்தது. இது இரண்டாவது காரணம்.

மூன்றாவது காரணம், வடக்கிலே தமிழ் மக்களின் ஆட்சிக்கு இருக்கக்கூடிய தனித்துவம் - முக்கியத்துவம் - தனிப்பட்ட அழைப்பு ஒன்று இல்லாமல் பதவியேற்பு நிகழ்வில் முதலமைச்சர் கலந்துகொள்வதன் மூலம் இழக்கப்பட்டுவிடும். அது தவிர்க்கப்பட வேண்டியதே.

எனவே முதலமைச்சர் மிகச் சரியான முடிவையே எடுத்திருக்கிறார். நல்லிணக்கத்துக்கான வாய்ப்பை அவர் தட்டிக்கழித்துவிட்டார் என்று யாரும் அவர் மீது குற்றஞ்சாட்ட முடியாது. தனது பதவியேற்பில் இருந்து நேற்று வரையில் பல சமயங்களில் அவர் போதியளவுக்கு கொழும்பு அரசை நோக்கி நல்லிணக்க அறிகுறிகளைக் காட்டியிருக்கிறார். பதிலுக்கு கொழும்பு அரசு நல்லிணக்க சமிக்ஞைகளைக் காட்டவில்லை. இதனை முதலமைச்சரே பொது மேடைகளில் பல சமயங்களில் கூறி வருத்தப்பட்டிருக்கிறார்.

உண்மையான நிலைவரம் அப்படி இருக்கும்போது, வெறுமனே நடிப்பது தேவையற்றதுதான். அதுவும், இலங்கை விவகாரத்தில் காத்திரமான பங்களிப்பைக் கொண்டுள்ள இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளில் நடிப்பு மிக மோசமான விளைவுகளுக்கு இட்டுச் சென்றுவிடும்.

குட்டக்குட்டக் குனிந்து கொண்டே இருக்க முடியாதுதானே! எனவே முதலமைச்சர் நிமிர்ந்திருப்பது நியாயமானது; வரவேற்கத்தக்கது. இந்த முடிவை அவர் தனியாகவும் எடுக்கவில்லை. தனது அமைச்சரவையின் ஒட்டுமொத்த ஆதரவுடனும் பரிந்துரையுடனும்தான் எடுத்துள்ளார்.

முதலமைச்சரின் இந்த மறுதலிப்பு ஊடாக கொழும்பு அரசுக்கும் மோடி அரசுக்கும்கூடக் காத்திரமான செய்தி வழங்கப்பட்டுள்ளது. தமிழர்கள் என்ன உணர்கிறார் கள், எதிர்பார்க்கிறார்கள் என்ற செய்தி அது. அதனை இரு அரசுகளும் தெளிவாகப் புரிந்து கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கையில் புரையோடிப்போயுள்ள பிரச்சினைக்கு நிரந்தரமான அமைதியான தீர்வு ஒன்று காணப்படவேண்டும். தமிழர்கள் மிக நீண்ட காலமாகக் காத்திருந்தே சூழித்து விட்டார்கள்.

மலேரியா காணப்படும் நாடொன்றுக்குச் செல்வதற்கு முன்னர் மலேரியா தொற்றிக்கொள்வதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கான தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவும்.

# மோடியை மஹிந்தவுடன் ஒப்பிடுவதா?

மோடியை இந்து மதத்தின் காவலராகச் சித்திரித்து அரச சார்புப் பத்திரிகைகளில் கார்ட்டூன்கள் கூட வெளிவந்துள்ளன. இறுதிப் போரின் போது தமிழர்கள் ஆயிரக் கணக்கில் கொன்றொழிக்கப் பட்டபோது அதனை வேறு வகையில் நியாயப்படுத்தவே எமது நாட்டின் அரசுத் தலைமை முயன்றது.

சேரலாதன்



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு நரேந்திரமோடி தான் இந்தியாவின் அடுத்த பிரதமர் என்பதும் தெரிந்து விட்டது. இந்த நிலையில் எமது நாட்டின் அரசுத் தலைவரையும், மோடியையும் ஒப்பிட்டு மகிழ்ச்சி அடைவதில் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஒரு சிலர் ஒரு படி மேலே போய் ராஜபக்ஷவின் வழியில் மோடியின் வெற்றி அமைந்துள்ளதாக வும் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

மிகப் பெரிய நாடான இந்தியாவில் ஜனநாயக மரபுகள் செழிப்பாக உள்ளன என்பதை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலும் அதன் முடிவுகளும் எடுத்துக் காட்டியுள்ளன. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில தவறான சம்பவங்கள் இடம்பெற்றாலும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது ஒரு நேர்மையான தேர்தல் அங்கு நடைபெற்று முடிந்ததை அவதானிக்க முடிந்தது. மோடி மோசடிகள் செய்து தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. மாறாக அவரது ஓயாத உழைப்புக்குக் கிடைத்த பரிசு என்றே அவரது வெற்றி போற்றப்படுகின்றது. மேலும் இனவாதத்தையும், மத வாதத்தையும் அவர் தமது பரப்பு ரைகளின் போது வெளிக்காட்டவில்லை. இந்திய மக்களுக்காகவே இந்திய தேசம் என்பதையே அவர் வலியுறுத்திக் கூறினார். எந்தவொரு இடத்திலும் இந்துக்கள், முஸ்லிம்கள் என அவர் பிரித்துக் கூறவில்லை. இதன் காரணமாகவே மோடிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என எதிர்பார்க்கப்பட்ட முஸ்லிம் மக்கள் பெருமளவில் மோடிக்குத் தமது வாக்குகளை வழங்கினர். மோடி முஸ்லிம்களுக்கு எதிரானவரென பரப்புரைகளில் ஈடுபட்டு அந்த மக்க ளின் வாக்குகளை அள்ளிக் குவிக் கலாமென எண்ணி யிருந்த சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சி தேர்தல் முடிவுகள் வெளியானபோது பெரும் ஏமாற்றத் தைச் சந்தித்தது. மோடியின் பக்குவ மான செயற்பாடுகளைப் பார்க்கும் போது அவர் இந்தியாவிலுள்ள சகல இனத்தவர்களையும் அரவணைத்துச் செல்வார் என்றே தெரிகின்றது.

ஆனால் எமது நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொண்டிருக்கின்றோம். இங்கு வாழ்கின்ற இரண்டாவது இனமான தமிழ் மக்கள், நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து இன்னல்களையே அனுபவித்து வருகின்றனர். பெரும்பான்மையினத் தலைவர்கள் இனவாதம் பேசினால்தான் அதிகாரத்துக்கு வர முடியுமென்ற மாயையில் சிக்குண்டு கிடக்கின்றனர். சிறுபான்மை இனத்தவர்களின் வீழ்ச்சியிலேயே பெரும்பான்மை மக்கள் எழுச்சி பெற முடியுமென்ற தோற்றப்பாடும் தெரிய ஆரம்பித்து விட்டதால் நிலைமை மோசமாகவே மாறிவிட்டது.

மனித உரிமைகளுக்காகப் போராடியவர் என்ற நற்பெயர் எமது ஜனாதிபதிக்கு உண்டு. அவர் பதவியில் அமரும்வரை அதற்கு ஏற்றாற்போன்று தமது நடவடிக்கைகளையும் அமைத்துக் கொண்டார். ஆனால் ஆட்சியில் அமர்ந்ததும் தான், வினை ஆரம்பித்தது. வழக்கம் போன்று ஏனைய தலைவர்கள் சென்ற வழியிலேயே அவர் நடப்பதற்கு ஆரம்பித்தார். சிங்கள, பௌத்த கோட்பாடுகளை முன்னிறுத்துவதையே தமது பிரதான இலக்காக அவர் கருதத் தொடங்கினார். பெரும்பான்மையின மக்களின் ஆதரவு மட்டுமே இருந்தால் போதும் தம்மால் எதனையும் சாதித்துவிட முடியுமென்ற நிலைப்பாட்டினுள் மூழ்க ஆரம்பித்தார். இதனால் சிறுபான்மை இனத்தவர் மீதான அக்கறை அவரிடமிருந்து விலக ஆரம்பித்துவிட்டதாகப் பலரும் பகிரங்கமாகக் கூறும் அளவுக்கு நிலைமை மாறியது.

இந்த நாட்டின் வரலாற்றில் 2009 ஆம் ஆண்டை எளிதில் மறந்துவிட முடியாது. அந்த ஆண்டு மே மாதம் உலகம் இதுவரை காணாத மனிதப் பேரவலம் இங்கு நிகழ்ந்தது. தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்கான மனிதாபிமானப் போர் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பயங்கரவாதத்தை ஒழிக்கின்றோம் என்ற வலுவான கோசம் உலக நாடுகளின் கண்களை மறைத்ததால், இலங்கை கேட்ட உதவிகளையெல்லாம் தாராளமாக வாரி வழங்கின. விடுதலைப் புலிகள் மீதான வெஞ்சினத்தைத் தீர்க்கும் பொருட்டு சோனியாவின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இந்திய மத்திய அரசு தேவை யான உதவிகள் அனைத்தையும் வழங்கியது. இறுதிப் போரின் போது ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டுச் சீரழிக்கப்பட்ட போதிலும் இந்தியாவின் பக்கமிருந்து ஒரு சிறிய அனுதாப வார்த்தை கூட வெளிக் கிளம்பவில்லை. மாறாக அங்கு மகிழ்ச்சியே நிலவியது.

போரில் கிடைத்த வெற்றி தென்பகுதி அரசியல்வாதிகளுக்குப் பெரும் அரசியல் மூலதனமாக மாறிவிட்டது. போர் வெற்றியைக் காட்டிக் காட்டியே ஜனாதிபதி தரப்பினர் வெற்றிக் கனிகளைப் பறித்து வருகின்றனர். போரில் கொல்லப்பட்ட தமிழர்கள் தொடர்பாக ஒரு சிறிதளவேனும் அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை. தெற்கில் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம் பெறும்போது போரில் இறந்தவர்களை நினைவேந்தல் செய்வதற்குக் கூடத் தமிழர் பிரதேசங்களில் அனுமதி மறுக்கப்பட்டது. கடுமையான நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்டன.

இந்த நிலையில்தான் இலங்கையின் ஜனாதிபதியை இந்தியாவின் புதிய பிரதமராகப் பொறுப்புபேற்கவிருக்கும் நரேந்திரமோடியுடன் சிலர் ஒப்பிட்டுப் பேசுகின்றனர். மஹிந்தரைப் பௌத்த மதத்தின் காவலராகவும், மோடியை இந்து மதத்தின் காவலராகவும் சித்திரித்து அரச சார்புப் பத்திரிகைகளில் கார்ட்டூன்கள் கூட வெளிவந்துள்ளன. இறுதிப் போரின் போது தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட்டபோது அதனை வேறு வகையில் நியாயப்படுத்தவே எமது நாட்டின் அரசுத் தலைமை முயன்றது. போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்த போதிலும் அவற்றை மறுப்பதிலேயே இலங்கையரசு முனைப்புடன் செயற்பட்டது. ஆனால் 2002 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட மோதலின் போது முஸ்லிம் தரப்பில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்போது அந்த மாநிலத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்த மோடி அதற்குத் தார்மீகப் பொறுப்பை ஏற்றுத் தமது பதவியைத் துறந்தார். மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட சிறுபான்மை முஸ்லிம் மக்கள் மோடியின் மீது நம்பிக்கை வைத்து அவருக்கு வாக்களித்துள்ளனர். ஏனென்றால் முஸ்லிம் மக்கள் அதிகளவில் வாழும் மாநிலங்களிலும் மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் காட்சி பெரு வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலைமை தற்போது எமது நாட்டில் உள்ளதா என்ற வினாவே எழுகின்றது.

ஆகவே பிரதமர் பொறுப்புகளை மோடி ஏற்பதற்கு முன்னரே அவரை எமது நாட்டின் ஜனாதிபதியுடன் ஒப்பிட்டுப் பேசுவது அழகானதல்ல. மேலும் ஒப்பீடு செய்வதிலும் சில தராதரங்கள் உள்ளன என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இதை மறந்து அவசர கோணத்தில் கருத்துக்களைத் தெரிவிப்பது நகைப்புக்கு இடமளித்துவிடும். காலம் கனிந்து மாற்றங்கள் ஏற்படும்போது எவரையும் எவருடனும் ஒப்பிட்டுப் பேசலாம். இதிலொன்றும் தவறே இல்லை.



# அதிகாரப் போட்டியால் அலைக்களிக்கப்படும்

## இணை மருத்துவ விஞ்ஞான மாணவர்கள்

யோ.ஜொலிநாதன்
சில்லாலை மத்தி



இலங்கையில் இணை மருத்துவ விஞ்ஞானத்தில் உள்ள வெற்றிடங்களையும், தரத்தையும் உயர்த்தும் நோக்குடன் பலரின் சீரிய முயற்சியால் இணை மருத்துவ விஞ்ஞான பாடநெறி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பலரது வரவேற்பைப் பெற்றுக் கொண்டது. பல அறிஞர்களும் இலங்கையின் சுகாதாரத்துறை சர்வதேச தரத்தை அடையும் என்று அங்கலாய்த்திருந்தனர். இணை மருத்துவ விஞ்ஞானத்துறை முதலில் ஒரு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஓர் ஆண்டிலேயே அதன் தேவையையும், நன்மைகளையும் அறிந்து பல பல்கலைக் கழகங்கள் தமது மருத்துவபீடத்தில் ஓர் அலகாக 4 வருட இணை மருத்துவ கற்கை நெறியை ஆரம்பித்தன.

இணை மருத்துவ விஞ்ஞான முதலாம் அணி மாணவர்களின் சேவையை எதிர்பார்த்திருந்த வேளையில் துரதிர்ஷ்டவசமாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) மேற்படி மாணவர்களை அரச சேவையில் (சுகாதார அமைச்சு) இணைத்துக் கொள்வது இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பில் பெரிய பிரச்சினைகளை உருவாக்கும் என எதிர்வு கூறியதுடன், மேற்படி மாணவர்களை பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கும் போது தமது கருத்தும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்து உச்ச நீதிமன்றம் ஊடாக இடைக்காலத் தடையை ஏற்படுத்தியது. இந்தத் தடை கல்விச் சமூகத்திலும், சுகாதாரத் தரப்பினர் சிலரிடமும் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறிய காரணங்கள் பலராலும் விமர்சிக் கப்பட்டன. இதன் பின் தொடர்ந்த பேச்சுவார்த்தைகளினூடாக உயர்கல்வி அமைச்சர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் உள்ள தமது இயலாமையை ஒப்புக்கொண்டதுடன் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடனான சமரசப் பேச்சுவார்த்தையுடன் (3+1) என்ற மூன்று வருட பொதுப் பட்டமும் பின் ஒரு வருட விசேட பட்டமும் என புதிய நடை முறையை தீர்வாக வழங்கி பட்டதாரிகளை சுகாதார அமைச்சின் கீழ் நிபந்தனைகளுடன் உள்வாங்குவதாக முடிவெடுக்கப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்துமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கை மூலம் சகல பல்கலைக்கழகங் களுக்கும் ஆணையிடப்பட்டது. ஆயினும் மாணவர்கள் தமக்கு இது அநீதியான் முடிவு எனவும் தமது 4 வருடக் கற்கை நெறியை 3 வருடமாகக் குறைப்பது தனிமனித உரிமை மீறல் எனவும் பல்வேறு தரப்பினரிடமும் தெரிவித்து இறுதியாக எதுவும் பயனளிக்காத நிலையில் தொடர்ச்சியாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கினர்.



சில பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் இப்போது யாழ்.பல்கலைக்கழக இணை மருத்துவ விஞ்ஞானத்துறை மாணவர்கள் உட்பட அனைத்து இணை சுகாதார மருத்துவத்துறை மாணவர்களினதும் ஒருமித்த போராட்டமாக உருவெடுத்ததுடன் நாடாளுமன்றத்தில் விசேட குழு அமைத்து விவாதிக்கும் அளவுக்கு முக்கியமான விடயமாக மாறியுள்ளது.

இன்றைய நிலையில் மாணவர் போராட்டங்கள் காவற் துறையினால் கட்டுப்படுத்தப்படும் அளவுக்குச் சென்றுள்ளதுடன் மாணவர்கள் பலரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் போராட்டம் "தமது கல்வியை தமக்கு முழுமையாக வழங்க வேண்டும். அதை யாரும் குறைக்கக் கூடாது" என்பதாகும். இது உண்மையில் முழு வேதனைப்பட வேண்டிய விடயமாகும். சமூக அந்தஸ்தும் கடமையும் நிறைந்த மருத்துவ சேவையாளர்களே இந்தப் பாதகத்தின் காரண கர்த்தாக்கள் என்பது பலராலும் விசனத்துடனும் வேதனையுடனும் நோக்கப்படுகிறது. சுகாதாரத் துறையின் தரத்தை உயர்த்தி மக்களுக்கு நற்சேவையை வழங்குவதில் ஆர்வம் செலுத்த வேண்டிய அவர்களே, தங்களுக்குப் போட்டியாக உயர் அதிகாரப் பதவிகளில் இணை மருத்துவ விஞ்ஞான துறையினர் அமர்த்தப்பட்டு விடுவார்கள் என அஞ்சி கல்வித் தரத்தை குறைத்து மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளனர். மாணவர்களிடையே 3+1 கற்கை நெறியை எதிர்த்துப் பல கேள்விகள் உருவாக்கியுள்ளன.

01. 4 வருட இணை மருத்துவ கற்கை நெறியை 3+1 ஆகக் குறைத்து பட்டதாரிகளின் சர்வதேச அந்தஸ்தை குறைப்பதற்கான காரணம் என்ன?

02. இந்தத் துணை மருத்துவ டிப்ளோமா கற்கை நெறிகள் ஏற்கெனவே சுகாதார அமைச்சால் நடத்தப்படுகின்றபோதிலும் இந்தத் தரத்தை உயர்த்தும் நோக்குடனேயே 4 வருட பட்டப்படிப்பாக பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக் கப் பட்ட இந்தக் கற்கை நெறிகள் மீண்டும் (3+1) ஆக தரங் குறைக்கப்படுவதன் காரணம் என்ன?

03. இந்தக் கற்கை நெறிகள் ஆரம்பித்து முதல் அணி மாணவர்கள் 4 வருட பட்டப்படிப்புடன் வெளியேறுகின்றபோது ஏன் ஏனைய அணி மாணவர்கள் 4 வருட பட்டப் படிப்புடன் வெளியேற முடியாது?

---

# மாற்றமுறும் உலகில் ஆசிரியரின் வகிபாகம்

இராகவி இராமேஸ்வரன்
(யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, ஆரம்பப் பிரிவு)

சமூகங்கள் அனைத்தும் தமக்குரிய கட்டமைப்பு, செயன்முறை ஆகியவற்றைப் பேணுவதற்கு வேண்டிய வழிகாட்டல்களையும் ஊக்குவிப்புகளையும் வழங்கக்கூடிய தலைமைத் துவத்தை வேண்டி நிற்கின்றன. இத்தகைய தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்குப் பல்வேறு சமூகபொருளாதார அரசியற் காரணிகள் உள்ள போதிலும் அவற்றுள் ஆசிரியரின் பங்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

இந்த உலகில் இணையில்லாத தொழில் ஆசிரியத் தொழிலாகும். வேறெந்தத் தொழிலோடும் ஒப்பிட்டுக் கூறமுடியாத அளவுக்கு மகத்தான தொழில் அது.

சமூக அந்தஸ்தைப் பெற்ற ஆசான் ஒருவர் அறிவியலில் சிறந்தவராகவும், நேர்மை தவறாது கடமை யாற்றுபவராகவும், அன்பு, பெருமை, நீதி, ஒழுக்கம், சகிப்புத்தன்மை , விடாமுயற்சி, நடு நிலைமை ஆகியவற்றைக் கொண்டிருப்பவராகவும் வேண்டும்.

மாணவரின் மனநிலை அறியாதவர் நல்லாசானாக இருக்கமாட்டார். பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து வரும் பிள்ளைகளை அறிந்து கல்லைக் கனியாக் குவதும், முள்ளை மலராக்குவதும் ஆசிரியரைப் பொறுத்தே அமையும்.

ஒரு சிறந்த ஆசிரியர் மாணவர்களுக்குப் பெற்றோராக, நண்பராக, மருத்துவராக, முகாமையாளராக ஆசிரியராக இருக்க வேண்டுமே தவிர தண்டிப்பவராக இருக்கக் கூடாது.

மேலும் தண்டனைகளும் மாணவரை நல்வழிப்படுத்துவதாக இருக்க வேண்டும். வழங்கும் தண்டனை நடு நிலைமை கொண் டதாகவும், மாணவர்களின் எதிர்காலத்தை பாதிக்காத வகையிலும் அமைதல் வேண்டும்.


"ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறைக்குள்தான் அமைகிறது" என்கிறார் கல்வியியல் அறிஞர் கோத்தாரி. ஆசிரியர் ஒருவர் வகுப்பறைக்குள் ஒரு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறார் என்றால் அது மிகையாகாது. "வாழ வைக்கும் ஆசான் தண்டனை வழங்கும்போது சற்று சிந்திப்பது சாலப் பொருந்தும்".

கல்வியால் ஏற்படுகின்ற கர்வமானது தலையில் உள்ள மூளையை எடுத்துவிட்டு போலிப் பாண்டித்தியம் என்ற குப்பையை நிறைத்து விடக் கூடாது.

எனவே கற்றுக் கொடுப்பவரெல்லாம் ஆசிரியர்கள் அல்லர். எவரிடம் நாம் கற்றுக்கொள்கிறோமோ அவரே ஆசிரியராவார்.

"ஆசிரியர்பணி ஓர் அறப்பணி
அதற்கே உன்னை அர்ப்பணி"

சமூக அந்தஸ்தைப் பெற்ற ஆசான் ஒருவர் அறிவிய லில் சிறந்தவராகவும், நேர்மை தவறாது கடமை யாற்றுபவராகவும், அன்பு, பெருமை, நீதி, ஒழுக்கம், சகிப்புத்தன்மை , விடா முயற்சி, நடு நிலைமை ஆகியவற்றைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.
மாணவரின் மனநிலை அறியாதவர் நல்லாசானாக் இருக்கமாட்டார்.



# தமிழகத்தின் எதிர்ப்பை நிராகரித்தது பா.ஜ.க.

## ஜனநாயகத்தைக் கொண்டாடி மகிழ்வதற்கே மஹிந்த, நவாஸுக்கு அழைப்பு என்று விளக்கம்

புதுடில்லி,மே 24
இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்ததில் தவறில்லை என பா.ஜ.க. தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக பா.ஜ.க. செய்தித்தொடர்பாளர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது:-
மோடியின் பதவியேற்பு விழாவுக்கு வரும்படி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்களை அழைத்துள்ளதற்கு எழும் ஆட்சேபங்களை பா.ஜ.க. நிராகரிக்கிறது.
சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு விடுத்துள்ள அழைப்பு ஜனநாயகத்தின் மகிழ்ச்சிமிகு கொண்டாட்டத்தில் பங்கேற்க வைப்பதற்கானதாகும். இந்தக் கண்ணோட்டத்தில்தான் இந்த அழைப்பை நாம் கருதவேண்டும். புதிய பிரதமர் பதவியேற்கும் நிகழ்ச்சியில் நல்லெண்ணத்தை உருவாக்குவதற்கான பொறுப்புமிக்க அடையாளமாகவே சார்க் நாடுகளுக்கு விடுத்த அழைப்பை நாம் பார்க்க வேண்டும்.


நிர்மலா சீதாராமன்

இந்த உவகை மிக்க நிகழ்ச்சியில் நமது பக்கத்து நாடுகள் பங்கேற்பதை வரவேற்கிறோம்.
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதற்குத் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் சில எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் அவர்களும் காரணத்தைப் புரிந்து கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என்றார் நிர்மலா சீதாராமன். (து)

### கடலட்டை கடத்த முயன்ற 5 பேர் நேற்றுக் கைது

இராமநாதபுரம்.மே 24
அரசால் தடை செய்யப்பட்ட 3 லட்சம் ரூபா பெறுமதியான அரியவகை கடல் அட்டைகளை இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கை வழியாக வளைகுடாவுக்கு கடத்த முற்பட்ட 5 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை வழியாக வளைகுடா நாடுகளுக்கு அரசால் தடை செய்யப்பட்ட அரியவகை கடல் அட்டைகள் கடத்தப்பட இருப்பதாக மண்டபம் வனத் துறைக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி கடற்கரைப் பகுதியில் வனத் துறையினர் தீவிர சோதனை நடத்தினர். இதன்போது இராமேஸ்வரம் சேராங்கோட்டை கடற்கரைப் பகுதியில் உயிருடன் கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. (து-14)

# வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றதே மஹிந்தவை அழைப்பது

## ஜெயலலிதா கடும் கண்டனம்

சென்னை,மே 24
இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ள இந்தத் துர்ப்பாக்கியமான செயல் தமிழ்நாட்டு மக்களை மிகவும் வருத்தமடையச் செய்துள்ளதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய உணர்வுகளை மீண்டும் காயப்படுத்தியுள்ளது. இந்தச் செயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.


ஜெயலலிதா

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கைத் தமிழர் பிரச்சினையில், தமிழ்நாட்டு மக்கள், மற்றும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்கள் ஆகியோரின் மன எழுச்சி மற்றும் கொந்தளிப்பு அனைவரும் நன்கு அறிந்தவையே. நாடாளுமன்ற மக்களவைக்குப் பொதுத் தேர்தல் நடைபெற்று, ஒரு சில நாள்களில் புதிய மத்திய அரசு பதவியேற்க இருக்கிறது என்றாலும், இந்த மாற்றம், தமிழ்நாடு மற்றும் இலங்கைக்கு இடையே ஏற்கெனவே உள்ள இறுக்கமான உறவில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.
இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதியில், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த அரசின் இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள், இனப்படுகொலை மற்றும் இன அழிப்பு ஆகியவை குறித்து தமிழ்நாடு சட்டப் பேரவையில் கடந்த மூன்று ஆண்டுகளில் பல் வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதை இந்த நாடே, ஏன் இந்த உலகமே நன்கு அறியும்.
ஆனால், முன்பிருந்த மத்திய அரசு, தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றிய தீர்மானங்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியப்படுத்தி, தமிழர்களின் உணர்வுகளை மிதித்து விட்டது. புதிதாக மத்தியில் அமையவிருக்கும் அரசு, தமிழர்கள் தொடர்பான பிரச்சினைகளில் பரிவுடன் செயற்படுமென்றும், தமிழ்நாட்டுடன் நட்புணர்வு பாராட்டும் என்றும் நாங்கள் நம்பினோம்.
ஆனால், புதிய பிரதமரும், புதிய மத்திய அரசும் பதவியேற்று செயற்படத் தொடங்குவதற்கு முன்னரே, இந்தியப் பிரதமரின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்திருக்கிற இந்த துர்ப்பாக்கியமான செயல் தமிழ்நாட்டுமக்களை மிகவும் வருத்தமடையச் செய்துள்ளதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய உணர்வுகளை மீண்டும் காயப்படுத்தியுள்ளது. இந்தச் செயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது-என்றார். (த)

# மோடியின் பதவியேற்பில் மஹிந்தவை தவிருங்கள்

## ராஜ்நாத்திடம் வைகோ நேரில் வலியுறுத்தல்


பா.ஜ.க. தலைவர் ராஜ் நாத் சிங்கை வைகோ சந்தித்தபோது...

புதுடில்லி,மே 24
இந்தியாவின் புதிய பிரதமராக மோடி பதவியேற்கும் விழாவில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பதைத் தவிர்க்கவேண்டும் என்று பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்கிடம் வைகோ நேரில் வலியுறுத்தினார்.
சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, பிரதமர் பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறு மோடியிடம் எடுத்துரைக்குமாறு பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்கிடம் தான் வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.
ஒருவேளை ஜனாதிபதி மஹிந்த பதவியேற்பு நிகழ்ச்சிக்கு வருவது உறுதியானால் அ[illegible] நிகழ்ச்சியைப் புறக்கணிப்பீர்களா என்று வைகோவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு நேரடியாகப் பதிலளிக்க மறுத்த வைகோ, மோடி என்ன முடிவு எடுப்பார் என எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் கூறினார்.
முன்னதாகக் கடந்த வியாழக்கிழமை பிரதமர் பதவியேற்பு நிகழ்ச்சியில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பங்கேற்க அனுமதிக்கக்கூடாது என்று பல்வேறு காரணங்களை முன்வைத்து நரேந்திர மோடிக்கு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ உருக்கமாகக் கடிதம் எழுதியிருந்தார். இதனைத் தொடர்ந்து நேற்று அவர் டில்லிக்குச் சென்று ராஜ்நாத் சிங்கை சந்தித்துள்ளார். (த)

### இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் தீ

புதுடில்லி,மே 24
நாடாளுமன்றக் கட்டடத்தின் 3ஆவது மாடியில் நேற்றுக் காலை திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. புதுடில்லியில் நாடாளுமன்றக் கட்டடத்தின் 3ஆவது மாடியில் காலை 8.50 மணியளவில் திடீரெனப் பரவிய தீயினால் பெரும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. தகவல் அறிந்ததும் 7 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து, தீயை அணைக்கும் பணி துரிதமாக நடைபெற்றது.
வளாகத்தில் இருந்த குளிர் சாதனப் பெட்டியிலிருந்து உருவான கசிவின் காரணமாக சிறிய தீ விபத்து [illegible] இது என்றும், இதனால் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)

# புகைவிட்டால் இனிமேல் அரச வேலை கிடையாது

## ராஜஸ்தான் மாநிலத்தில் அதிரடி உத்தரவு

**அரச வேலைக்கு விண்ணப்பிப்பவர்கள் புகை பிடிக்க மாட்டேன், புகையிலைப் பொருள்கள் எதையும் பயன்படுத்த மாட்டேன் என உறுதிமொழி அளிக்கவேண்டும்.**

ராஜஸ்தான்,மே 24
புகைப்பிடிப்பவர்களுக்கு இனிமேல் அரச துறையில் வேலை கிடையாது என்று ராஜஸ்தான் அரசு அறிவித்துள்ளது.
புகைப்பிடித்தல் மற்றும் புகையிலைப் பொருள்கள் உபயோகிப்பவர்களுக்கு வேலை வழங்குவது இல்லை என ராஜஸ்தான் அரசின் மின் நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.
புகைப்பிடித்தல் மற்றும் புகையிலைப் பொருள்கள் பயன்படுத்துபவர்களுக்கு அரச வேலை வழங்கவேண்டாம் என மாநில அளவிலான புகையிலை கட்டுப்பாட்டுக் குழு ராஜஸ்தான் அரசுக்கு கடந்த 2012 ஆம் ஆண்டில் பரிந்துரை செய்தது.
தற்போது இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்த ராஜஸ்தான் மின் நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.
இது தொடர்பான உத்தரவு விரைவில் வெளியிடப்படவுள்ளது. அரச வேலைக்கு விண்ணப்பிப்பவர்கள் புகை பிடிக்க மாட்டேன், புகையிலைப் பொருள்கள் எதையும் பயன்படுத்தமாட்டேன் என உறுதிமொழி அளிக்கவேண்டும்.
ராஜஸ்தான் மின் நிறுவனங்களின் இந்த முடிவை, ஜெய்ப்பூரில் உள்ள இனயா பவுன்டேஷன் என்ற தொண்டு நிறுவனம் வரவேற்றுள்ளது. (த)

# திகார் சிறையில் சப்பாத்தி சாப்பிட்டார் கெஜ்ரிவால்

புதுடில்லி,மே 24
டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்ட ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் வழக்கமான சிறை உணவைச் சாப்பிட்டுள்ளார்.
ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவாலின் மீது பா.ஜ.க முன்னாள் தலைவர் நிதின் கட்காரி அவதூறு வழக்குத் தொடர்ந்தார்.
இந்நிலையில், இந்த வழக்கில் பிணை பெறவேண்டும் எனில் 10 ஆயிரம் ரூபாயைப் பிணைத் தொகையாகச் செலுத்தவேண்டும் என கெஜ்ரிவாலுக்கு டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டது.
ஆனால், அந்தத் தொகையைச் செலுத்த கெஜ்ரிவால் மறுத்ததால் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.
இதனைத் தொடர்ந்து, டில்லி திகார் சிறையில் கடந்த புதன் இரவு கெஜ்ரிவால் அடைக்கப்பட்டார்.
இது தொடர்பாக திகார் சிறை தகவல் தொடர்பாளர் கூறுகையில், கெஜ்ரிவால் இரவு சிறையில் வழங்கப்பட்ட உணவான, சப்பாத்தி, காய்கறிகள் மற்றும் பருப்பு சாப்பிட்டார். அவர் படுப்பதற்கு அவரது குடும்பத்தினர் வீட்டிலிருந்து படுக்கை கொண்டு வந்தனர். அதைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். (த)

# பயங்கரவாதப் பட்டியலில் போகோ ஹராம் அமைப்பு

## நேற்று அறிவிப்பு வெளியிட்டது ஐ.நா.



போகோ ஹராம் தீவிரவாதிகள்

ஜெனிவா.மே 24

நைஜீரியாவில் 300 மாணவிகளைக் கடத்திய போகோ ஹராம் குழுவை அல் கொய்தா அமைப்புடன் இணைந்த பயங்கரவாத அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

நைஜீரியாவில் போகோ ஹராம் என்ற பயங்கரவாத அமைப்பு, கடந்த மாதம் 14 ஆம் திகதி நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள போர்னோ மாநிலம் சிபோக் கிராமத்தின் பள்ளியொன்றிலிருந்து 300 மாணவிகளைத் துப்பாக்கி முனையில் கடத்தி சென்றது. இதில் 223 மாணவிகளை போகோ ஹராம் பயங்கரவாதிகள் தடுத்து வைத்துள்ளனர் என்றும் மற்ற மாணவிகள் கடத்தலின்போது தப்பித்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

ஐக்கியநாடுகள்சபையில்உறுப்பு நாடொன்றாக நைஜீரியா இணைந்து 2 ஆண்டுகள் ஆன நிலையில், அந்த நாட்டில் கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வரும் போகோ ஹராம் அமைப்பை, அல் கொய்தாவுடன் இணைந்து செயல்படும் தீவிரவாத அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இதனை வரவேற்ற ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் சமந்தா பவர், "போகோ ஹராம் அமைப்பினர் பல காலமாக, உலக அளவில் அச்சுறுத்தி வரும் பயங்கரவாத அமைப்பான அல் கொய்தாவுடன் இணைந்து செயல்பட்டு வருவதற்கான ஆதாரங்கள் அதிகாரபூர்வமாகக் கிடைத்து இருக்கின்றன. முக்கியமாக இவர்கள் மேம்படுத்தப்பட்ட வெடிபொருள்களை தாக்குதலுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆகவே போகோ ஹராம் தீவிரவாதிகள் ஒடுக்கப்பட வேண்டிய இயக்கமாக இன்று ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்படுகிறார்கள்.

போகோ ஹராம் பயங்கரவாதிகளை எதிர்த்துப் பல ஆண்டுகளாகப் போராடி வரும் நைஜீரிய அரசுக்கு இந்த அறிவிப்பு ஆதரவானதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கும்" என்றார்.

நைஜீரிய பயங்கரவாதிகளை அழிக்க முழு அளவில் போர் நடத்தப்படும் என்று ஆபிரிக்க நாடுகள் அறிவித்துள்ளன.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகம். தெற்குப் பகுதியில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வசிக்கின்றனர். நைஜீரியாவை முழு இஸ்லாமிய நாடாக அறிவிக்கவேண்டும், மேற்கத்தேய கலாசாரத்தை பின்பற்றக் கூடாது என்று கூறி, போகோ ஹராம் தீவிரவாதிகள் பல ஆண்டுகளாக வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டுமுதல் இதுவரை போகோ ஹராம் தீவிரவாதிகளின் தாக்குதலில், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். (த)



ஆன் தய்-ஹீ

## தென்கொரிய புதிய பிரதமராக முன்னாள் நீதிபதி ஆன் தய் - ஹீ

சியோல்.மே 24

தென்கொரியப் பிரதமராக உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஆன் தய்-ஹீயை நியமிக்கப் போவதாக ஜனாதிபதி பார்க் கியூன் ஹை அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இதற்கான ஒப்புதலை விரைவில் பெறவுள்ளதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரத்தில் கூறப்படுகிறது.

ஆளும் கட்சியான சியானுரிக்கு அறுதிப் பெரும்பான்மை உள்ளதால், ஆன் தய்-ஹீ பிரதமராவது உறுதியாகிவிட்டது.

கடந்த ஏப்ரல் 16 ஆம் திகதி தென்கொரியாவின் இன்சியோனிலிருந்து ஜேஜுவுக்குச் செல்லும் வழியில் பயணிகள் கப்பல் கடலில் கவிழ்ந்ததில் 300 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று பிரதமர் சங் ஹாங்-வோன் பதவி விலகியுள்ளார்.

அவருக்குப் பதிலாக ஆன் தய்-ஹீ பிரதமர் பதவியேற்கவுள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதியின் செய்தித்தொடர்பாளர் மின் கியூங்- வூக் கூறுகையில், அரசு அமைப்புகளில் சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ளவும், நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஆன் தய்-ஹீ தான் சரியான நபர் என்றுநம்புகிறோம் என்றார்.(த)

## பாகிஸ்தானில் வான் தாக்குதல்

இஸ்லாமாபாத்.மே 24

பாகிஸ்தானில் இடம்பெற்ற வான் தாக்குதல் சம்பவமொன்றில் 32 போராளிகள் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு வசிரிஸ்தானில் நடத்தப்பட்ட இந்த வான் தாக்குதலில் போராளிகளின் முக்கிய கட்டளைத் தலைவர்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதியை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தலிபான் போராளிகளின் தாக்குதல்கள் காரணமாகக் கடந்த 2007 ஆம் ஆண்டில் இருந்து 10 ஆயிரத்திற்கும் அதிமானவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தங்களது பாடசாலைளுக்கு மாணவிகள் அணியும் பாவாடையை அணிந்து சென்றுள்ளனர். பாலியல் வன்முறைகளுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறு பாவாடையுடன் பாடசாலைக்குச் சிறுவர்கள் சென்றுள்ளனர். பிரான்ஸின் நன்டெஸ் பிராந்தியத்தில் இடம்பெற்ற இந்தப் பிரசாரத்துக்கு பாடசாலை நிர்வாகிகளும் ஆதரவளித்தமை பெரும் ஆச்சரியமாக இருந்தது. (த)

## இந்தியத் துணைத் தூதரகம் மீது ஆப்கானில் தாக்குதல்



குண்டுத் தாக்குதல் நடந்த பகுதி

காஅபூல்.மே 24

ஆப்கானிஸ்தானின் ஹேரத் மாகாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் மீது நேற்று ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எனினும் இதில் உயிரிழப்புகள் ஏதும் இல்லை என்றும், அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அங்கு காவல் கடமையில் இருந்த இந்தோ-திபேத்தியன் எல்லைப் பாதுகாப்புப் படையினரும், ஆப்கானிஸ்தான் இராணுவத்தினரும் எதிர்த் தாக்குதலை நடத்தினர் என்றும், அந்த நடவடிக்கை தொடர்வதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

நேற்று அதிகாலை மூன்று தீவிரவாதிகள், துணைத் தூதரகத்துக்கு அருகிலிருந்த ஒரு வீட்டிலிருந்து தானியங்கித் துப்பாக்கிகள் மற்றும் றொக்கெட்டுகள் மூலம் வீசப்படும் குண்டுகளைக் கொண்டு தாக்குதலை நடத்தினர் என்று ஆப்கானிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் இருவரைத் தாங்கள் கொன்றுள்ளதாகவும், ஒருவர் தொடர்ந்து தாக்குதலை நடத்திவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

## போர்க்குற்றவாளிக்கு 12 ஆண்டுகள் சிறை

கின்ஸாசா. மே 24

கொங்கோவின் முன்னாள் ஆயுதக் குழுத் தலைவர் ஜேர்மயின் கட்டாங்கா புரிந்த போர்க் குற்றங்களுக்காக அவருக்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 12 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை அளித்துள்ளது.

கட்டாங்கா ஏற்கெனவே 6 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைவாசம் அனுபவித்துள்ளபடியால், அந்தக் காலப்பகுதி மொத்தத் தண்டனைக் காலத்திலிருந்து கழிக்கப்படவுள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்னர் கிராமம் ஒன்றில் நூற்றுக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கட்டாங்கா குற்றவாளி என்று கடந்த மார்ச்சில் தீர்ப்பளிக்கப்பட்டது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள தங்கம் நிறைந்த இத்தூரி மாகாணத்தில் இந்தப் படுகொலைகள் நடந்திருந்தன.

ஒரு கிராமத்தை முழுமையாக அழிக்கும் முயற்சியாக நடந்த இந்த படுகொலைகளின் போது, கொலைகாரர்கள் மக்களை கொல்லமுன்னர் அவர்களின் கை, கால்களை அறுத்து அட்டூழியம் புரிந்துள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

கட்டாங்காவுக்கு அழிக்கப்பட்டத் தண்டனை போதாது என்று பலரும் கருதுகின்ற நிலையில், குற்றம் நடந்த போது அவர் இளையவராக இருந்துள்ளதாகவும் அவருக்கு ஆறு குழந்தைகளுடன் குடும்பம் ஒன்றும் இருந்துள்ளதாகவும் அவர் சீர்திருத்தம் அடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் நீதிபதி கருதியுள்ளதாக பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் கூறினார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 2002 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது முதல் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள இரண்டாவது நபர் கட்டாங்கா தான் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



**10 ஆண்டுகளுக்கு முன்னர் கிராமம் ஒன்றில் நூற்றுக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கட்டாங்கா குற்றவாளி என்று கடந்த மார்ச்சில் தீர்ப்பளிக்கப் பட்டது.**



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எதிலும் நிதானத்தைக் க்டைப்பிடித்து காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். உங்களுடைய சாதுரியம் வெளிப்படும். அனைவரையும் அனுசரித்துச் செல்வீர்கள். உங்களுடைய தாய்மாமனுக்கு அதிர்ஷ்டத்தை அள்ளிக் கொடுப்பீர்கள்.

**இடபம்**: உங்களைப் பார்த்தவுடன் அனைவரையும் முக வசீகரத்தால் கவர்ந்திழுப்பீர்கள். உங்கள் செயல்களில் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தால் புதிய கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்கள்.

**மிதுனம்**: உங்கள் விருப்பங்களும் தேவைகளும் பூர்த்தியாகும். முக்கியமான விடயங்களில் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகள், அறிவுரைகளைக் கேட்டு முடிவெடுப்பீர்கள். உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களின் தவறுகளை உடனடியாகச் சுட்டிக் காட்டி திருத்துவீர்கள்.

**கடகம்**: சுதந்திரமாகப் பணியாற்றி வெற்றி வாகை சூடுவீர்கள். புதிய பதவிகளும் பொறுப்புகளும் உங்களைத் தேடி வரும். கடுமையாக உழைத்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். முடங்கிப்போன விடயங்களை மீண்டும் செய்ய முனைவீர்கள்.

**சிங்கம்**: அயல்நாடு சம்பந்தப்பட்ட செயல்களிலும் ஈடுபடுவீர்கள். பங்குச்சந்தை முதலீடுகளில் மூலம் நல்ல ஆதாயத்தைக் காண்பீர்கள். மனதை ஒருமுகப்படுத்தும் யோகா, பிராணாயாமம் போன்றவற்றை கற்றுக்கொள்ள முயற்சி எடுப்பீர்கள். ஆன்மிகத்திலும் நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி**: குறுக்கு வழியில் சென்று எந்தச் செயலையும் செய்யாமல் நேர் வழியில் சிந்தித்துச் செயற்படுங்கள். உடல் ஆரோக்கியம் ஓரளவு சீராக இருந்தாலும் வயிறு சம்பந்தமான கோளாறுகளுக்கு ஆட்பட நேரிடலாம். உங்கள் பேச்சால் பகையைச் சந்திக்க நேரிடும்.

**துலாம்**: உங்கள் மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். நம்பகத்தன்மை இல்லாதவர்களிடம் சிரமங்களைச் சொல்வதால், ஒரு மாற்றமும் வராது. தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பு அவசியம்.

**விருச்சிகம்**: மேலதிகாரிகளின் அன்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். உங்களுக்கு தொல்லை கொடுத்த சக ஊழியர்கள் பகைமை மறந்து நட்புடன் பழகுவார்கள். அலுவலகம் சம்பந்தமான பயணங்களால் நன்மைகளைக் காண்பீர்கள்.

**தனுசு**: உழைப்புக்குத் தகுந்த சம்பளம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு இன்றைய நாள் இலாபகரமாகவே அமையும் - வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப விற்பனை முறைகளைக் கையாண்டால் போதும்.

**மகரம்**: உங்களின் கடன் மிகுதிகளை சற்று கூடுதல் முயற்சியின் பேரில் செலுத்த வேண்டிவரும். குடும்பத்தில் எவரிடமும் எதிர்ப்பைக் காட்ட வேண்டாம். உங்களுடைய புகழும், செல்வாக் கும் உயரும். எதிர்பார்த்த இடங்களிலிருந்து உதவி கிடைக்கும்.

**கும்பம்**: மனதை அரித்துக் கொண்டிருந்த ஒரு விடயத்தில் முக்கியமான முடிவை எடுப்பீர்கள். உங்களின் நிதானமான போக்கு பெரிய முன்னேற்றத்துக்கு வழியைத் தேடித் தரும். புதிய வாய்ப்புகள் நல்ல வருமானத்தைக் கொண்டு வந்து சேர்க்கும்.

**மீனம்**: குடும்பத்தினரிடம் உங்களின் மதிப்பு உயரும். விருந்து, கேளிக்கைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். வியாபார விருத்திக்குண்டான முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியைத் தேடித் தரும்.

## நாளை

**வைகாசி-11 ஞாயிற்றுக்கிழமை | 25.05.2014**

திதி: துவாதசி பி.இ.01.23 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.ப.05.34 வரை

சுபநேரம்: 08.52-10.22 வரை
இராகுகாலம்: 04.22-05.52 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பிரபஞ்ச இயல்

பிண்டம், அண்டம் அல்லது அகம், புறம் என்னும் இரண்டு உலகங்கள் உள்ளன. அனுபவத்தாலும் இந்த இரு உலகங்கள் வழியாகவும் நாம் பல உண்மைகளை அறிகிறோம். உள நூல் அறிவு, புலன் கடந்த தத்துவ ஆராய்ச்சி அறிவு, சமய அறிவு என்பவை உள் அனுபவம் காரணமாக ஏற்படுபவை. வெளி அனுபவம் காரணமாகத் தோன்றியது பலவகை அறிவியல்கள். இந்த இரண்டு உலக அனுபவங்களுடனும் ஒத்து நிற்பது தான் குறைவற்ற உண்மையாக இருக்க முடியும். பிண்டமும் அண்டமும் ஒன்றையொன்று மெய்ப்பிப்பவையாக இருக்க வேண்டும். பௌதிக உண்மைகளுக்கு அத்தாட்சி உள்ளுலகில் இருக்க வேண்டும். இது போலவே உள் உலக உண்மைகளுக்கு நிரூபணம் வெளி உலகில் இருக்க வேண்டும். ஆனால், சாதாரணமாக இந்த உண்மைகளில் முரண்பாட்டை நாம் காண்கிறோம். உலக வரலாற்றின் ஒரு காலத்தில் உள் உண்மைகள் பலம்பெற்று வெளி உண்மைகளுடன் போராடத் தொடங்குகின்றன. தற்போது வெளி உண்மைகளான அறிவியல் உண்மைகள் ஆற்றல் பெற்று உள் உண்மைகளான மனதத்துவ உண்மைகளை அடக்க முனைந்து, அதில் ஓரளவு வெற்றியும் பெற்று வருகின்றன. இந்தக் கால அறிவியல் உண்மைகளின் அடிப்படையும் மனத் தத்துவ உண்மைகளின் அடிப்படையும் நெருங்கிய ஒற்றுமை உடையவை என்பதையே எனது அறிவு எனக்குக் காட்டுகிறது. ஒரு தனி மனிதன் எல்லாத் துறைகளிலும் சிறந்தவனாக இருக்க முடியாது. அது போலவே, ஒரு தனி நாடு அல்லது மக்கள் இனம் எல்லா வகை அறிவிலும் சமமான திறமை பெற்றிருக்க இயலாது. இந்தக்கால, ஐரோப்பிய மேலை நாடுகள் எல்லாம் வெளி உலக அறிவியல் அறிவிலும் ஆராய்ச்சியிலும் மிகவும் திறமை உள்ளவையாக இருக்கின்றன.

# 'குளுகுளு' வசதியுடன் கூடிய தலைக்கவசம்



அமெரிக்க அரசு தனது இராணுவ வீரர்களுக்கு 'குளுகுளு' வசதியுடன் கூடிய தலைக் கவசத்தை (ஹெல்மெட்) வழங்கவுள்ளது.
போர்க் காலத்தில் இராணுவ வீரர்கள் கடும் வெப்பத்தால் அவதிக்குள்ளாவதால் இந்த நடவடிக்கையை அந்த நாட்டு அரசு எடுத்துள்ளது.
இந்த அதிநவீன தொழில்நுட்ப தலைக் கவசத்தை (ஹெல்மெட்) கடந்த 2013ம் ஆண்டு எட்ஜ்வுட் கெமிக்கல் பியோலாஜிகல் என்ற அமெரிக்க இராணுவ ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் வடிவமைத்திருந்தனர்.
இந்தத் தலைக்கவசத்தால் வீரர்கள் சுவாசிக்க மூச்சுக்காற்று சுத்திகரிக்கப்படுவது மட்டுமல்லாமல் தலைப் பகுதிக்கு குளிர்ந்த காற்றைச் செலுத்தும் வகையில் மின்கலத்துடன் (பற்றரி) கூடிய கருவியும் இருக்கும்.
மேலும் இந்தக் கருவி வீரரின் இடுப்பு அல்லது முதுகுப் பகுதியில் தொங்கவிடப்படும். இந்தத் தலைக் கவசத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கான தயாரிப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | 4 | 5 | | 2 | |
| | 9 | 2 | | 1 | | | | 6 |
| | | 8 | 7 | | | | | |
| | | | 6 | | 2 | | 1 | 3 |
| | | 3 | | 7 | | 6 | | |
| 5 | 1 | | 4 | | 9 | | | |
| | | | | | 7 | 9 | | |
| 6 | | | | 9 | | 3 | 7 | |
| | 3 | | 5 | 8 | 1 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 6 | 8 | 3 | 1 | 9 | 2 | 4 |
| 4 | 8 | 3 | 9 | 2 | 7 | 6 | 1 | 5 |
| 9 | 1 | 2 | 6 | 5 | 4 | 3 | 7 | 8 |
| 7 | 2 | 4 | 5 | 1 | 6 | 8 | 9 | 3 |
| 8 | 3 | 9 | 7 | 4 | 2 | 1 | 5 | 6 |
| 1 | 6 | 5 | 3 | 9 | 8 | 7 | 4 | 2 |
| 3 | 5 | 1 | 2 | 6 | 9 | 4 | 8 | 7 |
| 2 | 4 | 8 | 1 | 7 | 3 | 5 | 6 | 9 |
| 6 | 9 | 7 | 4 | 8 | 5 | 2 | 3 | 1 |

# ஆயுதங்கள் தந்த இந்தியா ஆசிரியர்களையும் தரும்

## சூடான கேள்வி பதில்களுடன் முடிந்தது வடமாகாண சபை அமர்வு

தொகுப்பு: தி.அமுதன்

ஆயுதங்களைக் கொடுத்த இந்தியா ஆசிரியர்களையும் கொடுக்கும் என்று தெரிவித்த வடக்கு மாகாணசபை ஆளுங் கட்சி உறுப்பினர்கள், வடக்கு மாகாண கனிய வள பாதுகாப்புக்காக அரசிடம் துப்பாக்கிகளைப் பெற்றுத் தருமாறும் கோரினார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் ஆளுங் கட்சிக்கிடையிலான காரசாரமான வார்த்தைப் போர் என்பதையும் தாண்டி அவைத்தலைவருடன் உறுப்பினர்கள் அடிக்கடி முரண்பட்டுக் கொண்டனர்.

வடக்கு மாகாணசபையின் ஒன்பதாவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்பாக மாகாணசபை வளாகத்துக்கு வெளியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறும் என்று முன்னரே தெரிவிக்கப்பட்டிருந்தமையினால் அவைக்கு வெளியில் சற்றுப் பதற்றமான சூழலையே பொலிஸார் உருவாக்கி வைத்திருந்தனர். அமர்வு ஆரம்பிப்பதற்கான முதலாவது மணி 9.25க்கு ஒலித்தது. அதனைத் தொடர்ந்து கறுப்புப்பட்டியுடன் சபாமண்டபத்துக்குள் வந்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள், கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலித்தனர்.

### புறக்கணிப்பு

இந்த நிகழ்வில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் மற்றும் எதிர் கட்சித் தலைவர் சி.தவராஜா ஆகியோர் புறக்கணித்தனர். வழக்கமாக அமர்வு 9.30 மணிக்குஆரம்பமாகின்றபோதும், நேற்று இந்த சுடரேற்றல் நிகழ்வு நடந்ததால் 10 மணிக்கே இரண்டாவது மணி ஒலித்து அமர்வு ஆரம்பமாகியது. சுடரேற்றல் நிகழ்வு முடிந்த பின்னரே முதலமைச்சர் அவைக்குள் பிரவேசித்தார்.

ஈகச்சுடரேற்றலுக்கு பங்கெடுக்காத முதலமைச்சரும், அவைத் தலைவரும் கறுப்புப் பட்டியை மாத்திரம் அணிந்து வந்ததுடன், அமர்வின் ஆரம்பத்தில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கான இரண்டு நிமிட அகவணக்கத்தைச் செலுத்தினர். இதன் பின்னர் நினைவேந்தல் அஞ்சலி உரையையும் முதலமைச்சரே ஆரம்பித்து வைத்தார். இதன் பின்னர் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் உரையாற்றிய தவராஜா, இந்த விடயம் நிகழ்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். அத்துடன் நடந்த படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை தேவை என்று சொல்கின்றனர். 1983 ஆம் ஆண்டிலிருந்து நடந்த படுகொலைகள் அனைத்துமே விசாரிக்கப்பட வேண்டும் என்று கோரினார். அத்துடன் தமது அமைப்பைச் சேர்ந்த 400 பேர் வரையில் கொல்லப்பட்டதாக குறிப்பிட்ட அவர் அப்படியாயின் ஒவ்வொரு நாளுமே நினைவேந்தல் நடத்தப்பட வேண்டும்என்றும்தெரிவித்தார்.

இதன் பின்னர் வழமையான நிகழ்சி நிரலுக்குரிய விடயங்கள் ஆரம்பமாகின. இந்தியாவின் புதிய பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவித்து வடக்கு மாகாண முதலமைச்சரால் அனுப்பப்பட்ட கடிதத்தை முதலமைச்சர் சபையில் வாசிப்பார் என்று அவைத் தலைவர் அறிவிப்பு விடுத் தார். முதலமைச்சர் தான் கொண்டு வந்த கோப்புகளுக்குள் தேடி அவற்றைக் கண்டெடுக்க முடியாமல் போய்விட்டது. உடனடியாக அவைத்தலைவர், இது தொடர்பில் தேநீர் இடைவேளையின் பின்னர் முதலமைச்சர் தெரிவிப்பார் என்று சொல்லி ஒருவாறு சமாளித்து அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தார்.

இதன் பின்னர் சுகாதார அமைச்சர் அறிவிப்புடன் அவை சூடாகியது. மலேரியா ஒழிப்புத் தொடர்பான பேரணி பருத்தித்துறையில் இடம்பெறவுள்ளது என்று தெரிவித்தார். உடனே சிவாஜிலிங்கம் எழுந்தார். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமல் அவர்கள் வேலை நிறுத்தத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று கடுமையாகச் சாடினார்.

இதற்கு முதலமைச்சரும், சுகாதார அமைச்சருமே பொறுப்புக் கூற வேண்டும் என்று போடு போட்டார். யாழ்ப்பாண மக்களை சுகாதார அமைச்சர் பழிவாங்குகின்றாரா என்று ஒரு வில்லங்கமான கேள்வியையும் அவர் கேட்டுவிட்டார்.

இதன் பின்னர் அவைத் தலைவர், இந்த விடயத்தை தீர்பதற்காக தான் பாடுபட்டதாக அவைக்குத் தெரிவித்தார். இதன் பின்னர் கருத்துரைத் தவராஜா, சிவாஜிலிங்கத்துடன் முரண்பட்டுச் சென்றாலும் இந்த விடயத்தில் கொஞ்சம் ஒத்துச் செல்வதாகச்சிரித்துக்கொண்டே கூறினார்.

இதன் பின்னர் மீளவும் கருத்துரைத்த சிவாஜிலிங்கம், சுகாதார வைத்திய அதிகாரிகள் தமது வைத்திய பணிமனைக்கு பக்த்திலேயே தனியார் வைத்தியசாலைக்குச் சென்று கிளினிக் நடத்துவதாக புதுக் குற்றச்சாட்டை முன்வைக்க, அவசரப்பட்ட அவைத்தலைவர், சபையில் தேவையற்ற விடயங்களைக் கதைக்க வேண்டாம் என்று வாய்ப்பூட்டுப் போட்டார்.

இதன் பின்னர் வைத்திய கலாநிதி சிவமோகனும், சுகாதார அமைச்சின் தவறினாலேயே இந்தப் பிரச்சினை இன்று பூதாகரமாகியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எல்லாம் பதிலளிக்க வேண்டிய சுகாதார அமைச்சர், இந்த விடயம் இங்கு எடுக்கப்படும் என்று தெரியாததால் ஆயத்தமாக வரவில்லை என்று சொல்லிவிட்டு இருப்பினும் இதன் முழுப் விடயத்தையும் சபைக்குத் தெரிவிப்பதாகச் சொன்னார்.

வடக்கு மாகாணசபை அமைக்க முதல் இருந்த விடயங்களிலிருந்து இன்று வரையில் இந்தப் பிரச்சினையில் என்ன நடந்திருக்கின்றது என்பதை விலாவாரியாகத் தெரிவித்தார். தனது உரையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தை மாத்திரமே அடிக்கடி குறை சொல்லிக் கொண்டிருந்தார். அத்துடன் இந்தப் பிரச்சினைவேண்டுமென்று அரசியல் மயப்படுத்தப்பட்டுவடக்குமாகாண நிர்வாகத்துக்கு முட்டுக் கட்டை போட எடுக்கப்படும் முயற்சி என்று பிரச்சினையை முழுவதுமாக வேறு பக்கம் திருப்பி விட்டார். அத்துடன் இதை அரசியலாக்க முயற்சிப்பவர்கள் எதிர்பக்கம் இருக்கின்றார்களோ, அல்லது எமது பக்கமே இருக்கின்றார்களோ தெரியவில்லையென்பதையும் பகிரங்கமாகவே சுட்டிக்காட்டினார்.

சுகாதார அமைச்சரின் நீண்ட உரையின் இடையே, அவைத் தலைவர் தேநீர் இடைவேளையைப் பற்றி பேச எடுத்ததும், சுகாதார அமைச்சர் "ரீ ஆறினா ஆறட்டும். இந்த விடயத்தை முழுமையாகச் சொல்ல வேண்டும்" என்று கூறி அரை மணிநேரத்துக்கு மேலாக நீண்ட விளக்கத்தை வழங்கினார்.

இதன் பின்னர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குழு அமைப்பதாகத் தெரிவித்து குழுவொன்று அமைக்கப்பட்டதுன் தேநீர் இடைவேளைக்காக உறுப்பினர் கள் பறந்தார்கள்.

"தேநீர் இடைவேளையின் பின்னர் மீண்டும் அமர்வு ஆரம்பமானது. இதன் போது வழமை போன்று நிதி நியதிச் சட்டம் இந்த அமர்வில் சமர்பிக்கப்படாது என்றும் அடுத்த அமர்வில் சமர்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார் அவைத் தலைவர். தொடர்ந்து முதலமைச்சர் மோடிக்கு அனுப்பிய கடிதத்தை கொண்டு வந்து வாசித்தார்.

தொடர்ந்து எழுத்து மூல வினாவுக்கான சந்தர்ப்பத்தில் து.ரவிகரனின் கேள்வி வாசிக்கப்பட்டது. இதன்போது ரவிகரன், ஆரம்பத்தில் அஞ்சலி உரை செலுத்தும்போது எனக்கான வாய்ப்புக் கேட்டேன். அவைத் தலைவர் வழங்கவில்லை. இப்போது கேள்விக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் எனது கேள்வியை சுருக்கமாக முடித்து அஞ்சலி உரையைச் செய்வதாகச் சொன்னார். அடுத்த ஆண்டிலாவது சகல உறுப்பினர்களும்சேர்ந்துதுயர்நடந்த முள்ளிவாய்கால் மண்ணில் நினைவேந்தல் செய்ய வேண்டும் என்று கோரினார். இதன் பின்னர் ரவிகரனின் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

வெளிநாடுகளிலிருந்து வரும் சிலர் இங்கு சிறிய உதவிகளைச் செய்து விட்டு அதை ஒளிப்படம் எடுத்து வெளிநாடுகளில் உழைப்பதாக பசுபதிப்பிள்ளை குற்றம் சுமத்தினார். அதனை ஆதரித்து எதிர்கட்சித் தலைவரும் கருத்து வெளியிட்டார். இதனைத் தடுக்க வெளிநாட்டு உதவிகளை வடக்கு மாகாணசபை மேற்பார்வை செய்ய வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இதன் பின்னர் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தை இராணுவத்தினர் எந்த நேரமும் ஏதாவது விழாக்கள் நடத்தப் பயன்படுத்துவ தாகச் சொல்லப்பட்டது. அத்துடன் அங்கு நடை பெறும் நிகழ்வில் ம்துபானமும் பரிமாறப்படுவ தாகச் சொல்லப்பட்டது. ஆளுங் கட்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளை இதனைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது. "இரவில் நடக் கிற நிகழ்வில ஆமிக்காரர் ரின்னில அடைச்ச ஏதோ" என்று கூறி விட்டு அருகிலிருந்த சுகிர்தனி டம், "ரின்னில் அடைக்கிறது என்ன?" என்று கேட்க அவர் "பியர்" என்று சொல்வதற்கிடையில் சபை யில் சிரிப்பொலி எழுந்தது. இருப்பினும் அதையும்பொருட்படுத் தாமல் பசுபதிப்பிள்ளை, இந்த மைதானத்தை வெளியார் பயன்படுத்தி நாசமாக்குவதை பார்க்கும் போது வயிறு பற்றி எரிவதாக ஆவேசத் துடன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து முல்லைத் தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கருங்கல்அகழ்வுதொடர்பான ஒரு பிரச்சினையை முன்வைத்தார். இதன் போது பேசிய விவ சாய அமைச்சர் ரவிகரனைப் பார்த்து 'ஆதா ரம்' ரவிகரன் என்று விளித்துப் பேசினார். சகல விடயங்களை யும் அவர்ஆதாரத்துடன்சபைக்குசமர்பிப்பதால் அவ்வாறு சொல்வதாகப் பின்னர் விளக்கமும் கொடுத்தார். இதன் போது எதிர் கட்சித் தலைவர் தவராஜா, சுற்றுச்சூழல் பிரச்சினை தொடர்பில் மத்திய அரசின் இரு அமைச்சுக்கள் சம்பந்தப்பட்டுள்ளமையால் அவற்றுடன் நேரடியாகக் கதைத்தால் என்ன என்று கேட்டு சிக்கலில் மாட்டினார்.

இதன் போது விவசாய அமைச்சர் வடமராட்சி கிழக்கின் அம்பன் பகுதியின் மண் அகழ்வைப் பற்றி தொடக்கிவிட அவையிலிருந்த உறுப்பினர்கள் தவராஜாவை இந்த விடயத்தை வைத்துப் போட்டுத்தாக்கினர். தொடர்ந்து நேரம் சென்று கொண்டிருந்ததால் உச்சக்கட்ட வாதப் பிரதிவாதங்களுக்கு நடுவில் சபையை மதிய போசன இடைவேளைக்காக அவைத் தலைவர் ஒத்தி வைத்தார்.

பின்னர் மீண்டும் அவை 3 மணிக்கு ஆரம்பமானது. இதன் போது வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு தொடர்பில் பிரேரணை சமர்பிக்கப்பட்டது. இந்தப் பிரேரணையில் சில கேள்விகளைக் கேட்ட எதிர்க்கட்சித் தலைவர் கடைசியில் ஆளுங்கட்சியினர் கொடுத்த 'பஞ்ச்' பேசாமல்அடங்கிவிட்டார். இருப்பினும் மணல் அகழ்வு விடயத்தில் மகேஸ்வரி நிதியத்தை தொடர்புபடுத்தியும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்று பெயரை வைத்துக் கொண்டு ஜனநாயகமே இல்லாமல் அந்தக் கட்சியின் மகேஸ்வரி நிதியம்செயற்படுவதையும் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் சொல்லிக் காட்டினர். இதற்கு தவராஜா, மகேஸ்வரி நிதியம் நாடாளுமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது என்பதைச் சொன்னதுடன் அதற்கு உரிமை யார் என்று கேட்டதும் அதை நாடாளுமன்றத்தில் சென்று பாருங்கள், கணக்கு வழக்கு தொடர்பில் கேட்டதற்கு அதை நாடாளுமன்றில் சென்று பாருங்கள் என்று எல்லாவற்றுக்கும் நாடாளுமன்றத்தையே காட்டிவிட்டார்.

இதன் பின்னர் சுற்றுச் சூழலுடன் சம்பந்தப்பட்ட விவசாய அமைச்சர் பதிலளித்தார். இதன் போதுமகேஸ்வரிநிதியம்மணல் அகழ்வு செய்யும் இடத்துக்கு மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை அனுமதியளிக்கவில்லை என்ற உண்மையை போட்டுடைத்தார். அத்துடன் தற்போது மணல் அகழ்வு செய்யும் இடத்துக்கு மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபை, கனியவளங்கள் மற்றும்சுரங்கப்பணியகத்திடம்கேட்ட போது இது மேலிடத்து உத்தரவு என்று தெரிவித்துள்ளதாக திரையின் பின்னால் நடந்த சூட்சுமங்களை அவிழ்த்து விட்டார் ஜங்கரநேசன்.

இதை விட முக்கியமான குண்டையும் தூக்கிப் போட்டார். வடக்கு மாகாணசபைக்கு வர முன்னர் மணல் அகழ்வு தொடர்பில் ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு பேராசிரியரிடம் சென்றேன். அவரிடம் இந்த மணல் அகழ்வு தொடர்பான பல தகவல்கள் இருந்தது. அவரிடம் சென்றதும் அவர் என்னிடம் கைகூப்பி, இதை தயவு செய்து என்னிடம் கேட்காதீர்கள். வடமராட்சி கிழக் கிலிருந்து எனது ஆய்வுக்கு தேவையான பல விடயங்களைத் தந்த நபரை சுட்டுப் படுகொலை செய்து விட்டார்கள் என்று தெரிவித்தார். வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்படும் மணல் கொள்ளைகளை தடுக்க முற்பட்ட இளைஞர்கள் மீது துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன என்று சொன்னதற்கு எதிர்க்கட்சித் தலைவர் எந்தப் பதிலும் சொல்லவில்லை.

இதன் பின்னர் சிவாஜிலிங்கம், சுற்றாடல் அதிகாரசபை உருவாக்கிறது என்றும் அதற்கான நியதிச் சட்டம் தயாரிக்கப்படுகின்றது என்றும் எவ்வளவு காலத்துக்கு கூறிக் கொண்டிருக்கப் போகின் றீர்கள் என்று ஆளுங்கட்சி அமைச்சர்களிடம் காட்டமாகக் கேட்டார். அதற்கு அவர்களிடமிருந்து பதிலில்லை. நீங்கள் நியதிச்சட்டம்உருவாக்குவதற்குஇடையில்கடல்நீர் முழுக்க ஊருக்குள் வந்து விடும் என்று மாகாண சபை நிர்வாகத்தின் குறைகளை தெளி வாகச் சுட்டிக் காட்டினார்.

இதன் பின்னர், இந்தக் கனிய வளக் கொள்கைகளை தடுக்க எல்லை காவல் படையை உருவாக்க வேண்டும். இதற்கு அரசிடம் அனுமதி பெற்று ஆயுதங்களைப்பெற்றுக்கொடுங்கள். சுடுவதற்கான அதிகாரத்தையும் பெற வேண்டும் என்று சொல்ல சபையில் மெல்லிய சிரிப்பொலி எழுந்தது.

இதன் பின்னர் மேலும் சில பிரேரணைகள் சமர்பிக்கப்பட்டன. சிவாஜிலிங்கம் சமர்பித்த பிரேரணையில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்களைக் கொண்டு வருவது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு எதிர்கட்சி உறுப்பினர் ரிப்கான் இந்தியா தருமா என்று கேட்க, ஆளுங் கட்சி உறுப்பினர் கஜதீபன் ஆயுதங்களைத் தந்த இந்தியா ஆசிரியர்களைத் தராமலா போய்விடும் என்று பதில் கேள்வியைத் தொடுக்க அவையில் சிரிப்பொலிதான் எழுந்தது.

காரசாரமான விவாதங்களு டன் நடந்த அமர்வு மாலை 5 மணிக்கு முடிவை எட்டியது. அடுத்த அமர்வு ஜுன் பதினோ ராம் திகதி என்று அறிவிக்கப்பட் டது. (ற)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



லயன் Dr. வை.தியாகராஜா M.J.F

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306-B1 இற்கான உப ஆளுநர் தெரிவில் அமோக வெற்றிபெற்று தெரிவாகியமைக்கு பாராட்டுகின்றோம்.

மேன்மேலும் பட்டங்கள், பதவிகள் பெற்று நலமுடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

திருமதி V. சோமசூரியசிங்கம்
விவாகப் பதிவாளர்
திரு.P.S. சிங்கம்
சிங்கம் பார்மஸி, கோண்டாவில்.

அரியாலை சனசமூக நிலையம்
நடத்தும்
2014ஆம் ஆண்டுக்கான

நிருத்தியபிரபா



விருதிற்கான மாபெரும் நடனச்சமர்

போட்டிக்கான போட்டியாளர்களைத் தெரிவு செய்யும் தேர்வுச்சுற்று 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ச.ச நிலையத்தில் அமரர் காசிப்பிள்ளை அரங்கில் இடம்பெறும்.

1ஆம் பரிசு விருது உட்பட 20,000 ரூபா
2ஆம் பரிசு 15,000 ரூபா
3ஆம் பரிசு 10,000 ரூபா

* வயது எல்லை 11 - 20
* ஆண், பெண் இருபாலரும் பங்கு பற்றலாம்.
* விண்ணப்ப முடிவு திகதியன்று 20 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்ப முடிவு திகதி 06.06.2014 பி.ப 6.00 மணி

மேலதிக தொடர்புகளுக்கு 077 645 38 62

அரியாலை சனசமூக நிலைய நிர்வாகம்

கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக உத்தியோகத்தர்

தனரட்ணம்
எட்வின் தனறோசான்

அவர்கள் மரணமடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் இறைஞ்சுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

அலுவலர்கள்,



## நாவற்குழி அறிவொளி மன்ற ஆண்டு நிறைவு விழா

நாவற்குழி.மே 24

நாவற்குழி அறிவொளி மன்றம், அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் மன்றத்தின் தலைவர் கோ. ஜீவபாலன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் கலாபூசனம் செல்லையா குமாரசாமி அவர்களைக் கௌரவித்தலும், 'உள்ளம் பழுக்க எனும் நூல்வெளியீடும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும் சிறப்பு விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் வ.மேகலிங்கமும், கௌரவ விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள், அபிவிருத்தி உதவியாளர் திருமதி ச.யுவசிங்கராசாவும் கலந்து கொள்வார்கள். (க)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

ALL OUT
Pest control service
கறையான் தொல்லையா?

உத்தரவாதத்துடன்
நாங்கள்
தொடர்புகளுக்கு
ந.ரூபகாந்த் : 077 1515897, 021 4993200

## கணினி அறிவுள்ள விற்பனையாளர் தேவை

கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு கணினி அறிவுள்ள விற்பனையாளர் தேவை. ஆரம்ப வேதனமாக ரூபா 19,000/= வழங்கப்படும். இலவசமாக தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

ஆண்கள் மட்டும். வயது: 18 தொடக்கம் 22 வரை.

தொடர்பு: **கிங்ஸ் எலக்ட்ரோனிக்ஸ்**
11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3887

(48364) (10)

**KINGS ELECTRONICS**
11A, Stanley Road, Jaffna.
T.P: 021 222 3857
LED Bulbs
SALES SALES

ஒரே தடவையில் ஒரே விதமான LED மின்குமிழ் 10 இனை கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு மின்குமிழ் இலவசமாக வழங்கப்படும்.

| for PLASTiC | METAL |
|---|---|
| 5 W 230 /= | 5 W 300 /= |
| 7 W 280 /= | 7 W 400 /= |
| 9 W 360 /= | 9 W 600 /= |

4′ LED Tube Light
16W 1300 /=
(48049)(10.6)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து பேரம்பலம் (சாமியார்)



(நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய ஸ்தாபகரும் சைவ மகா சபை அங்கத்தவரும்).

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாக கொண்ட சரவணமுத்து பேரம்பலம் நேற்றுமுன்தினம் (22.05.2014) வியாழக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-கண்மணி தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி (உஷா, முன்னாள் ஆசிரியர் தம்பாட்டி அ.த.க. பாடசாலை), பரமேஸ்வரி (முன்னாள் பிறப்பு, இறப்பு பதிவாளர் வவுனியா), காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரியின் சிறிய தந்தையும், சிவானந்தகுமார், நிரஞ்சன், காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் மாமனும், நிலக்ஷன், பிரியன், நிருஷா, இராகவன், நிருஷன், காலஞ்சென்ற சிவனேஸ்வரன், சிவகாந்தன், காலஞ்சென்ற சிவகணேசன் மற்றும் சிவானந்தன், சிவகாந்திமதி ஆகியோரின் பேரனும், கதிரவன், எழில்கண்ணன், பாரிநிதா ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, இராசம்மா, உலகநாதபிள்ளை மற்றும் சரஸ்வதியம்மா, காலஞ்சென்றவர்களான திலகவதியம்மா, விமலாதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, தர்மலிங்கம், கந்தசாமி மற்றும் சறோஜினிதேவி, சண்முகநாதன், காலஞ்செனற்வர்களான சொர்ணம்மா, இராஜேந்திரம், திலகவதிஅம்மா, கந்தசாமி, அச்சுவினி மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று; பூதவுடல் காலை 9 மணியளவில் நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாரந்தனை வடக்கு,**
**ஊர்காவற்றுறை.** (48374) (10)

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**கோ.சிவகாந்தன் (ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்)**
077 1130 553

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையற்கரசி (மல்லிகா) சண்முகரெத்தினம்



வேலணை மேற்கு- 6 (பழைய பஸ்கொம்பனியடி) யைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, நியூசிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி சண்முகரெத்தினம் 21.05.2014 புதன்கிழமை இந்தியாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் சண்முகரத்தினத்தின் (சுவிஸ்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-காந்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தையா-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நிராசன் (கனடா), சியாமனன் (நியூசிலாந்து), சர்மளன் (ஆஸ்திரேலியா), கஜநிவாஜி (நியூசிலாந்து), துவாரகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், வினோதா (கனடா), விசித்திரா (நியூசிலாந்து), திசானா (உரும்பிராய்), விஜயகுமார் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியும், கனிமொழி, கரிகாலன், தேன்மொழி, துதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராஜ இராஜேஸ்வரி (கனடா), சந்திரசேகரம்பிள்ளை (மாஸ்ரர், சுதுமலை), சுந்தரலிங்கம் (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி), சற்குணநாதன் (ஆசிரியர்,யா/புனித சாள்ஸ் ம.வி), இந்திராணி (கனடா), இரஞ்சிதா (ஜேர்மனி), நாகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகாம்பிகை, திருஞானேஸ்வரி, பாரதிதேவி, பரமலிங்கம் (கனடா), இராசேந்திரம் (ஜேர்மனி), சசிகலா (சுவிஸ்), கோணேஸ்வரி, மனோன்மணி (இந்தியா), தவமணி (கனடா), சரவணநாதன் (தபால் அதிபர், கிராண்பாஸ், கொழும்பு), சண்முகானந்தன் (ரவி-சுவிஸ்), கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி இல்லத்தில் நாளை (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.6, பிள்ளையார் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு,**
**தபால் பெட்டியடி.** (48375) (10)

தகவல்:
**க. சண்முகரெத்தினம் (கணவர்)**
**தொ.பே: 021 221 9189**

## கண்ணீர் அஞ்சலி

ஆவரங்கால் பர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோவில் (சிவன் கோவில் ) தர்மகர்த்தா சபை மற்றும் திருப்பணிச் சபையின் முன்னாள் தலைவராக இருந்த அமரர் சரவணமுத்து சோமசுந்தரம் அவர்களின் அன்பு மருமகனும், யோகலட்சுமியின் அன்புக் கணவருமாகிய **இராஜரத்தினராசா ஜெகநாதன்** அவர்கள் 23.05.2014 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தர்மகர்த்தா சபையின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(48372) (10) **தர்மகர்த்தா சபை, சிவன் கோவில், ஆவரங்கால்.**

## பனை அபிவிருத்திச்சபை கூறுவிலை கோரல்

பனை அபிவிருத்திச்சபையின் விசேட செயற்றிட்டத்திற்காக பின்வரும் பொருள்கள் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் தகுதி வாய்ந்தவர்கள் அதற்கான தங்களின் ஆகக்குறைந்த கூறுவிலையினை எமது சபையின் தலைமைக்காரியாலயத்துக்கு 09.06.2014 இற்கு முன்னர் பதிவுத் தபால்மூலமாவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| Nos | Items | SPECIFICATION | QUANTITY |
|---|---|---|---|
| 01 | Bicycle For men | Standard bicycle with full Stand, mud flap, Lock, Dynamo and iron Carial. Twenty year warranty on frame and fork | 250 |
| 02 | Barrel | 25 L Capacity | 250 |
| 03 | Barrel | 5 L Capacity | 250 |
| 04 | Shrink Turnel | Dimension - 18"X18"X8"(L xWxH), 2.3 Kw, 03Phase or 01 Phase | 01 |
| 05 | L. Sealer | Sealing dimensions: 18"x18"X8"(L xWxH) 0.2Kw, 01Phase | 01 |
| 06 | Form fill seal Sachet/ Pouch Machine | Pouch Dimension: 100ml - 200ml Power 02Kw, 03Phase or 01 Phase | 01 |
| 07 | Computer System | Branded Full set Including Printer | 10 |
| 08 | Alluminium Pan with lid | 16G,35Kg -capacity | 200 |
| 09 | Sewing Machine | MCZJ 8700 C (Zoje) | 05 |
| 10 | Automatic liquid filling Machine For Bottle filling. | capacity : 2000 bottles / day (bottle size 200ml- 500ml) | 01 |
| 11 | Palmyrah fruit Pulper | Model available in office | 08 |
| 12 | படங்கு | Polycrome -8ft(width) | 4000 ft |
| 13 | மண்வெட்டி | பூவரசம் பிடியுடன் | 200 |
| 14 | வெட்டுக்கத்தி | பனை அபிவிருத்திச் சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் | 400 |
| 15 | கம்பிக்கூடு | 04 அடி உயரம், 01 அடி விட்டமுடைய 12G கம்பியிலான 4"X2" துளை பருமன் கொண்ட தாங்குவதற்குரிய T போஸ்ட் இணைக்கப்பட்டு நிலத்தில் புதைக்கக்கூடிய ஏற்பாட்டுடன் | 10,000 |
| 16 | பனங்கிழங்கை வட்ட சீவலாக கையால் இயக்கி வெட்டக்கூடிய வினைத்திறன் வாய்ந்த உபகரணம் | குறிப்பு:- மேலதிக தகவல்களை பனை அபிவிருத்திச்சபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் | 100 |
| 17 | கால்பட்டி, மார்புப்பட்டி, இடுப்புப்பட்டி, பாளைக்கத்தி,துணைக்கத்தி, இயனக்கூடு | சீவல் தொழிலாளிகள் பாவிப்பதற்கு | 250 set |

**தலைவர்,**
**பனை அபிவிருத்திச்சபை,**
**முதலாம் மாடி தேசிய வீடமைப்பு செயலகம்,**
**கண்டிவீதி, யாழ்ப்பாணம்.** (சி/14083)(3.6.4)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செகதீஸ்வரன்



உசனைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செகதீஸ்வரன் நேற்று முன்தினம் (22.05.2014) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், துஷித்தா, துஷாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிகிருஷ்ணா, பாலஸ்கந்தா, கார்த்திகா, மதுராகரன் ஆகியோரின் மாமனும், அக்ஷயாவின் அன்புப் பேரனும், ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற ஜெகராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகரத்தினம், துரைராசா, தேவராசா, பிரகேஸ்வரி, ரவீந்திரராசா, தர்மராசா, மோகநந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (24.05.2014) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப 2.00 மணிக்கு தகனத்திற்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/14064) (10)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு உரிய முறையில் பணிப்பாளரை நியமியுங்கள்

## முறையாக நேர்முகத் தேர்வு நடத்தி

யாழ்ப்பாணம், மே 24

வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கு பதில்பணிப்பாளராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பணியாற்றி வருகிறார். அவர் அப்படி பதில் கடமையாற்ற இயலாது. எனவே,உரிய முறைப்படி நேர்மையாக - முறையாக நேர்முகத்தேர்வை நடத்தி மாகாணக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத் துக்கு தகுதியான ஒருவரை நியமனம் செய்யும்படி இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:-

பணியிலுள்ள ஓர் அதிகாரி ஓய்வு பெறுகிறார் என்றால் அவர் ஓய்வு பெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்னரே அந்த வெற்றிடத்துக்கு உரிய ஒருவரை நியமனம் செய்ய வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று 2011: 14 சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த விடயத்திலும் அதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்திருக்க வேண்டும். ஆனால் அதனை விடுத்து செயலாளர் தனக்குரிய பணிகளுக்கு மேலதிகமாக பதில் பணிப்பாளராகவும் பணியாற்றி வருகிறார். இவ்வாறான நடைமுறை இலங்கையில் எந்தவொரு வலயத்திலுமே இல்லை.

மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர் ஓய்வு பெற்றுச் செல்கிறார் என்பது வடமாகாண கல்வி அமைச்சர் உட்பட அதிகாரிகள் அனைவருக்கும் நன்கு தெரிந்தவிடயம். அவ்வாறு இருந் தும் அவர்கள் அந்த வெற்றிடத்துக்கு உரிய மற்றொரு பணிப்பாளரை இது வரை நியமனம் செய்திருக்க வில்லை. வடக்கில் கல்வித் துறையில் ஏற்கெனவே பல சிக்கல்கள் உள்ளன என்பது வடமா காண கல்வி அமைச் சருக்கும் நன்கு தெரியும். அவ்வாறிருந்தும் எதற்காக வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் பதவிக்கு ஒருவரை இது வரை நியமனம் செய் திருக்கவில்லை?

சில பிரச்சினைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளருடனும் மற்றும் சில பிரச் சினை களை கல்வி அமைச்சின் செயலா ளரு டனும் தொடர்பு கொண்டு பேசித் தீர்வு காண வேண்டும். அவ்வாறிருக் கையில் ஒருவர் இரண்டு பதவி களை யும் ஒரு சேர வகிக்க இயலாது.

எனவே முறையாக - நேர்மையாக வெற் றிடத்தை நிரப்புவதற் காக விண்ணப் பங் கள் கோரி நேர்மை யாக நேர்முகத் தேர்வு நடத்தி தகுதி யுள்ள பணிப்பாளரை உடனே நியமனம் செய்யுங் கள். வடக் கின் கல்வித் துறையை கீழ் நோக் கிக் கொண்டு செல்ல இடமளிக்க முடியாது - என்று ஜோசப் ஸ்ரா லின் மேலும் தெரி வித்துள்ளார். (ஓ-4)

### அலங்காரத் திருவிழா

ஏழாலை துர்க்காதேவி ஆலயவருடாந்தஅலங் காரத் திருவிழா எதிர் வரும்31ஆம்திகதிஆரம் பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள்நடைபெறும். எதிர்வரும்ஜூன்9ஆம் திகதி சங்காபிஷே கம் நடைபெற்று அம்பாள் வெளி வீதியுலா வருவ துடன்திருவிழாநிறைவு பெறும். (வ-9)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
01.04.1953

ஆண்டவன் அடியில்
04.06.2013

திதி: வைகாசி தேய்பிறை ஏகாதசி

உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான
உலகநாதர் இராஜதுரை
திருமதி பாக்கியம் இராஜதுரை அவர்களின்
அன்புப் புதல்வன்

**அமரர் இராஜதுரை சற்குணம்**


ஆண்டொன்று ஓடிப்போனது ஆறாத துயர் மட்டும் இன்னும் ஓயவில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும் அலை கொண்டுபோனாலும்
தெய்வமே எங்களோடு தான் நீர் என்றும் வாழ்ந்திடுவீர்
வருடங்கள் பல ஆனாலும்!

என்றும் நீங்காத உங்கள் நினைவுடன்:
திருமதி ஸ்ரீகாந்தி சற்குணம் (மனைவி),
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்,
மற்றும் உறவினர்கள். (48349) (4.6.3)

வீரபத்திரர் கோயிலடி,
உடுப்பிட்டி.



## 4 ஆம் ஆண்டு நினைவுதினம்



அமரர்
சுந்தரம் விநாயகமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்-
யா/சாவகச்சேரி
இந்துக்கல்லூரி)

பிறப்பு
10★10★1938

இறப்பு
08★06★2010

திதி:
அபரபக்க ஏகாதசி

அப்பா என்ற ஒரு சொல்லிற்கு
எத்தனை அர்த்தங்கள்
அத்தனையும் கண்டோம்
உங்களிடம் நாங்கள்
அவதிப்படாமல் வாழ
நீங்கள் உங்கள்
கனவுகளைத் தியாகம் செய்தீர்கள்
விநாயகமூர்த்தியர் காலம் போல் இல்லை
கலட்டி விநாயகன் பக்தர்கள் சிலர்
முணுமுணுக்கக் கேட்டோம்
உங்களால் ஏற்பட்ட இடைவெளிகள்
இன்னும் நிரப்பப்படவில்லை—அப்பா
என்றும் உங்கள் இனிய நினைவுகளை
கனத்த இதயத்துடன் நினைவு கூருகிறோம்.


மீசாலை வடக்கு,
மீசாலை.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்



## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் விசுவலிங்கம் - ஆசாரியார் (கம்மாலை)



சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விசுவலிங்கம் ஆசாரியார் (கம்மாலை) 23.05.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருவதுடன், தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். (சி/14061)(7.6.3)

தகவல்: மு.அரியரத்தினம் (CTB)

### தியாகராசா திருச்செல்வம்(பென்ஷர் செல்வர்)



உடுப்பிட்டி, இலக்கணா வத்தை யைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா திருச்செல்வம் 21.05.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2014) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலக்கணாவத்தை, உடுப்பிட்டி.
021 300 6757

தகவல் :
(சி/14059)(7.6.3) குடும்பத்தினர்.

### இந்திரனேஸ்வரஐயர் சண்முகசர்மா



யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரஐயர் சண்முகசர்மா 22.05.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியம்மாவின் அன்புக் கணவரும், லலிதாஷக் குருக்கள் (கனடா), சிக்கலா மாலினி (திருச்சி), காலஞ்சென்ற இரத்தினதாஷசர்மா மற்றும் காயத்திரிதாஷ சர்மா (வத்தளை), சுகிதாவுசர்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தவல்லி (கனடா), ரவீந்திரக்குருக்கள் (திருச்சி), வரலக்ஷ்மி, சாருமதி (வத்தளை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2014) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது வத்தளை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொழும்பு-15, மாதம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 180, வெலியமுன வீதி,
ஹேகித்த, வத்தளை.
011 293 6766

தகவல் :
ச.லலிதாஷக்குருக்கள்
(மகன்) (45556)(7.6.3)



## மரண அறிவித்தல்

### நடராஜா கோணசலிங்கம் (கோனேஸ்-திருநெல்வேலி)



யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை(Toronto) வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கோணசலிங்கம் (கோனேஸ்) 18.05.2014இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா- புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்- இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், ஸ்ரீகுமாரி அவர்களின் அன்புக்கணவரும், ஸ்ரீதரன் (பாபா), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயராணி(கனடா), காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் பால கிருஷ்ணன்(கனடா), வசந்தமல்லிகா(இலங்கை), காலஞ்சென்ற நளாயினி (நயினா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரஞ்சிதமலரின் அன்பு மைத்துனரும், மயூரன் (சுவிஸ்), தனுஷா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாயா, லாரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.05.2014) சனிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை (கனடா நேரப்படி) 4164 Sheppard Avenue East Scarborough இல் இருக்கும் Ogden Funeral Homos இல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 25.05.2014 மு.ப. 10 மணி-12 மணி வரை (கனடா நேரப்படி) இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 12.30 மணி-1 மணி அளவில் 256Kingston Rd. Toronto இல் அமைந்திருக்கும் St.Johns Norway Cemetory & Crematerium இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(48353)(3.6.4)

தகவல்: மருமகள்- செந்தூரன் ஜெயவாணி
(Fashion Beauty Corner) 077 353 0691

தொடர்பு: ஸ்ரீதரன் (மகன்) 416 265 8733

# நரேந்திர மோடியின் பதவியேற்பை தமிழக எம்.பிக்கள் புறக்கணிப்பு

நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வைப் புறக்கணிக்க தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

மோடி பிரதமராக பதவியேற்கும் விழாவில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்பது உறுதி என்பதால் தமிழகத்தில் அ.தி.மு.கவின் 37 நாடளுமன்ற உறுப்பினர்கள், பா.ம.கவின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என 38 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த விழாவை புறக்கணிக்க உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

நரேந்திர மோடி எதிர்வரும் 26 ஆம் திகதி டெல்லியில் பிரதமராக பதவியேற்க உள்ளார். அந்த விழாவில் சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்கிறார். ஆனால் தமிழர்களைக் கொன்று குவித்த மகிந்த ராஜபக்ஷவை அழைக்கவே கூடாது என்று தமிழக அரசும் தமிழக அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. பாரதிய ஜனதாவின் கூட்டணிக் கட்சியான ம.தி.மு.க., பா.ம.க. ஆகியவையும் ராஜபக் ஷவை அழைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. தமிழகத்தில் பா.ஜ.க. சார்பில் வென்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான பொன். ராதாகிருஷ்ணன் மட்டும் மோடி பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளவுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற)


## விற்பனைக்கு

வெண்கிளுவங் கதியால் விற்பனைக்குண்டு. (48363) (7.6.3)

தொடர்பு: 077 104 0992, 077 473 0722

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் மேற்கு வாகையடி வீதியில் 4 ½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. (48373) (10)

தொடர்பு: 077 844 9687

## மணமகள் தேவை

4.10.1984இல் பிறந்த R.C MBBS Dr. திருவோணம், கிரக பாவம் 39¾ உயரம் 5' 8" என்பவருக்கு MBBS, Dr. ஆசிரியர், எஞ்சினியர், பட்டதாரி BSc தகுதியுடைய மணமகள் தேவை.

சாமிநாதன் திருமண சேவை (48362) (7.6.3)

பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 011 344 3929

## கார் விற்பனைக்கு

பாவனையில் உள்ள 19- தொடரிலக்கமுள்ள Power Stearing, AC யுடன் உள்ள FORD LASER கார் விற்பனைக்கு உண்டு. (48376) (10)

தொடர்பு: 077 392 7146

வெள்ளவத்தை அருள்மிகு நாகபூசணி அம்மன் க்ஷேத்திரம்
நாகபூசணி அம்மா அவர்கள் யாழ் வருகிறார்

திருமணம், கல்வி, தொழில் போன்ற தடைகள், நோய், நாகதோஷம், குழந்தைப் பேறின்மை, ஏனைய துன்பம் உள்ளவர்கள் வந்து அருள் வாக்கு கேட்கலாம்.

திகதி : 24.05.2014 இலிருந்து 26.05.2014 வரை
நேரம் : முற்பகல் 10.30- 12.00 மணிவரை
மாலை 4.30 - 6.00 மணிவரை

26.05.2014 அன்று அன்னதானம் நடைபெறும்.

யாழ் ஆலய முகவரி: ஞானவைரவர் ஆலயம்
2ஆவது ஒழுங்கை,
கலாசாலை வீதி, (கலா மன்றம் முன் ஒழுங்கை)
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 077 601 2225

(சி/14979) (10)

## (றூம் போய்) Room Boy உடன் தேவை

ஹோட்டலில் வேலை செய்த அனுபவம் உடையவரும் பழக விரும்புபவரும் விண்ணப்பிக்கலாம். ஆட்டோ லைசன்ஸ் இருந்தால் முன்னுரிமை. நல்ல சம்பளம் வழங்கப்படும். (48365) (10)

தொடர்பு

077 717 2039, 071 856 5375


## மரண அறிவித்தல்

### இராஜகுணநாயகம் ஜெகநாதன்



கொல்லங்கலட்டி மடத்தடியைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகுணநாயகம் ஜெகநாதன் நேற்று (23.05.2014) வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜகுணநாயகம் - புவனேஸ்வரி தம்பதியினரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், யோகலட்சுமியின் (ஆசிரியை, சென். அன்ரனீஸ் ஆண்கள் கல்லூரி, கொட்டாஞ்சேனை, கொழும்பு) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஈஸ்வரநாயகி (கொல்லன் கலட்டி), விஜயநாயகி மற்றும், ஜெகநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேல்முருகானந்தன் (கொல்லங்கலட்டி), ஸ்ரீஸ்கந்தராசா (பிரான்ஸ்), கலைவாணி (ஆவரங்கால்), வரதரசா (சுவிஸ்), விஜயலட்சுமி (அவுஸ்திரேலியா), தியாகராசா (டென்மார்க்), தனலட்சுமி (மீசாலை) ஆகியோரின் மைத்துனரும், துவாரகன், துஷ்யந்தி, கபிலன், விஷ்ணு, மதுரா, அபிநயா, பிரியங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு தகனக்கிரியைகள் கல்கிசை மயானத்தில் நாளை (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: யோகலட்சுமி (மனைவி),
(ஆசிரியை, சென்.அன்ரனீஸ் ஆண்கள் கல்லூரி,
கொட்டாஞ்சேனை, கொழும்பு) 0774388192

(48370)

## மரண அறிவித்தல்

### தனரட்ணம் எட்வின் தனறோசான்

(எழுதுவினைஞர், புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம், சுண்டுக்குளி)



யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட தனரட்ணம் எட்வின் தனறோசான் நேற்று (23.05.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் N.R. தனரட்ணம் (இளைப்பாறிய சாலை முகாமையாளர் - காரைநகர்)- நித்தியானந்தராணி தம்பதியரின் அன்பு மகனும், திருமதி தயாளினி சுரேந்திரன் (ஆசிரியை- யா/ புனித பெனடிக்ற் வித்தியாலயம்), ஜோ.தனரஞ்சன் (இலங்கை போக்குவரத்துச் சபை-கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பசில் சுரேந்திரன் (வவுனியா- கச்சேரி), பிறேமமாலினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.05.2014) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, ஏழாலை புனித இசிதோர் ஆலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 3289

(48366) (10.6)



நான்கு கிலோ நிறையுடைய டைனமைட் கரல் 30 மற்றும் அதற்கு பயன்படுத்தும் 300 டெடனேட்டர்களுடன் ஒருவர் திருகோணமலை உப்புவெளிப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை திருகோணமலை - சாம்பல் சந்தி வீதி பகுதியில் வைத்தே குறித்த சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளுக்காக இவை கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும், சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-10)

# இராணுவத்தினரின் நினைவுக் கற்களை அழிக்காது வைத்திருந்தவர் பிரபாகரன்

### ஆனால் இறந்தவர்களை நினைவுகூரத் தடுக்கிறது இராணுவம் வடமகாண சபையில் ஜங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 24

தமிழீழவிடுதலைப்புலிகள் இராணுவத்தினரிடமிருந்து நிலங்களை மீட்டெடுத்தபோது, அங்கு காணப்பட்ட இராணுவத்தினரின் நினைவுக்கற்களை அழிக்கக்கூடாது என்று தலைவர் பிரபாகரன் உத்தரவிட்டிருந்தார். ஆனால், போர் முடிவுக்கு வந்தவுடன் மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்த நினைவு நடுகற்களையெல்லாம் இராணுவம் இடித்து அழித்தது. அஹிம்சை ரீதியாகப் போராடிய திலீபனின் நினைவுத் தூபியைக்கூட விட்டு வைக்கவில்லை.

இப்போது இறந்த மக்களை நினைவு கூருகின்ற நிகழ்ச்சிகளைக்கூடப் புலிகளின் நினைவு என்று சொல்லித் தடைவிதித்திருக்கிறது. ஆனால், நினைவு நடுகற்களை இடித்தழிப்பதன் மூலமோ, அல்லது நினைவு தினங்களைக் கடைப்பிடிப்பதற்குத் தடைவிதிப்பதன் மூலமோ மக்கள் மனங்களில் இருக்கும் நினைவுகளை ஒருபோதும் அழித்துவிட முடியாது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன்.

வடக்கு மாகாண சபையின் ஒன்பதாவது அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற போது முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்ச்சி இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றிய போதே பொ.ஜங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் எமது உறவுகள் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூரும் நாள். இந்த நாள் என்பது ஈழத் தமிழ்மக்களோ, உலகத் தமிழர்களோ மாத்திரம் அல்லாமல் பூமிப்பந்தெங்கும் பரந்து வாழுகின்ற மனித நேயமுள்ள அனைவரும் நினைவில் வைத்திருக்கும் நாள். ஆனால், கொல்லப்பட்ட எமது உறவுகளை நினைவுகூரும் இந்தத் தினத்தைக் கடைப்பிடிப்பதற்கு இலங்கை அரசு தடை விதித்திருக்கிறது.

மே 18 விடுதலைப்புலிகளின் தினம் அல்ல. வீரச் சாவடைந்த விடுதலைப்புலிகளைப் பிரத்தியேகமாக நினைவுகூருகின்ற நாள் நவம்பர் 27 ஆம் திகதி தான். மே 18, இந்தக் காலப் பகுதியில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட அனைத்து மக்களுக்குமான பொது நினைவு நாள். நினைவுநாள்களில் அஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்துவதும், பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதும் எமது பண்பாட்டின் கூறுகளில் ஒன்று. இவற்றுக்குத் தடைவிதிப்பதன் மூலம் அரசு எமது பண்பாட்டு உரிமைகளையும்; பறிக்க ஆரம்பித்திருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக் கணக்கான எமது மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்று புதைக்கப்பட்டார்கள். அங்கு புதைக்கப்பட்டது வெறும் சடலங்கள் அல்ல. நம்பிக்கைகளின் விதைகள். எதிர்காலத்தில் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வோம் என்ற அந்த நம்பிக்கை விதைகள் ஒருபோதும் வீண் போகாது. ஆனால், முள்ளிவாய்க்காலில் அரசு விதைத்தது பேரினவாத வினை. அந்த வினைக்கான அறுவடையை அரசு எதிர் கொள்ளும் காலம் வெகுதொலை வில் இல்லை"- என்று தெரிவித்தார். (ற-5)

# சைவ உயர்பீட விசேட ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், மே 24

சைவாலயங்களில் தமிழ் வேதத்திற்கு உரிய இடம் வழங்கல் தொடர்பான சைவ உயர் பீட விசேட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்து சமய பேரவைத் தலைமைச் செயலகத்தில் பி.ப 3 மணிக்கு இந்த ஆய்வரங்கு நடைபெறவுள்ளது என்று பேரவையின் செயலாளர் சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

சிவஸ்ரீ ச.சோமஸ்கந்த குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் சைவாலயங்களில் தமிழ்வேதம் சிறப்புற ஒலிப்பதற்கேற்ற நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படவுள்ளது என்றும், அன்றைய தினம் பி.ப 5 மணிக்கு நிர்வாக சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது என்றும் அதில் நிர்வாக சபை உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வில் இந்தியாவிலிருந்து வந்துள்ள ஸ்ரீமத் வடவன்பட்டி குருநாதசுவாமிகளின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது. (ற-10)

## மரண அறிவித்தல்

### முத்துத்தம்பி ஏரம்பு

(ஓய்வுபெற்ற நில அளவையாளர் - மீசாலை வடக்கு)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு சொய்சாபுரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி ஏரம்பு 21.05.2014 புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், ராகுலன், குருகுலன், அமுதா, குமுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.05.2014 புதன்கிழமை சொய்சாபுர மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேற்படி அறிவித்தலை காலதாமதமாகத் தெரியப்படுத்துவதற்கு மன்னிக்கவும்.

வயற்கரை வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(C/14067) (10)

தகவல்:
மு. செல்லத்துரை குடும்பம்
(சகோதரர்)

# த. தே. ம. முன்னணியின் கிளிநொச்சி அமைப்பாளர் கைது

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் நேற்று இரவு 10.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பயங்கரவாததடுப்புப்பிரிவு என்று அறிமுகப்படுத்தியவர் களால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் செயலாளர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

பரந்தனில் அவரது விட்டிற்குச் சென்ற குறித்த நபர்கள் தம்மை பயங்கரவாதத்தடுப்புப்பிரிவினர் என்று அறிமுகப்படுத்தியுள்ளனர். அத்துடன் ஜெகதீஸ் வரனை விசாரணைக்காக அழைத்துச் செல்வதாகக் கூறி அவர்களது வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். எனினும் கைது செய்யப் பட்டுள்ளமை தொடர்பாக எந்த ஆவணங்களையும் அவர்கள் வழங்க வில்லை. இதுகுறித்து சம்பந் தப்பட்ட அதிகாரிகளுடன் நாம் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம் என்றும் கஜேந்திரன் மேலும் தெரிவித்தார்.

நாளை மறுதினம் கிளிநொச்சி கச்சேரிக்கு முன்பாக தமிழ்த் தேசய மக்கள் முன்னணி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்திருந்தது. இதற்கான அறிவித்தல் அறிக்கையை கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரான ஜெகதீஸ் வரன் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மஹிந்த

ஜனாதிபதி எனக்கனுப்பிய அழைப்பைத் தெரியப்படுத்தியமைக்கு நன்றி.

எமது அமைச்சர் குழாமுடன் பேசியதன்பின் இந்தப் பதிலை உங்களுக்கு அனுப்புகின்றேன்.

ஸ்ரீ நரேந்திர மோடியின் வரலாற்றுப் புகழ் பெற்ற தேர்தல் வெற்றியானது இலங்கை அரச தலைவர்களிடத்தில், வட மாகாணத்துடன் கூட்டுறவையும் ஒருங்கிணைந்து செயற்படும் தன்மையையும் எழுப்பியுள்ளமை நல்லதொரு தருணமே.

வடமாகாண மக்களின் சொல்லொண்ணாத் துயரங்கள், வடமாகாணசபையை இயங்கவிடாது ஏற்படுத்தப்பட்ட தடைகள் இவற்றின் மத்தியில் இந்தக் கூட்டுறவுச் சிந்தனையானது வரவேற்கத்தக்கதே. எனினும் உங்களுடைய அன்பான அழைப்பை ஏற்க முடியாதிருப்பதற்காக வருந்துகின்றேன்.

முக்கியமாக அவ்வாறு ஏற்காததற்குக் காரணம் கொழும்புக்கும் வட மாகாணத்திற்கும் இடையில் மிக வலுவான ஐக்கியம் இருப்பதாக அது எடுத்துக்காட்டக்கூடும் என்பதேயாகும்.

எனினும் வடமாகாண மக்கள் மத்தியில் தொடர்ந்து நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் மக்களைப் பதற்றத்துடன் வாழவே வழி செய்து வருகின்றார்கள்.

இவ்வாறான அழைப்பை நான் ஏற்றுக்கொண்டால் உண்மை நிலையை மறைத்து முகமனுக் காக ஏற்றுக்கொள்வதாக அது அமையும்.

இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதர் ஊடாக இந்தியப் பிரதமராகப் பதவியேற்கும் ஸ்ரீ நரேந்திர மோடிக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களை நான் ஏற்கனவே அனுப்பியுள்ளேன் என்பதைத் தெரியத் தருகின்றேன்.

உங்களுடைய அன்பார்ந்த அழைப்பால் பிரதிபலிக்கப்படும் நல்லெண்ணமும் ஒருமைப்பாட்டு உணர்வும் எமக்குள் தொடரும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அவ்வாறு தொடர்வதால்தான் வட மாகாண மக்களின் தேர்தல் எதிர்பார்ப்புக்கள் நடைமுறை படுத்தப்படும் என்பது மட்டுமன்றி எமது மக்களின் அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படும் - என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-5)

### இந்தியா

மறுப்பு தெரிவித்தமை நியாயமான ஒரு நிலைப்பாடாகும். வடக்கில் மாகாணசபை நடப்புகள் சுமூகமான முறையில் 13ம் திருத்தத்தின்படி நடைப்பெற்று இருக்குமானால், முதல்வர் ஜனாதிபதியுடன் கரங்கோர்த்து புதுடில்லி சென்றிருக்க முடியும்.

ஆனால், வடக்கில் மாகாண செயலாளரைகூட நியமிக்க முடியாத முதல்வர் விக்னேஸ்வரன் இலங்கை ஜனாதிபதியின் குழுவில் எப்படி செல்ல முடியும்?. எனவே வடக்கு முதல்வர் இன்று இலங்கை அரசின் அழைப்பை ஏற்காமைக்கு இலங்கை அரசே முழுபொறுப்பேற்க வேண்டும்.

தெற்காசிய அரச தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் அதேவேளையில், பிறிதொரு மட்டத்தில் விசேட ஒரு விருந்தினராக வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் கலந்து கொள்ளலாம். அவரை இந்திய அரசுதான் அழைக்க வேண்டும். இத்தகைய அழைப்பு விடுக்கப்பட முன்னுதாரணம் இருக்கின்றதா என்று தேடத் தேவையில்லை.

வடக்கு மாகாணசபை உருவாக வழியேற்படுத்தியதே, இலங்கை- இந்திய ஒப்பந்தம் என்பதால் இத்தகைய அணுகுமுறை கையாளப்படலாம். இதன்மூலம் தெற்காசிய ஒத்துழைப்பு நோக்கில் இலங்கை ஜனதிபதியை அழைக்கும் இந்திய அரசு, அதேவேளையில் இலங்கை தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் தமக்குள்ள கடப்பாட்டையும் தெளிவுபட வெளிப்படுத்தலாம்.

எனவே புதிய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ள விசேட ஒரு விருந்தினராக வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனை இந்திய அரசை கொண்டு நேரடியாக அழைக்க வைக்கும் முயற்சியில் தமிழக தலைவர்கள் இந்த கடைசி தருணத்திலாவது ஈடுபட வேண்டும்"- என தெரிவித்துள்ளார். (த)

### பிரதேச

கமளித்தார்.

இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு இணைவதால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு அவர் எடுத்துரைத் தார். ஒரு சில பிரதேச செயலாளர்கள் இவ்வாறான நடவடிக்கையைத் தம்மால் முன்னெடுக்க முடியாதென்று சுட்டிக் காட்டியபோதும், அரச அதிபர் அதனை முன்னெடுக்கலாம் என்று தெரிவித்ததுடன், கிராம சேவையாளர்கள் ஊடாக இலகுவாக முன்னெடுக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு, ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் செல்லும் இராணுவத்தினர், தொண்டர் படையணிக்கு ஆள்களைத் திரட்டித் தருமாறு கிராம சேவையாளர்களைக் கோரவுள்ளனர். அத்துடன் ஆள்களைத் திரட்டுவதற்காக இது தொடர்பான துண்டுப் பிரசுரமும் இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு இராணுவத்தினர் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

### மஹிந்தவுக்கு

வெளிநாட்டுத் தலைவர்களின் டெல்லி வருகையை வெளியுறவுத்துறை உறுதி செய்துள்ளது.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்புவிடுத்துள்ளது குறித்து இந்திய வெளியுறவுத்துறை விளக்கமளித்துள்ளது. நெருங்கிய நட்புநாடு என்ற முறையில் இலங்கைக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண முதல்வரை அழைத்து வருவது மஹிந்த ராஜபக்ஷவின் விருப்பத்திற்கு உட்பட்டது என்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. (ற)

### அடுத்த

ருந்த போதும், தேர்தல் முடிவுகள் அரசுக்கான மக்களின் ஆதரவு கணிசமான அளவு குறைந்துள்ளதை காட்டுகின்றது என்று அரசியல் நோக் கர்கள் கூறியிருந்தனர். இந்தநிலையில் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்துவது சிறந்தது என்று அரச தலைமை எண்ணுகின்றது என்றும் தெரியவருகின்றது. சரத் பொன்சேகாவின் கட்சியின் எழுச்சி குறித்தும் அரசு கவனம் செலுத்தியுள்ளது. இம்முறை நடைபெற்ற தேர்தல்களில் பொன்சேகாவின் கட்சி கணிசமான அளவு வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியிருந்தது. இது தொடருமாயின் அந்தக் கட்சியின் வாக்கு வங்கி இன்னும் அதிகரிக்கும் என்றும் அரசு கவலை கொண்டுள்ளது. அதனால் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்துவது சிறந்தது என்றும் கருதுகின்றது.

அத்துடன், சரத் பொன்சேகாவின் கட்சியின் எழுச்சி குறித்தும் அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டியிருந்தார். ஆயினும் 2010 நவம்பரிலேயே அவர் பதவியேற்றார். அதன்படி அவரது தற்போதைய பதவிக்காலம் 2016 நவம்பரிலேயே முடிவடைகிறது. தற்போதைய சட்ட ஏற்பாடுகளின் படி, 2014 நவம்பருக்குப் பின்னர் எச்சமயத்திலும் - முற்கூட்டியே - புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுக்கலாம். அப்படி முற்கூட்டியே தேர்தல் அழைப்பு விடுக்கப்பட்டு, அதிலும் அவரே வெற்றியீட்டுவாராயின் அதற்கு அடுத்து வரும் நவம்பர் மாதம் வரை அவர் தற்போதைய பதவிக் காலத்தைத் தொடர முடியும். அதாவது 2014 நவம்பருக்குப் பின்னர் - 2015 நவம்பருக்கு முன்னதாக - ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுத்து, அதில் வெற்றிபெறுவாராயின், 2015 நவம்பர் வரை தற்போதைய பதவியில் தொடர்ந்து விட்டு, 2015 நவம்பரில் இருந்து புதிய பதவிக் காலத்தை அவர் ஆரம்பிக்க முடியும்.

இந்தக் காரணங்களால் ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு இறுதிக்குள் அறிவித்து தேர்தலை ஜனவரி மாத இறுதிக்குள் நடத்துவதற்கு அரச தலைமை முடிவெடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

### காணி

யாடல் ஒன்று நேற்று யாழ்பாடி விடுதியில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பொதுச் செயலாருமான மாவை சேனாதிராசா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செல்வராசா கஜேந்திரன் மற்றும், மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீள்குடியேற்ற அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் போராட்டத்தை நடத்துவது தொடர்பாக இங்கு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆலோசனை தெரிவித்த போது, போராட்டத்தை காலம் தாமதிக்காமல் முன்கூட்டியே நடத்துமாறு அங்கு வலியுறுத்தப்பட்டது. இதற்கமைவாக எதிர்வரும் ஜீலை மாதம் இதனை நடத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக அடுத்த மாதம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு திகதி அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-14)

### சர்வதேச

போதே. இந்தக் கோரிக்கை விடுக்கப்பட வேண்டும் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஐந்து வருடங்கள் ஆனாலும், மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பானவர்கள் இது வரை நீதியின் முன்நிறுத்தப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியாவுக்கான இயக்குநர் குமார் வேலத் தெரிவித்துள்ளார்.

போர் குற்றங்கள் மற்றும் இதர குற்றங்களை புரிந்தார்கள் எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருப்பவர்களை சட்டத்தின் முன்னிறுத்தி நடவடிக்கை எடுக்க இலங்கை தவறி விட்டது. கடந்த மார்ச் மாதம், இலங்கை ஒரு சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் ஐ.நா வின் மனித உரிமைகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை உள்நாட்டு போரில் இரண்டு தரப்பினராலும் புரியப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில், ஐ.நா. வின் மனித உரிமைகள் ஆணையாளர், பொருத்தமான நிபுணர்களின் துணையுடன் விரிவான விசாரணைகளை நடத்த வேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டிருந்தது.

ஆனால் இந்த ஐ.நா.வின் விசாரணைக்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா பொதுச் செயலாளர் பான்கீ மூனிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

### வவுனியாவில்

மன் (வயது -23) என்ற இளைஞரே பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப் பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளை மீள உருவாக்க முயற்சித்ததாக கூறி வவுனியா, நெடுங்கேணி பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டதாகக் கூறப்படும் தேவிகனின் வாகன சாரதியாக குறித்த இளைஞர் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் வவுனியா பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. (ஐ-402)

### போர்க்

யேற்றம் தொடர்பாக அரசியல் கட்சிப்பிரமுகர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் நேற்று யாழ்பாடி விடுதியில் நடைபெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தொழிலாளர்கள், இடம் பெயர்ந்த மக்கள், காணாமல்போனவர்களுடைய பிரச்சினைகளை முன்வைத்து தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் பல்வேறு செயற்திட்டங்களையும் போராட்டங்களையும் வடக்கு கிழக்கு மட்டுமல்லாது தென்னிலங்கைப் பகுதிகளிலும் நடத்தி வருகிறது.

போர்க்காலத்தின் பின்னர் வடக்கில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதன் காரணமாக மக்களுக்கான முக்கிய பிரச்சினைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகிறோம். ஆனால் வடக்கில் போர்ப்பாதிப்புக்களுக்கு மேலாக அதேகாலத்தில் எதிர் கொண்ட பிரச்சினைகளுக்க அதிகமாக மக்கள் இன்னும் பயங்கரமான சூழ்நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நிலையில் போர் முடிவடைந்து விட்டது .வடக்கில் பல அபிவிருத்திகளைக் காணுகின்றோம். வடமாகண சபை உருவாக்கத்துக்கான சந்தர்ப்பம் என்பன மஹிந்தவின் ஆட்சியில் இருந்தாலும் கூட மக்களுடைய வாழ்க்கையில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை. நாளுக்கு நாள் பல விதமான அச்சுறுத்தல்களையும் இராணுவத்தினுடைய ஆக்கிரமிப்பையும், மக்களுடைய காணி சுவீகரிப்பையும் நாங்கள் பார்க்கக் கூடியதாக வுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் யாழில் காணிப்பிரச்சினை, இந்திய மீனவர் அத்துமீறல், மீள்குடியேற்றம் என்பவற்றை வலியுறுத்தி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தோம். ஆனால் இராணுவத்தின் அச்சுறுத்தல் காரணமாக போராட்டத்தில் பலர் பங்கு பற்றவில்லை

மகிந்தவுடைய ஆட்சியில் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. இராணுவத்தினுடைய அட்டகாசம், காணி சுவிகரிப்பு, எமது உயிர்களுக்காக நாங்கள் செய்ய வேண்டிய கடமைகளும் தடுக்கப்படுகின்றன.

இந்திய மீனவர்களது வருகையால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மீனவர் பேச்சும் மழுங்கடிக்கப்படுகின்றன. இந்த சூழ்நிலையில் இருந்து எப்படி மீள முடியும் என்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அரச பயங்கர வாதத்தில் இருந்து வடகிழக்கு மக்களது ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்க கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" - என்று தெரிவித்தார். (ற-14)

### மர்மப்பொருள்

தெற்கு நாகர் கோவில் வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் மிருசுவில், தவசிகுளத்தைச் சேர்ந்த சந்திரகுமார் பிரதீபன் (வயது -20) என்ற இளைஞனே படுகாயமடைந்தார். கடந்த 2012 ஆம் ஆண்டு அப் பகுதியில் மீள் குடியமர்வு இடம்பெற்ற பின்னர் வீடுகள் அமைக்கும் பணியை மீளக்குடியமர்ந்தோர் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு புதிதாகக் கட்டப்படும் ஒரு வீட்டில் மேசன் தொழிலாளியாக வேலை செய்தவர் நீர்மட்டம் எடுத்து கொண்டிருந்த போது காலில் பட்ட மர்மப்பொருள் வெடித்துள்ளது. இதனால் அவரது கால் பாதம் சிதறியது.

இவர் கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப் பட்டார். விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ-9)

### இந்தியாவிலிருந்து

யில் படகு மூலம் இலங்கை திரும்பியுள்ளார்கள். கைது செய்யப்பட்டோரில் கணவன் மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் அடங்குவர்.

இவர்கள் மன்னார் கீரி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது என்றும், மேலதிக விசாரனைகளின் பின் குறித்த ஐவரும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர் என்றும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ஜெமில் தெரிவித்துள்ளார். (ற-56)

# பெண்கள் எறிபந்துப் போட்டியில் சம்பியனானது சுந்தரபுரம் சரஸ்வதி

வலி வடக்கு மே 24

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான எறிபந்துப் போட்டியில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலம் வடக்கு மாகாணச் சம்பியனானது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலய மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வவுனியா வடக்கு சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயமும் வவனியா வடக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.




சம்பியனான சுந்தரபுரம் சரஸ்வதி அணி

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலாம் மூன்றாம் சுற்றுக்களைச் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் 25:21, 25:13 புள்ளிகள் என வெற்றி பெற இரண்டாம் சுற்றைக் கனகராயன்குளம் மகா வித்தியாலயம் 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

ஆட்ட நிறைவில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் 02:01 என்ற சுற்றுக்கள் கணக்கில் வவனியா வடக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலயலத்தை வென்று மாகாண சம்பியனாகியது.

(த-86-23-400-422-433)

## வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம் மே 24

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழகம், அராலி ஏ.ஏல் இளைஞர் கழகம் ஆகியவை இணைந்து நடந்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துணைவி செனிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் துணைவி செனிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

இதில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'பி' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# நெல்லியடி மத்திய கல்லூரி அணி இரண்டாவது தடவையும் சம்பியன்




வெற்றிபெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி அணி

வலி.வடக்கு. மே 24

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான எறிபந்துப் போட்டியில் இரண்டாவது தடவையாகவும் நெல்லியடி மத்திய கல்லூரி மாகாணச் சம்பியன் ஆனது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோ.க.த.க. மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்ற போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியும் வவுனியா வடக்கு மாதர் பனிக்கர் மகிழம் குளம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றில் மாதர் பனிக்கர் மகிழம் குளம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயம் 25:21 என வெற்றி பெற்றது. அடுத்த இரண்டு சுற்றுக்களையும் நெல்லியடி மத்திய கல்லூரி 25:17, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கடந்த ஆண்டு பெற்ற தனது மூன்றாம் இடத்தை இந்த ஆண்டும் தக்கவைத்துக்கொண்டது.

(த-86-23-400-422-433)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம் மே 24

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழகம், அராலி ஏ.ஏல் இளைஞர் கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற வருகின்றன.

இன்று மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் துனணவி செனிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் 'பி' விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது. (த - 23)

★★★

யாழ்ப்பாணம் மே 24

சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையில் அராலி ஏ.ஏல் இளைஞர் கழகம் நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

பி.ப 3.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி இளைஞர் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★★★

யாழ்ப்பாணம் மே 24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 9பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைப்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மனோகாரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# 17 வயது கரப்பந்தாட்டம் நாளையும் மறுதினமும்

வலி.வடக்கு மே24

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே மாகாண மட்டத்தில் நடத்தப்படும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் நாளையும், மறுதினமும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை எதிர் வவுனியா கிடாய்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் மன்னார் கருங்கண்டல் மகா வித்தியாலயம்

முல்லைத்தீவு எதுகஸ்வெவ வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை எதிர் வவு னியா தர்மபால வித்தியாலயம்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி எதிர் வவனியா மாதர் பணிக்கர் மகிழங்குளம் சைவ வித்தியாலயம்..

இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியால்யம் மோதவுள்ளது.

(த-86)

# 19 வயதுக் கரப்பந்தில் மோதவுள்ள அணிகள்

வலி.வடக்கு மே 24

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே மாகாண மட்டத்தில் நடத்தப்படும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் இன்றும். நாளையும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி எதிர் மன்னார் பரியாரிக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்.

மன்னார் அல்மினா மகா வித்தியாலயம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

கிளிநொச்சி ஜெயபுரம் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

மன்னார் றிசாத் பதியுதீன் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா செட்டிகுளம்மகாவித்தியாலயம்.

முல்லைத்தீவு சம்பத்நுவர மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

வவனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு எகதுவஸ்வெள மகா வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மோதவுள்ளது.

இதேவேளை. நாளையும், நாளை மறுதினமும் முள்ளியவளை வித்தியாணந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் வவுனியா மடுக்கந்த மகா வித்தியா லயம்.

மன்னார் பெரிய குஞ்சுக்குளம் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி.

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் வவுனியா கனகராஜன்குளம் மகா வித்தியாலயம்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

வவுனியா ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம் எதிர் கிளி நொச்சி பளை மத்திய கல்லூரி.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு உடையார் கட்டுமகாவித்தியாலயம். இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை மோதவுள்ளது. (த-86-422)

# மைக்கல் ஹசி அதிரடியினால் டில்லியை வீழ்த்தியது மும்பை



மைக்கல் ஹசி பெற்ற அதிரடியான அரைச் சதத்தின் உதவியுடன் டெல்லி டேர்டெவில்ஸ் அணியை 15 ஓட்டங்களால் வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஏழாவது ஐ.பி.எல். கிறிக்கெட் சுற்றுப் போட்டி இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இப் போட்டியில் அணிகள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப், சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் கொல்கத்தா நைற் றைடர்ஸ் ஆகிய அணிகள் 'பிளே ஓவ்' சுற்றுக்கு தகுதி பெற்றுள்ள நிலையில் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாத மும்மை இந்தி யன்ஸ் அணிக்கும் டெல்லி டேர் டெவில்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டம் நேற்று இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி மும்பை இந்தியன்ஸ முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதனை அடுத்து மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக லென்டேல் சிம்மன்ஸும், மைக்கல் ஹசியும் களமிறங்கினர். இந்த ஜோடி டெல்லி அணியின் பந்துவீச்சுக்களை அடித்து நொருக்கி ஓட்டங்களைக் குவித்தது.

இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை கிடு கிடு என உயர்ந்தது. 8 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 25 பந்துகளில் 35 ஓட்டங்களை எடுத்த நிலையில் சிம்மன்ஸ் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து ஹசியுடன் அணித் தலைவர் ரோகித் சர்மா களம் புகுந்தார். இவரும் தம் பங்குக்கு அதிரடி காட்ட 12 பந்துப் பரிமாற்றங்களில் 120 ஓட்டங்களைத்தொட்டது மும்பை இந்தியன்ஸ். இச் சூழ்நிலையில் 33 பந்துகளில் 7 நான்கு ஓட்டங்கள் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 56 ஓட்டங்கள் பெற்ற ஹசி 'ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ரோகித் சர்மாவும் 30 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதனை அடுத்து பின் வந்த வீரர்கள் சோபிக்கத்தவறிய நிலையில் 19.3 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது மும்பை இந்தியன்ஸ் அணி.

பந்து வீச்சில் இம்ராம் தஹிர் 3 இலக்குகளையும், கடிவ் உனட்கட் 2 இலக்குகளையும், நடிம், பர்னல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் இலக்கையும் கைப்பற்றினர். மும்பை இந்தியன்ஸ் மூன்று வீரர்கள் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து 174 ஓட்டங்களை வெற்றி இலக்கை கொண்டு டெல்லி அணி களமிறங்கியது. அவ் வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக முரளிவிஜயும், கெவின் பீற்றர்சனும் களமிறங்கினர். ஒரு முனையில் பீற்றர்சன் அதிரடியில் இறங்க மறு முனையில் முரளி ஓட்டங்கள் பெறுவதில் பெரும் இடர்களை எதிர் நோக்கினார். ஆட்டத்தின் 8 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 8 ஓட்டங்களுடன் முரளி விஜய் வெளியேற்றப்பட்டார். அவரைத் தொடர்ந்து பீற்றர்சனும் 44 ஓட்டங்களுடன் வெளியேறினார்.


சிறிதுநேரத் தில் தினேஸ் கார்த்திக்கும் ஆட்டமி ழக்க ஜோடி சேர்ந்த மனோஜ் திவாரி யும், டுமினியும் நம்பிக்கை தரும் வகையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். திவாரி 31 பந்துகளில், 5 நான்கு, ஒரு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 41 ஓட்டங்களைப் பெற்று வெளி யேறினார். அடுத்து டுமினியுடன் இணைந்த யாதவ் ஓரளவு ஒத்துழைப்பு கொடுக்க டுமினி வாண வேடிக்கை காட்டினார். இதனால் டெல்லி அணி வெற்றி பெறக் கூடிய சூழ்நிலையும் காணப்பட்டது.

இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 25 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அதில் வெறும் 10 ஓட்டங்களே பெறப்பட்டன. இதனால் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 155 ஓட்டங்களைப் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது டெல்லி அணி.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்து வீச்சில் மர்சன்ற் லங்கே 2 இலக்குகளையும், கோபால், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றி னர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மைக்கேல் ஹசி தெரிவு செய்யப்பட்டார்.

(த-400)



## போராடித் தோற்றது ராஜஸ்தான்

கிங்ஸ் லைவன் பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் இறுதிவரை போராடி 16 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி.

7 ஆவது ஐ.பி.எல். கிறிக்கெட் சுற்றுப்போட்டி இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற 52 ஆவது ஆட்டத்தில் கிங்ஸ் லைவன் பஞ்சாப் அணியும், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. இதனடிப்படையில் பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய வீரேந்திர சேவாக் அதிரடியாக ஆடி 8 பந்துகளில் 18 ஓட்டங் களுடன் பெவிலியன் திரும்பினார்.


அடுத்துக் வோராவுடன் இணைந்த ஷேன் மார்ஷ் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி அணியை நல்ல நிலைக்கு கொண்டு வர முயற்சித்தார். இச் சூழ்நிலையில் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த வோரா 25 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். அடுத்து மார்சும், ஷாவும் இணைந்து ராஜஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கு தண்ணி காட்டினர். இச் சூழ்நிலையில் மார்ஷ் 40 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார்.

அடுத்து இணைந்த மில்லர், பெய்லி ஆகியோரின் அதிரடியால் 20 பந்துப் பரிமாற்றத்தில் 4 இலக்குகளை மட்டும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப் அணி. அவ் வணியின் வீரர்களான டேவிட் மில்லர் 29 ஓட்டங்களுடனும் கிரேக் பெய்லி 26 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

அடுத்து 180 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அவ்வணி சார்பாக ரகானே 23 ஓட்டங்களையும் சாம்சன் 30 ஓட்டங்களையும், பிரட் கொக் 31 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததுடன். ஜேம்ஸ் பலகினர் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் பட்டேல் 3 இலக்குகளையும் ரிஷி தவான், கரன்வீர் சிங் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் பாலாஜி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஷேன் மார்ஷ் தெரிவு செய்யப்பட்டார். (த-400)



# உலகக் கிண்ண உதைபந்துக்கு பாகிஸ்தானில் பந்துகள் தயார்

பிரேஸிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் பயன்படுத்தப்படும் உதைபந்துகள் பாகிஸ்தானில் தயாரிக்கப்படுகின்றன.

பிரேஸிலில் அடுத்த மாதம் உலகக் கிண்ண உதைபந்துத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதில் பயன்படுத்தப்படும் பந்துகளைத் தயாரிக்கச் சீனாவைச் சேர்ந்த நிறுவனாங்களுடன்ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆனால் அந்த நிறுவனாங்களால் பந்துகளைத் தேவையான அளவு தயாரித்து வழங்க முடியவில்லை. இதையடுத்து, இந்த ஒப்பந்தம் பாகிஸ்தானின் சியால் கோட் நிறுவனத்துக்குக் கிடைத்தது.

பிரெஞ்ச் லீக், சம்பியன்ஸ் லீக் போட்டிகளில், பங்கேற்கும் ஜேர்மனியின் பண்டஸ்லிகா அணிக்கு ஏற்கனவே இந்த நிறுவனம் பந்துகளைத் தயாரித்து வழங்கியுள்ளது.

இது தவிர, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3 கோடி எண்ணிக்கையிலான உதைபந்துகளை ஏற்றுமதி செய்கிறது. இது உலகின் மொத்த உற்பத்தியில் 40 சதவீதமாகும். (த)

## குஷியில் சிம்மோன்ஸ்

ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்கெதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியால் 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகள் இழப்புக்கு 156 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. பெய்லி அதிகபட்சமாக 39 ஓட்டங்களும், வோரா 36 ஓட்டங்களும், மார்ஷ் 17 பந்தில் 30 ஓட்டங்களும் எடுத்தனர்.

157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி ஒரு பந்துப்பரிமாற்றம் எஞ்சி இருந்த நிலையில் 3 இலக்குகள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.



லெண்டில் சிம்மோன்ஸ்

தொடக்க வீரர் லெண்டில் சிம்மோன்ஸ் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அவர் 61 பந்தில் 14 பவுண்டரி, 2 சிக்சர்களுடன் 100 ஓட்டங்கள் எடுத்தார். இந்த ஐ.பி.எல். தொடரில் எடுக்கப்பட்ட முதல் சதம் இதுவாகும்.

இதற்கு முன்பு மக்ஸ்வெல் 2 முறை 95 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்ச ஓட்டமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மும்பை அணியின் அசத்தல் வீரர் லெண்டில் சிம்மோன்ஸ் இது பற்றிக் கூறுகையில், 20/20 போட்டியில் இது எனது சிறந்த ஆட்டம். அதிலும் சதம் அடித்தமை மிகவும் சிறப்பு. இந்த ஐ.பி.எல். தொடரில் இதுதான் முதல் சதம் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. எந்தவித நெருக்கடியும் இல்லாமல் ஆடியதால் அதிரடியை வெளிப்படுத்த முடிந்தது.

அது மட்டுமல்லாது எனது ஆட்டத்தின் மூலம் மும்பை அணி வெற்றி பெற்றமை திருப்தி அளிக்கிறது. எங்களுக்கு பிளே ஓப் வாய்ப்பு இன்னும் இருக்கிறது என்று கூறியுள்ளார். (த)

## சவாலான போட்டி

இங்கிலாந்துக்கு எதிரான அனைத்துப் போட்டிகளும் சவாலாக அமையும் என எண்ணுவதாக இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,



அஞ்சலோ மத்தியூஸ்

சொந்த மண்ணில் விளையாடும் இங்கிலாந்து எப்போதும் சவால் மிக்க அணியாகும். கடந்த இருபதுக்கு இருபது போட்டியில் இங்கிலாந்து அணி சவாலாக விளையாடியது. அலஸ்டயர் குக்கும், ஜேம்ஸ் அன்டர்சனும் இங்கிலாந்து அணியில் இணைகின்றனர். இந்த இரண்டு வீரர்களும் மிகவும் அனுபவ மிக்கவர்கள். அவர்கள் இங்கிலாந்து அணிக்கு பாரிய பங்களிப்பு வழங்குவார்கள். இந்தப் போட்டி சவாலாக அமையும். அதற்கான தயார் நிலையில் நாம் உள்ளோம். அனைத்துக் கிரிக்கெட் தொடர்களும் எமக்கு முக்கியமானவை. உலகக் கிண்ணப் போட்டிகள் குறித்து தற்போது அதிக கவனம் செலுத்தவில்லை. எனினும் பங்குபற்றும் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். அடுத்த வருடம் மற்றுமொரு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. அது எமக்கு மிகுந்த சவாலானவொன்றாகும். எனினும் விளையாடும் அனைத்துப் போட்டிகளையும் முக்கியமானதாகவே கருதுகின்றோம். அனைத்துப் போட்டிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும் - என்றார். (த)

# மீண்டும் நஜம் சேத்தி

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக நஜம் சேத்தி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். நஜம் சேத்திக்கு எதிராக இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் ரத்துச் செய்தது. பெப்ரவரி மாதம் முதல் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் நஜம் சேத்தி தலைமையிலான நிர்வாகக் குழுவை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் கடந்த சனிக்கிழமை கலைத்ததுடன் முன்னாள் தலைவர் ஸாகா அஷ்ரப்பை புதிய தலைவராக நியமித்திருந்தது. ஸாகா அஷ்ரப்பைப் பதவியிலிருந்து நீக்கியமைக்கு முறையான காரணங்கள் எதுவுமில்லை என இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் தெரிவித்தது.

ஆனால் பாகிஸ்தானின் விளையாட்டுத்துறையை மேற்பார்வை செய்யும் மாகாணங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்கான அமைச்சு மேற்படி தீர்ப்புக்கு எதிராக பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. நீதியரசர் அன்வர் ஸஹீர் தலைமையிலான 3 நீதியரசர்களைக் கொண்ட குழாம் இம்மனுவை விசாரித்தது.

ஸாகா அஷ்ரப் மீண்டும் கிரிக்கெட் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டமையானது பாகிஸ்தான் கிரிக்கெட் துறையில் பாதகமான பல தொடர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது எனவும் பல மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தக்கூடியது எனவும் மேற்படி அமைச்சு நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

அதையடுத்து, இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்ததுடன், இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (த)

# ஐ.சி.சிக்கு திறமையில்லை

சூதாட்டம் குறித்து நடவடிக்கை எடுக்கும் திறமை ஐ.சி.சிக்கு இல்லை என பிரண்டன் மக்கலத்தின் சட்டத்தரணி கரேத் கலோவே தெரிவித்தார்.

கடந்த 2008 இல் இந்தியாவில் முதல் ஐ.பி.எல் இல் கொல்கத்தா அணிக்காக நியூசிலாந்தின் பிரண்டன் மக்கலம் விளையாடிய போது சூதாட்டத்தில் ஈடுபட இவரிடம் ஒருவர் அணுகியதாக, சர்வதேச கிரிக் கெட் சபையிடம் மக்கலம், வாக்கு மூலம் கொடுத்திருந்தார். (த)



புதிய முறையிலான
தேசிய ஆங்கில டிப்ளோமா
ஷாம்சனின் 24 புத்தகங்கள் கொண்ட இப் பயிற்சியில் இப்போது வயது வேறுபாடின்றி அனைவரும் இணையமுடியும்.
வீட்டிலிருந்தபடியே ஒவ்வொரு புத்தகத்திலுமுள்ள 250 பயிற்சிகளைசெய்து எம்மிடம் ஒப்படைத்தால் போதுமானது.
பயிற்சிநெறி முடிவில் அனைவரும் ஆங்கிலம் பேசமுடியும் என்பதை நாம் ஏற்கனவே எமது ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிசெய்துள்ளோம்.
பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வீட்டுப்பெண்கள் ஆங்கிலம் பேசவிரும்புவோர், வெளிநாடு செல்வோருக்கானது.
இலவசம் 20 புத்தகங்கள்
27.05.2014 இற்குமுன் பயிற்சியில் இணைவோருக்கு பயிற்சி கட்டணம் ரூபா 3000.00 மட்டுமே!
பயிற்சிநெறி முடிவில் "Diploma in English" Certificate வழங்கப்படும்.
(இலங்கை பூராகவுமுள்ள எந்த ஒருவரும் இணையமுடியும்)
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 33 13 077 621 4567

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் உடனடி வேலை வாய்ப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| HV ACடெக்னீசியன் | 10 பேர் | 1900 QR | ஷட்ரிங் காபென்டர் | 36 பேர் | 1200 QR |
| ரெலிகொம் டெக்னீசியன் | 03 பேர் | 2700 QR | டீசல் மெகெனிக் | 06 பேர் | 2000 QR |
| டோர் காபென்டர் | 10 பேர் | 1200 QR | கொங்கீறீட் மேசன் | 12 பேர் | 1200 QR |
| சுத்திகரிப்பாளர் (ஆண்கள்) | 20 பேர் | 900 QR | அசம்பல் டெக்னீசியன்ஸ் | 07 பேர் | 1600 QR |
| தொழிலாளர்கள் | 12 பேர் | 900 QR | சாரதிகள் | 02 பேர் | 1600 QR |
| டய்ல் மேசன் | 100 பேர் | 1400 QR | பெயின்டர்கள் | 150 பேர் | 1300 QR |
| எலக்ரீசியன் | 03 பேர் | 1500 QR | கை உதவியாளர்கள் | 81 பேர் | 900 QR |

கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம் தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி, உணவு இலவசம், ஒப்பந்த காலம் நீடிக்கப்படக் கூடியது. வேலை நேரம் எட்டு மணித்தியாலங்கள். உங்கள் சுயவிவரக்கோவை, கடவுச்சீட்டு, பாஸ்போட் Photo 8 என்பவற்றுடன் உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் Green Grass Hotel இல் காலை 9.00-2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: கெப்பிட்டல் ரெக்ருட்மன்ட் இன்டர்நெஷனல் (பி) லிமிட் டெட் (LL No. 2248)
No.130, 3/1, 3rd Floor, Grand pass Road, Colombo-14.
077 058 4658 (Vavuniya Lanka Voice)
077 952 7575 (Jaffna Lanka Voice)
(43312(7.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய
பயிற்சி நெறி
HND in PHARMACY
வயதெல்லை கிடையாது.
பகுதிநேரமாகப் படிக்கலாம்.
வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு.
LAVA HOSPITALS (48358) (7.6.3)
120, Temple Road, Jaffna.
(Tel : 077 316 4617/021 222 4333)


கணினி மலிவு விற்பனை
HP COMPUTER 19,750/ (FULL SET)
FREE - NK PHONE
ஒரு வருட உத்தரவாதம்
ST.ANTONY'S 187,K.K.S ROAD JAFFNA TOWN.
021-222-4865
0750698608

கனடா
தெளிவான கால வரையறை, படி முறைகள் பட்டவர்த்தனம்
எண்ணி 2½ மாதங்களில்
சட்ட ரீதியாக - வேறு நாடுகளில் இடைத்தங்கல் ஏதுமின்றி
நேரடியாக - வேகமாகப் பறக்க
விரைந்து வாருங்கள்
இலங்கையிலேயே எம்மிடம் மட்டுமே
மிகக் குறைந்த கட்டணம்.
7 நாள்களும் திறப்போம்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(C/14359)(7.6.3)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் சின்னத்துரை பற்பநாதன்

(புகையிலை வர்த்தகர்)



மலர்வு 20.03.1949 — உதிர்வு 24.04.2014

24.04.2014 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் சின்னத்துரை பற்பநாதன் அவர்கள் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் சிகிச்சை அளித்த வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் அனைவருக்கும் மற்றும் பிரிவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து துயரத்தைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (24.05.2014) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(C/14057)(7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.